தென்மொழி

உ. த. மு. க. மாநாட்டுச் சிறப்பிதழ்!

உ. த. மு. க. வில் உறுப்பினர் ஆகுங்கள்!

சுவடி: 18
ஓலை: 4-5

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை
உருபா 4-00

www.thamizham.net - Free E book No 7516

அதுதான் எனக்குத் திருநாள்!

(எடுப்பு)

அதுதான் எனக்குத் திருநாள்!
அதுவன்றிப் பிற யாவும் மனப்நோகும் வெறுநாள்!
(அதுதான்)

(தொடுப்பு)

எதுநாளில் தமிழர்கள் வாழ்வுரிமை கொண்டோராய
எந்தமிழ்த்தேன் மொழிபேணி, இனம்பேணி இருப்பாரோ
(அதுதான்)

(முடிப்பு)

புதுஆடை நெய்ப்பொங்கல் பண்ணியம் பலகாரம்
பூமாலை நறும்படையல் இவற்றிலென்ன சாரம்?
சிதையாமல் தமிழ்மானம் இனமானம் பேணும்
செழிப்புற்ற மறுமலர்ச்சி இருவிழிகள் காணும் (அதுதான்)

உலகெங்கும் சிதர்ந்தோடி உயிர்நைந்து வாடும்
உவப்பில்லா நிலைமாறிச் செந்தமிழர் கூடும்
நிலமெங்கள் நிலமென்ற தன்னுரிமை யோடும்
நிகழ்த்துகின்ற விழவன்றோ மகிழ்ச்சிப்பண் பாடும் (அதுதான்)

புலைமலிந்த நாகரிகம் புன்கயமைக் கலைகள்
போக்கறியாப் பணப்பெருக்கம் உயிர்மாந்தக் கொலைகள்
நிலைமாறி மக்களெலாம் அறிவு,மனம் வேட்கும்
நிறைவுற்ற நாளிலன்றோ பொதுமைநலம் பூக்கும்! (அதுதான்)

அறவியலைச் சாராத அறிவியல்முன் னேற்றம்
ஆருக்குப் பயன்நல்கும்? வெறும் பொய்ம்மைத் தோற்றம்!
திறமிலராய்க் கரவுளமும் காரறிவும் கொண்டே
தித்திரிப்பாய் வாழும்நிலை ஒழிந்திடுநாள் என்றோ (அதுதான்)

காதிரைச்சல் தூளிபடும் ஒலிபெருக்கிக் கத்தல்,
கலைக்கூத்தர் அரித்தெடுக்கும் மனத்தில்விழும் பொத்தல்,
காதிரைச்சல் வண்டியுலா — இவைஇல்லாப் பெருநாள்
உளம்அமைதி கொள்ளும்படி வாய்த்திடுமே ஒருநாள்
(அதுதான்)

புதைசாணிப் புழுக்களென நெளிகின்ற ஏழை
பொய்வாழ்க்கை நீங்கி நலம் மேலேறும் நாளை
எதிர்நோக்கிக் கிடக்கின்றேன்; எழுச்சிநிலை வந்தே
எல்லாமிங் கெல்லார்க்கும் என்றிடும்நாள் என்றோ (அதுதான்)

www.thamizham.net - Free E book No 7516

பாவாணர்க்குப் படையல்!

சென்ற ஆண்டு (15-1-81)
இதே பொங்கலின் மறுநாளன்று எம்
உயிர்ப்பாவலன் மொழிஞாயிறு
ஞா. தேவநேயப் பாவாணர்
அவர்களைக் காக்க 'தென்மொழி'
வெளியிட்டு வந்த நிலைப்பாட்டின் இறுதிப்பக்கத்தில்
'தென்மொழி இயக்க அமைப்பு மாநாடு' விரைவில்
சென்னையில் நடைபெறும்' என்றும் விளம்பரப்படுத்தி
வந்தோம். அதே இதழில் 90-ஆம் பக்கத்தில், நான்
பாவாணர் மேல் எழுதும் கொண்ட அந்நிலையை
செய்ப்பிக்கும் வகையிலும், கடந்த 7,8-11-81-இல்
நாள்களில், சென்னையில் நடந்த அமைப்பு
மாநாட்டில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்'
என்னும் ஓர் உண்மைச் செயலியக்கம் தோற்றுவிக்கப்
பெற்றதைத் தமிழ் மெய்யன்பர்கள் உணர்தல் வேண்டும்.

அதனையொட்டி, அவ்வியக்கத்தின் செயற்பாடுகள்
விரைவில் தொடங்க விருக்கின்றன. பாவாணர்
மறைந்த முதலாண்டு நினைவு நாளையொட்டி இந்த
உ.த.மு.க. தொடக்க விழாவைச் சிறப்பித்து வெளியிடப்
பெறுகிறது. எனவே, இவ்வியக்கத்தினையும், இச்
சிறப்பிதழையும் பாவாணர் திருவடிகளில்
படையலாக்கி, அவர் விட்டுச் சென்ற
பணிகளில் மேலும் கவனம்
செலுத்தி, உலகத் தமிழர் முன்-
னேற்றத்திற்கு என் வாழ்வினை
ஒப்படைக்கின்றேன்.

அன்பன்,

பெருஞ்சித்திரன்

www.thamizham.net - Free E book No 7516

பொதுமக்கள் நூல்நிலையத்திற்கான

யாழ்ப்பாண மாநகர முதல்வரின் வேண்டுகோள்!

97,000 பொத்தகங்களையும் கிடைத்தற்கரிய கையெழுத்துப் படிகளையும் உள்ளடக்கிய ஒரு பெருமை மிக்க கட்டடமான யாழ்ப் பாணப் பொதுமக்கள் நூல்நிலையத்துக்கு மனம்போனவாறாக நிகழ்த்தப்பட்ட அழிவே, ஒருகால் இத்தீவின் வரலாற்றில் இடம் பெற்ற மிகுந்த அவமானத்துக்குரிய துயர நிகழ்வாகவிருக்கலாம். சூன் முதல் கிழமையில் நகரத்தை எரியூட்டுதலுக்கும், தாக்குதலுக்கும் உட்படுத்திய, சட்டம் ஒழுங்கைப்பேண வேண்டிய பாதுகாவலர் களாலயே அவ்வழிவு நேர்ந்தது என்பதால் அத்துயரம் எல்லைகடந்த ஒன்றாகின்றது. வழிவழிப் பெருமையும் புகழும் மிக்க அறிஞர், அரசறிஞர் மற்றும தெய்வத்தன்மை பொருந்திய பெரியார்கள் வரிசைசக்கே அப்பெருமை சேரும்படியாக, இலங்கைத் தமிழர்களுக்கு ஆன்ம அறிவுப் பெட்டகமாக யாழ்ப்பாணம் புகழுடன் விளங்கி வருவது நன்கு அறியப்பட்டதே. என்றும் வாழும் புகழுடம்பு எய்தப் பெற்ற பல்லோருள்ளும் திருப்பெருந்திரு ஆறுமுகநாவலர், கலையறிவர் ஆனந்தா கே. குமாரசுவாமி, அருள் திருத்தந்தை ஞானப்பிரகாச அடிகளார், பெருமைமிகு பொன்னம்பலம் உடன்பிறப் பாளர்கள், தமிழ்த் தேசியத்தின் தலைவர்களான அமரர் பொன்னம் பலம், தந்தை சா. சே. வே. செல்வநாயகம், சிவயோகர் அடிகள் ஆகியோரின் பெயர்கள் அவ்வரலாற்று முன்னணியில் திகழ்கின்றன.

இந்த வழிமுறைகளுக்கு ஏற்புடையதான ஓர் உயர்ந்த தோற்றத்தை யாழ்ப்பாணம் பொதுமக்கள் நூலநிலையம் தனது ஐம்ப தாண்டுக் கால வரலாற்றில் எய்தியிருந்தது. அந்நிலையில், அண்மை யில் பண்பாட்டுப் படுகொலையான இக் காட்டு விலங்காண்டி நட வடிக்கை குறித்து நாகரிக உலகுடன் சேர்ந்து நாமும் வருந்துகின்ற அதே வேளையில், ஒப்பிடமுடியாத எமது இந்த வரலாற்றுஎச்சத்தை மீள்விப்பதில்நாம் காலத்தை வீணுக்கக்கூடாது. ஆகவே நண்பர்கள் ஆதரவாளர்களிடம் இருந்து நன்கொடை வேண்டுகிறோம். விரிவான இட அமைப்புகளுடனும் ஒரு புதிய நூல்நிலையத்தை மீள அமைப்ப தெனத் துணிந்துள்ளோம். அண்ணளவாக ஒரு கோடியே ஐம்பது இலக்கம் உருபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள இதுபோன்ற ஓர் உயர்ந்த நோக்கத்திற்குத் தங்களால் இயலக்கூடிய தொகைகளை உதவுவதற்குத் தாங்கள் விரும்புவீர்களென நாம் எதிர்நோக்கு கின்றோம். யாழ்ப்பாணம் இலங்கை வைப்பகத்தில் "யாழ்ப்பாணம் பொதுமக்கள் நூல்நிலைய நம்பிக்கைத் தொகை" என்னும் பெயரில் உள்ள 2893-ஆம் எண் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. எமக்கு அறிவித்துத் தங்கள் உதவுதொகைகளை வங்கிக்கே நேரடியாக அனுப்பி வைப்பீர்களாகில் நன்றி பாராட்டுவோம்.

(மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.) **இராசா விசுவநாதன்**

www.thamizham.net - Free E book No 7516

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவணம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி — இனம் — நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் நிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், (சிங்கை).
தென்மொழி மறை நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக் குமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன்.
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. கு

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

சுவடி: 18] தி.பி. உ0கஉ நளி, சிலை (நவ'81-சன'82) [ஓலை: 4-6

இயக்கம் தொடங்கியது!

(முன்னுரை)

'தென்மொழி ஒரிதழன்று; ஓரியக்கம்' என்பது 1959-தென்மொழி யிதழிலேயே முழங்கப் பெற்ற முழக்கம். அன்று தொடங்கிய முழக்கம் வேர்பிடித்துக் கால் கொள்ளுவதற்கு ஏறத்தாழ இருபத்து இரண்டாண்டுகள் சென்றன. தென்மொழி தொடங்கிய நாளிலிருந்து அதன் கொள்கைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்ட உண்மைத் தமிழன்பர்கள் அதன் இயக்கத்தை ஒரு கட்டுக் கோப்புடன் அமைப்பதை வலியுறுத்தியே வந்தனர். ஆனாலும் தென்மொழி தான் கொண்ட மொழி, இனம், நாடு, என்னும் முந்நிலைக் கொள்கைகளில்

www.thamizham.net - Free E book No 7516

முழுவதும் தம்மை வெளிப்படையாக ஈடுபடுத்திக் கொள்ளும் உரஞ் சான்றவர்கள் எண்ணிக்கை நாம் எதிர்பார்த்த அளவிற்கு ஒருகணிசமாக அமையாததால், அதன் கொள்கைகளை ஓர் இயக்க வடிவில் உருவாக்க முடியாமல் இருந்தது. இடையில் தென்மொழி மேல் ஏற்பட்ட அரசியல் சட்ட நிலைத் தாக்கங்களால் அதன் செயற்பாடுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள அன்பர்கள் தயங்கினர்; ஓரளவு அஞ்சவும் செய்தனர். காரணியம் மொழி, இன, நாட்டு நலங் கருதுகிற தென்மொழி அன்பர்கள் பெரும்பாலும் அரசுப் பணிகளில் நல்ல வருவாய் உள்ள பதவிகளிலேயே இருந்து வந்தனர்; வருகின்றனர். இந்நிலையில் தென்மொழி இயக்கத்தில் ஈடுபட்டால் எங்குத் தங்கள் வேலைகளுக்குக் குந்தகம் வந்து விடுமோ, வேலை பறிபோய் விடுமோ என்று அஞ்சியதும், அஞ்சுவதும் இயல்பே. இந்த அச்சம் அவர்களின் கோழைமை உணர்வால் ஏற்பட்டதன்று. வாழ்வியலில் தங்களுக்குக் கிடைத்த ஒரு வருவாய் நிலையைத் தவிர்த்துக் கொண்டால், தாங்கள் பொதுத் தொண்டு செய்வதற்கே ஒரு தடை யேற்பட்டு விடுமே என்பதே அவர்கள் கருத்தாக இருத்தல் வேண்டும். எனவே, ஆழ எண்ணிப் பார்க்கும் பொழுது இவ்வச்சம் எனக்குத்

உலகத் தமிழினத்தின் நெஞ்சில் ஒரு நம்பிக்கை ஒளி பிறந்தது!

தவறானதாகப் படவில்லை. இந்த நிலை காரணியமாகவே, தென்மொழி இயக்கத்தை ஒரு கட்டுக்கோப்பாக அமைத்துச் செயல்பட முடியாமல் இருந்து வந்தது. அவ்வகையில் பெரிதும் தயக்கம் காட்டினேன் என்றும் சொல்லலாம்.

இந்த நிலையில், நம் அன்பர்களுக்கு இன்னொன்றைச் சொல்லியாகல் வேண்டும். நான் இங்குச் சொல்லப் போகும் இக் கருத்தைப் பொதுத் தொண்டைப் பற்றி என்னுடைய தலையாய, இன்னுஞ் சொன்னால் சரியான ஒரு கருத்தாகவே அன்பர்களும் அறிஞர்களும் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். அஃது என்ன வென்றால் பொதுவாகவே, நம் நாட்டில், மக்களுக்கு உண்மையாகத் தொண்டு செய்ய வேண்டும் என்னும் அடிப்படையில் அறிஞர்களும் தலைவர்களும் இன்னும் முழுமையாகத் தங்களை ஒப்படைத்துக் கொள்ளவில்லை என்பதே! ஓர் ஆலபர்ட் சுவைட்சர் போலவோ, அப்பிரகாம் இலிங்கனைப் போலவோ, சாக்ரடீசைப் போலவோ, சன்யாட்சன் போலவோ, இலெனினைப் போலவோ, நம் தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், தந்தை பெரியாரையும் கருமவீரர் காமராசரையும் தவிர்த்துப் பொது மக்கள் வளர்ச்சியில், நலத்தில் அன்பும் அக்கறையும் கொண்ட தலைவர்களும் அறிஞர்களும் இன்னும் முழுமையாக உருவாகவில்லை

www.thamizham.net - Free E book No 7516

என்பதே என் விளக்கமான கருத்தாகும். இப் பெரும் மனக்குறை ஒன்று என் உள்ளத்தே இருந்தாலும், இருக்கின்ற நிலைகளை வைத்துக் கொண்டுதான் நாம் எதையாவது இம் மக்களுக்கெனச் செய்தாக வேண்டியுள்ளது. இல்லாததை நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பதிலோ, அல்லது அதனடிப்படையில் கிடைத்த பொதுத்தொண்டுக்கான வாய்ப்பைப் புறக்கணித்து விடுவதிலோ பயன் ஏதும் விளையப் போவதில்லை. மாறாக மக்கள் இன்னும் கீழான நிலைக்கே போய்விட வேண்டி ஆகிவிடும்.

இன்னொன்றையும் நான் மனம் விட்டுச்சொல்லியாகல் வேண்டும், இங்குள்ள நம் இளைஞர்கள் வினைக்குப்பெரிதும் அஞ்சுகின்றனர்; தயங்குகின்றனர். நேரம், காலம் பாராது உழைக்க முன்வருவதென்பது அவர்களுக்குப் பெரிதும் முடியாத செயலாக இருக்கிறது. சட்டையில் அழுக்குப் படாமல் உழைக்க வேண்டும் என்பதே அவர்களுக்கு உவப்பான செயலாக இருக்கிறது; மாறானதைக்கசப்பான செயலாகவே அவர்கள் கருதுகின்றனர். பொதுத்தொண்டுக்கு வருகிறவர்கள் கழுதை போல் சுமக்கவும், மாடு போல் உழைக்கவும் எருமை போல் எதையும் பொருட்படுத்தாமல் இருக்கவும் நாய் போல் அலையவும், பன்றி போல் கிடைத்ததைத் தின்னவும், ஒட்டகம் போல் பட்டினி கிடக்கவும், புலிப் போல் சீறிப்பாயவும் பூனை போல் பதுங்கி இருக்கவும், அரிமாப் போல் கொள்கை முழக்கம் செய்யவும், எறும்பு போல் சுறுசுறுப்பாய் இயங்கவும் கழுகைப் போல் கூர்மையாக நோக்கவும், ஆந்தை போல்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் தொடக்க மாநாடு சென்னையில் பீடுற நடைபெற்றது!

இரவில் கண் விழிக்கவும், துறவி போல் ஓரிடத்தில் அமைந்திருக்கவும் தெரிந்திருக்க வேண்டும். இவற்றுக்கு நேர்மாறாகப்பொதுத்தொண்டை ஒரு வருவாயுள்ள அலுவலாகவே இற்றை இளைஞர்கள் கருதியிருக்கிறார்கள். சிலர் மேடையேறிப் பேசுவதும், அல்லது பாட்டெழுதிப் பாடுவதும், அல்லது கூட்டங்களைச் சேர்த்துக் கொண்டு போராட்டம் நடத்துவதுமே பொதுத் தொண்டு என்று கருதுகிறார்கள். பொதுத் தொண்டுக்கே இலக்கணம் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதுதான்.

இடும்பைக்கே கொள்கலன் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. (1029)
அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. (1027)

என்னும் இரண்டு குறள் இலக்கணங்களும் குடிசெய்யும் அஃதாவது பொதுத் தொண்டு செய்ய விரும்பும் அனைவர்க்கும் தலையாய எடுத்துக் காட்டுகளாம். தமிழ் இலக்கியப் பரப்பிலேயே இன்னும் சொன்னால் உலக இலக்கியங்களிலேயே, **திருக்குறளின் குடிசெயல் வகை** அதிகாரக் கருத்துகளைத் தவிர, பொதுத் தொண்டுக்குச் சரியான இலக்

www.thamizham.net - Free E book No 7516

கண அமைப்பைக் காண வியலாது. அது போல், பொதுத் தொண்டு செய்ய வற்புறுத்திய நூலாசிரியனையும் திருவள்ளுவப் பெருமானைத் தவிர வேறு பார்க்க முடியாது. இற்றை நிலையிலன்று, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அப் பெருமான் பொதுத்தொண்டின் வழியே தம இனநலத்தை ஒவ்வொருவரும் பேண வேண்டும் என்னும் குறிக்கோளைப் பற்றிச் சிந்தித்திருப்பதை, இன்று அவரைக் குறைப்பட்டுக் கொள்ளும் அனைவரும் உய்த்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவ் வுண்மைகளைப் பற்றி நான் இங்குச் சொல்ல வந்தது, தென்மொழி நிலையில் நாம் செய்ய வேண்டிய மொழி, இன, நாட்டு நலங்கருதிய பொதுத் தொண்டு எவ்வகையில் கடினமாக இருக்கும் என்பதை ஒருவாறு உணர்த்துவதற்கே.

எனவே, இவ்வகையில் இளைஞர்களையே பெரிதும் இத் தொண்டுக்கு எதிர்பார்க்க வேண்டியிருந்தது. திருமணம் ஆகி, வாழ்க்கையில் கொஞ்சம் ஈடுபாடு கொண்டு, இல்லறச் சுமையை ஏற்றவர்களிடப் மிகுதியாக எதுவும் எதிர்பார்க்க முடிவதில்லை.

தமிழகத்தின் நான்கு புறங்களிலிருந்தும் தமிழ்க்குடும்பங்கள் வீறுநடையிட்டு மாநாட்டில் வந்து கலந்து கொண்டன!

இளமையில் உள்ள ஊக்க உணர்வு நிலைகளும் அறிவு வெளிப்பாட்டு நிலைகளும் வினை நிலைகளும் திருமணம் ஆகியவர்களிடம் குறைந்து விடுவது பெரும்பாலும் இயல்பாய் இருக்கிறது. பலரால் மனைவி மக்கள் தொல்லைகளிலிருந்து விடுபடவே இயல்வதில்லை. அத்தகையருள் பொதுத்தொண்டுக்கு வரும் சிலர் வெறும் வாய்ப்பேச்சு வீரர்களாகவோ, பக்கம் பக்கமாகத் தேவையற்ற வெற்றுரைகளை எழுதித் தள்ளும் எழுத்து வீரர்களாகவோதாம் உள்ளனர். தென்மொழிக்குக் கிடைத்த அன்பர்கள் பலருள்ளும் இத்தகையோர் இல்லை என்று சொல்லி விட முடியாது. இன்னுஞ் சிலர் பணத்துக்காகவோ பதவிக்காகவோ, அல்லது வெறும் புகழுக்காகவோதான் பொதுத்தொண்டில் ஈடுபடுகிறார்கள். இவர்களையெல்லாம் வேறு பிரித்து உணர்வது மிகமிகக் கடினமான ஒரு செயல்.

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர் (514)

என்னும் குறள் இதனை எடுத்துக் காட்டும். ஆகவே ஓரியக்கத்தைக் கொள்கை வழிக் கட்டமைப்பது என்பது நம போன்றவர்களுக்கு மிகவும் கடினமான செயலாகும். இருப்பினும்,

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். (975)

என்பது போலும் குறள்மொழிகள் அடிக்கடி எனக்கு ஓர் இனம் விளங்காத துணிவையும் நம்பிக்கையையும் தந்து கொண்டிருந்தன; இருக்கின்றன

www.thamizham.net - Free E book No 7516

எனவே, அன்பர்கள் சிலரின் வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்தாலும், இயக்கம் தொடங்குவதைத் தள்ளிப் போட்டுப் போட்டுக் கொண்டு வந்தேன். ஆனால், அப்படிக் காலத்தைத் தள்ளி வைப்பதும் ஓரளவு சரியன்று என்பதை மொழிஞாயிறு **பாவாணர், பண்ணாராய்ச்சியறிஞர் சுந்தரேசனார், ஒளவை. சு. துரைசாமியார்** ஆகியோரின் அடுத்தடுத்து நிகழ்ந்த மறைவுகள் எனக்கு எடுத்துக் காட்டின. மேற்காட்டிய மூவருள் முன்னிருவரும் செய்யக் கருதியிருந்த பெருஞ்செயல்களைப் பற்றி நான் நன்கு உணர்வேன். காலப் பின்னீட்டாலும், உடல் முதுமையால் ஏற்பட்ட சில வினைத் தளர்வுகளாலும், உள நெகிழ்ச்சிகளாலும் அவர்கள் செய்யத் தவறிய அல்லது இயலாது போன மலைபோலும் அறிவுப் பணியை நான் நன்கு உணர்ந்தேன். அத்துடன்,

> 'நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
> மேற்சென்று செய்யப் படும்' (335)

என்னும் உலக நிலையாமையையும், என் வாழ்வில் அரை நூற்றாண்டு கழிந்து கொண்டிருந்தமையையும் நான் எண்ணிப்பார்த்தேன். நான் என் இனத்திற்குத் தரவேண்டிய எச்சங்கள் அறிவுநிலையாகவும் வினை

வெள்ளத்திலேயொரு வெள்ளமுமாய் வீரத் தமிழ்நெஞ்சங்கள் ஒன்றிணைந்தன!

நிலையாகவும் என்னில் குவிந்து கிடந்தன அவற்றை அனைத்தும் ஒன்றுவிடாமல் வெளிப்படுத்தவும், செய்து முடிக்கவும் எனக்குப் பல பிறவிகள் தேவைப்படும். ஆனாலும் முடிந்த அளவிலேனும் அவை இப் பிறவியிலேயே வெளிப்படுத்தப் பெற்று, அல்லது செய்து முடிக்கப் பெற்று ஆக வேண்டுமே என்னும் அவா — அங்காப்பு — எனக்குண்டு? என் செய்வது? அறிவு நிலைகளை வெளிப்படுத்துவதெனில் நான் அமைந்து வினைப்படல் வேண்டும். வினை நிலைகளில் ஈடுபடுவதெனில், நான் குமைந்து கொதித்தெழல் வேண்டும். முன்னது அகவினை; பின்னது புறவினை. இரண்டிலும் தேவையான அளவை — செய்துதீர வேண்டிய நிலைகளைச் - செய்தே ஆகல் வேண்டும் என்று உறுதி செய்து கொண்டேன். எனவே ஒரு முடிவுக்கு நான் வந்தேன். இன்றிலிருந்து 1985 ஆண்டு வரை அஃதாவது ஓர் ஐந்தாண்டு வரை, தென்மொழி இயக்கத்தைக் கட்டமைத்து. ஓரளவு வளரச் செய்து, அது நானில்லாமலேயே — என் துணை வேண்டாமலேயே — இயங்கும் அளவில் வலுப்படுத்தி விடுவது. அதற்கு மேல் வாணாள் இறுதி வரை அறிவு வெளிப்பாட்டிலேயே முழுகி விடுவது என்பது இத்தகைய எண்ண நிலைப் பாடுகளுக்கிடையில் தென்மொழிக்குக் கிடைத்த மெய்யன்பர்களில் ஒரு சிலர் இயக்க

www.thamizham.net - Free E book No 7516

அமைப்பை மிகுதியாகத் தூண்டத் தொடங்கினர். அவர்களின் உணர்வை நான் மிகவும் மதித்தேன், போற்றினேன். இறுதியில் அதற்கொரு நாளும் வந்தது'

அந்நிலைகளை யொட்டித் தென்மொழியில் சில ஆய்வறிக்கைகள் வெளியிடப் பெற்றன. அவை தமிழின, மொழி, நல நாட்டத்தில் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்களின் மனநிலையை அறிய உதவி செய்தன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு அன்பர்களிடம் ஒரு வேகம் பிறந்தது. எனவே, 25-7-81 அன்று மாநிலம் முழுதுமுள்ள தென்மொழி அன்பர்களையும் இன நலம் கருதுவார் பிறரையும், திருச்சியில் ஒன்று கூட்டி, அனைவரின் கருத்துகளையும் நேரில் கேட்டறிந்தேன். அதன்பின் மாநாடு திட்டமிடப் பெற்றது.

7, 8-11-81-இல் தமிழகத் தலைநகரில் நடந்த தமிழினத்தின் ஒருங்கிணைப்பு மாநாடு!

இயக்கம் தொடங்குவதென முடிவு செய்யப் பெற்றது. மாநாட்டு அறிக்கைகள், பொருள் தண்டுவதற்கான பற்று முறிகள் அச்சிடப் பெற்று நடவடிக்கைகள் முடுக்கப் பெற்றன. இயக்கம் அமைவதில் பெரிதும் நாட்டமுடைய நெடுநாளைய தென்மொழி அன்பர்கள் பலர் ஆங்காங்கே தெருவில் இறங்கி நன்கொடை தண்டினர். சென்னையில் தென்மொழி அன்பர் குழுவினர், மகளிரையும் உள்ளடக்கித் தெருத் தெருவாகப் பல நாட்கள் பொருள்தண்டலில் ஈடுபட்டனர். இறுதியில் உ.த.மு.க. தொடக்க மாநாடு, கடந்த துலை மாதம் உஉ, உங (நவம்பர் 7, 8)-இல் பெரியார் திடலில் தொடங்கி நடைபெற்றது அதில் முடுக்கமாக ஈடுபட்ட அமைப்புக் குழுவினரின் பணிக்கடுமையைச் சொல்லி முடியாது.

நிகழ்ச்சிச் சுருக்கம்:

மாநாட்டிற்கு முன் 3-11-81 அன்று மாலை 4-30 மணியளவில், அண்ணா சாலையில் உள்ள பாவாணர் நூலகக் கட்டிடக் கருத்தரங்கு அறையில் செய்தியாளர் கூட்டம் கூட்டப் பெற்றது. செய்தியாளர்களிடம் மாநாட்டு நோக்கம் பற்றியும் இயக்கச் செயற்பாடுகளைப் பற்றியும் எடுத்துரைக்கப் பெற்றது. நடைபெறவிருக்கும் மாநாடு பற்றிய செய்திகளைக் கூடிய வரையில் தமிழ்ச் செய்தித் தாள்கள் ஓரளவு நிறைவாக வெளியிட்டன. ஆங்கிலச் செய்தித் தாள்கள் இருட்டடிப்புச் செய்தன. மாநாடு நடைபெறும் செய்தி ஏற்கனவே பிலிப்பைன்சு வானொலியிலும், மாநாட்டிற்கு முந்தின நாள் சென்னை வானொலியிலும் ஒலிபரப்பப் பெற்றது.

மாநாட்டுத் தொடர்பாக அன்பர்கள் இரவு பகலாகக் கடுமையாக உழைத்தனர். சுவரொட்டிகளைத் தாங்களே அணியணியாகப்

www.thamizham.net - Free E book No 7516

பிரிந்து இரவு நேரங்களில் சென்னை முழுவதும் பாவலாக ஒட்டினர். தென்மொழி ப. துரைபரசன், புலவர் இறைக்குருவனார், தென்மொழி சோ ஆற்றலரசு, பொழிலன், அழ இளமுருகன், பொருளாளர் சு இளங்கோவன் செ.கண்ணன், அ.ஆறிறைவன், பொய்யாமொழி ஆகியோர் மாநாட்டுப் பணிகளில் திறம்படவும் சோர்வின்றியும் இராப்பகல் உழைத்தவர்களில் முதன்மையானவர்கள். ஓவியர் திரு சாவி. தம்பிராசு மாநாட்டு அரங்க மேற்பார்வையாளராக இருந்தும், ஓவியங்களை, கருத்துரை அட்டைகளை எழுதியும் அரும்பணியாற்றினார். திரு. அருட்கையன் மாநாட்டில் அமையவிருக்கும் கலை நிகழ்ச்சிகள் தொடர்பாக மிகக் கவனம் செலுத்தினார். மருத்துவர் கோவிந்தனார் அவ்வப் பொழுது வந்து மாநாட்டுப் பணிகளில் கவனம் செலுத்தினார். இவர்கள் தவிர மா. பூங்குன்றன், தென்மொழி ப முருகவேள் ஆகியோர் மாநாட்டுப் பணியாளர்களுக்கு அவ்வப் பொழுது ஒத்துழைப்பு நல்கினர். மகளிர் அணியில் இறைபொற்கொடி, தென்னி தேவகாந்தி, சித்திரச்செந்தாழை கயற்கன்னி, செங்கதிர்ச்செல்வி ஆகியோர் நன்கொடை தண்டுவதில் பெரும்பங்காற்றினர். தென்மொழி பறைநித்தலின் பனுரும் நன்கொடைத்தண்டலில் அவ்வப்பொழுது கலந்து கொண்டார். பொருளாளர் சு இளங்கோவன் அவர்களின் பணிக்கு ஈடு இணையே இல்லை. மாநாட்டிற்கு ஒரு மாதத்திற்கு முன்பே இவர் பணி தொடங்கி விட்டது. இன்றும் அவர் தொடர்ந்து உழைத்து வருவது குறிப்பிடத் தகுந்தது. இவர்கள் அனைவரின ஒத்துழைப்பாலும், தமிழகமெங்குமுள்ள நல்லன்பர்களின் ஊக்கத்தாலும் முதல்நாள் மாநாடு நவ. 7-இல் காலை சிறப்போடும் பொலிவோடும் தொடங்கியது.

இரண்டு நாள் மாநாடுகளிலும் கலந்து கொண்டு தலைமை தாங்கவும் சிறப்புரையாற்றவும் இருந்த தமிழீழத் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களும் திருவாட்டி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் 6-11-81-இலேயே தமிழகத் தலைநகர்க்கு வந்து சேர்ந்தனர். மாநாட்டு முதல் நாளிரவு முழுவதும் அன்பர்கள் பெரியார் திடலை அழகு படுத்தினர். சிவப்பின் நடுவில் வெள்ளை வட்டம் அமைந்த தாள் கொடிகளின் தோரணங்கள் மாநாட்டரங்கின் குறுக்கும் நெடுக்கும் கட்டப் பெற்றுக் கண்களைக் கவர்ந்தன. அரங்கச் சுவர்களில் நூற்றுக் கணக்கான கருத்துரை அட்டைகள் அழகு பெறத் தொங்க விடப்பெற்றன. பெரியார் திடலின் நுழை வாயிலில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு' என்னும் துணிப் பதாகை பளிச்சென்னும் எழுத்துகளால், தெருவில் போகும் அனைவரையும் திடலுக்குள் அழைத்துச் சென்றன. கோல அறிஞரும் ஓவியரும் ஆகிய திரு சாவி தம்பிராசு நீர்மேல் கோலங்களில் அரங்கத் தலைவர்களின் உருவங்களை அமைத்திருந்தார் நூல், தாளிகை விற்பனையகங்கள் மாநாட்டுத் தாழ்வாரங்களில் இடம் பிடித்தன. பகலுணவுப் பொட்டலங்கள் விற்கும் கடையொன்றும்

www.thamizham.net - Free E book No 7516

ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. மாநாட்டிற்கு முன் பதினைந்து நாட்களாகத் தொடர்ந்தும் விடடு விட்டும் பெய்து கொண்டிருந்த மழை இரண்டு நாள் மாநாட்டு நிகழ்ச்சிகளின் பொழுது பெய்யாமலிருந்தது பெரிதும் வியப்பாகவும், வெளியூரினின்று வந்தவர்களுக்கு வாய்ப்பாகவும் இருந்தது.

7-11-81- ஆம் நாள் காலை 7 மணியளவில் மாநாட்டு அமைப்பாளர் மாநாட்டு அரங்கு அமைப்புகளையும், புற விடங்களையும் சுற்றிப் பார்த்து உளம் நிறைவு பெற்றார். மாநாட்டிற்கு முதல் நாளிலிருந்தே வெளியூர்களிலிருந்து தென்மொழி அன்பர்களும் தமிழன்பர்களும் அணியணியாகவும் குடும்பம் குடும்பமாகவும் பெரியார் திடலில் வந்து குழுமியிருந்தனர். சிதறிக்கிடக்கும் அனைத்துத்தமிழுள்ளங்களும் ஒருங்கு கூடி மகிழவும், ஒரு பேரியக்கத்தைத் தொடங்கவும் ஆன ஓர் ஊக்க உணர்வு அனைவர் உள்ளத்திலும் பொங்கி வழிந்ததை அனைவர் முகங்களும் காட்டின.

முதல்நாள் காலை வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு ஏந்தாக 10-30 மணியளவில் இராசேந்திரன் அரங்கில் 'மாணவர் அரங்கம்' தொடங்கியது. அரங்கத்திற்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பண்டாரக (Ph.D) ஆராய்ச்சி மாணவர் திரு. **கு. இராசேந்திரன்** க. மு. தலைமை தாங்கினார். மாநாட்டு மேடையில் திருவாளர்கள் அமிர்தலிங்கம் இணையரும், தலைவர்களும் அமர்ந்திருந்தனர். அரங்கு களைகட்டியிருந்தது. தொடக்கத்தில் திருவாட்டி **தேன்மொழி அருளி,** அறி. இ. (படம். 1) 'விரிவிசும்பை' என்று தொடங்கும், இறைவணக்கம் பாடினார். செல்வி. **சித்திரச் செந்தாழை,** அறி. இ. (படம். 2) 'அன்னை மொழியே' என்று தொடங்கும் தமிழ் வாழ்த்துப் பாடினார். மேடையில் இருந்தோரும் அவையோரும்

படம். 1

படம். 2

படம். 3

www.thamizham.net - Free E book No 7516

(படம். 4)

எழுந்து நின்று பின் அமைவாக அமர்ந்திருந்தனர் அரங்கம் நிரம்பியிருந்தது. மக்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தனர். வாழ்த்துப் பாடல்களை யடுத்து, பழனி, 'தமிழ்ச்சுடர்' இதழாசிரியரும், தூய தொண்டருமாகிய திரு. **மணிமுத்து** அவர்-கள் (படம். 4) தலைவரை முன்மொழிந்து பேசியதை, உடுமலைப்பேட்டை, தென்மொழி மறவரும், சிறந்த ஓவியப் புலவருமான ஆகிய திரு. ப. **அறவாழி** அவர்கள் வழிமொழிந்து பேசினர். (படம். 5) அடுத்து, உறைத்த தென்மொழி அன்பர் திரு. **த. தமிழ்த் தென்றல்** அவர்கள் (படம். 6) மாணவர் அரங்கத் தலைவரையும், தலைவர்கள் பிறரையும், பொது மக்களையும் பாராட்டிப் பேசினர். அவரைத் தொடர்ந்து தலைவர் திரு **ஞ. இராசேந்திரன்** (படம். 7) தம் முன்னுரையை நிகழ்த்தினர். அவர் தம் முன்னுரையில், மாணவர்கள் இக்கால் குறிக்கோள் அற்றவர்களாக இருந்து வருவது மிகவும் வருந்தத் தக்கதென்றும், இவ்வியக்கத்தில் மாணவர்கள் அனைவரும் தவறாமல் பங்கு கொண்டு நாட்டின மொழி முன்னேற்றத்திற்குத் தத்தம் பங்குகளை ஆற்ற வேண்டுமென்றும் குறிப்பிட்டார். அடுத்துப் பேசிய புலவர் திரு. **தாமசு தமிழ்ச்செல்வன்** ஆ.ப. (அரசினர் கல்வியியல் கல்லூரி, சைதை,

படம். 5

சென்னை-15) (படம். 8) அவர்கள், 'தமிழ் மொழி வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு' என்னுந் தலைப்பில் பேசுகையில், 'மாண-வர்கள் நிலை நன்கு செப்பப் படுத்தப் பெற்றுவிட்டால், அதுவே நாட்டு முன்-னேற்றத்திற்கு மிகுவாகப் பயன்படும் என்றும், தமிழ் மொழி நன்கு மேம்படுத்தப்பட வேண்டுமென்றும் அப்பொழுதுதான் தமிழினம் நன்கு கட்டிக் காக்கப் படுமென்றும், தமிழ்மொழியில் நேர்ந்துள்ள கலப்படச் சிக்கல்களைக் கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கு மாணவர்கள் முயற்சி செய்ய வேண்டு

படம். 6

www.thamizham.net - Free E book No 7516

படம். 7

மென்றும், எனவே, மாணவர்கள் மொழி யுணர்வும் மொழியறிவும் உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்றும், இப்பொழுதுள்ள தமிழக நிலை மனநிறைவு கொள்ளும் படி இல்லை யென்றும், தமிழகத்தில் உள்ள தாளிகைகள் தமிழை வேண்டுமென்றே கெடுத்து வருகின்றன வென்றும, மாணவர்கள் அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும், இப்படிப் பட்ட செய்திகளில் ஈடுபடும்போது மாணவர்கள் நல்ல தலைமையின் கீழ் அணிவகுத்து நிற்க வேண்டுமென்றும், அத் தலைமை, இப்பொழுதுள்ள நிலையில், நம் பாவலரேறு ஐயா அவர்களுடைய தலைமைதானென்றும் குறிப்பிட்டார்கள்.

அடுத்துப்பேசிய திரு **மா.பொழிலன்** (படம் 9) 'குமுகாய வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு' என்னுந் தலைப்பில் பேசிய பொழுது. நம்முடைய இனம் குறிப்பாகப் பொருளியல் நிலையிலும் குமுகாய நிலையிலுந்தான் மிகப் பின்னடைந்து நிற்கின்றதென றும, மாணவர் மொழி நிலையில், நடுவணரசு இந்திமொழியைத் தென்மாநிலங்களில திணிக்க முற்பட்ட பொழுது அதை வன்மையாக எதிர்த்துப் போராடினர். ஆனால் இப்பொழுது அதைப் பற்றிக் கவலைப் படாது அடங்கி விட்டனர் என்றும், தமிழினம் அடிமை நிலையிலேயே

படம். 8

ஊறிப் பழக்கப்பட்டு விட்டதால் மொழியைப் பற்றியோ, குமுகாய முன்னேற்றம் பற்றியோ கவலையில்லாமல் உள்ளது என்றும், மற்றபடி தமிழகத் தலைவர்களும் தங்கள் பதவி நோக்கங்களுக்காக மக்கள் நலம் கருதுபவர்கள் போல் அவ்வப் பொழுது ஏதாவது பேசிக் கொண்டுதான் இருக்கிறார்களே தவிர, ஆக்கமான நடைமுறை வினைகளில் எவரும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை என்றும், இத்தகைய நிலைகள் எப்பொழுது தவிர்க்கப் படுகின்றனவோ, அப்பொழுதுதான் நம் இனம் முன்னேறும், என்றும், இப்பொழுதுள்ள நம் குமுகாயநிலை,

படம். 9

www.thamizham.net - Free E book No 7516

படம். 10.

யில் சாதி,மத வேறுபாடுகள் மிகுந்திருப்பது நம் முன்னேற்றத்திற்கு மிகுந்த கேடென்றும் அவை நம் அறியாமையால் ஒழிக்கப் படாமல் இன்னும் கடைப்பிடிக்கப் படுகின்றனவென்றும் அவற்றையெல்லாம் நாம் ஒழித்துக் கட்டப் பாடுபட வேண்டும் என்றும் இன்னும் பலபடியாகவும் தமிழர் முன்னேற்றக் கருத்துகளை எடுத்துரைத்தார். அவரை யடுத்து திரு. **செ. கண்ணன்** க.இ. (ச. இ) மதுரை, சட்டக் கல்லூரி மாணவர்) (படம். 10) 'அரசியல் வளர்ச்சியில மாண-வர்கள் பங்கு' என்பது பற்றிப் பேசினார்.

அவர் பேசுகையில், நம இயக்க அமைப்பாளர் பாவலரேறு அவர்கள் அரசியல் நிலைகளில் நம்மைப் பங்கு கொள்ள வைக்கவே இதுபோலும் ஓர் இயக்கம் தொடங்கியிருக்கிறார்கள் என்றும், 1973-இல ஆரிய நரிகளால், தமிழர்க்குச் சார்பான கலைஞர் ஆட்சி அகற்றப்படவிருந்த பொழுது,'அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க' என்று எழுதினார்களே அஃது அரசியல் நிலையில் அவர்கள் தெரிவித்த முன் கணிப்பு என்றும், அதால் தமிழின நலம் கெட்டுவிடக் கூடாது என்று கருதினார்கள் என்றும், ஆனால் அவர் எழுதிய கருத்துக்குப் பல எதிர்ப்புகள் வந்தன; அந்நிகழ்ச்சிகளெல்லாம் எதிர்கால அரசியல் நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றும்,

படம். 11

அந்த நிலைகள் இன்றைக்குத் தெரிந்துவிட்டன என்றும் இப்பொழுதுள்ள அரசியல் நிலைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

படம். 12

அடுத்து, திரு **இரா. திருவாணன்** க. மு. (இல.மு.) (சென்னை, பச்சையப்பன் கல்லூரி) (படம். 11) அவர்கள் 'பொதுவுடைமை வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு' என்னும் பொருள் பற்றிப் பேசினார். அவர்கள் உரையாற்றுகையில், வரப்போகும் மாணவர் குமுகாயத்திடம் பெரும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது என்றும், மாணவர்களுக்கு அரசியல் கூடாது என்று சிலர் கூறுகிறார்கள்; ஆனால் அவர்களால்தான் அரசியல்,பொருளியல்

www.thamizham.net - Free E book No 7516

மாற்றங்களை உருவாக்க முடியும் என்றும், பொதுவுடைமைக் கொள்கையே கட்டாயம் எதிர்கால மக்களின் கொள்கையாக இருக்கும் என்றும் பாவலரேறு அவர்களின் பொதுவுடைமைப் பாடல் வரிகள் சிலவற்றை எடுத்துக்காட்டிச் சிறப்பாக உரையாற்றினார். அடுத்துப் பேசிய, திரு. **அறிவுத் தொகையன்**, க. மு. (ஆராய்ச்சி மாணவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் படம்-12) 'கலை வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு' என்னுந் தலைப்பில் பேசுகையில், 'தந்தை பெரியார் அவர்கள் ஓயாமல் இம் மக்களுக்கு விழிப் பேற்படும் வகையில் பேசிப்பேசி வந்ததால்தான், இன்று நாம் ஓரளவு மானமுள்ள மக்களாக உள்ளோம். அந்த நிலைகளை போட்டி மாணவர்களிடையில் பேச்சு வன்மையும் எழுத்து வன்மையும் மலர்ச்சி பெறுதல் வேண்டும் என்றும், தமிழ்த் தலைவர்கள், இன்று விழிப்படைந்துள்ள ஆயிரக்கணக்கான எழுச்சியுள்ள இளைஞர்களையும் மாணவர்களையும் பயன்படுத்திக் கொண்டு உண்மையான செயற்பாட்டுக்கு — அதாவது தனித்தமிழ் நாட்டு மலர்ச்சிக்கு — உழைக்க வேண்டும் என்றும் பல உணர்வுரைகளை எடுத்துக் கூறிப், பாவலரேறு அவர்களின் 'ஆட்டிப் படைக்கும் அரசினர்க்கும் ஆரியர்க்கும்' என்ற எச்சரிக்கைப் பாடலைப் பாடி முடித்தார்.

படம். 13

அடுத்தபடி, செல்வி. **சித்திரச் செந்தாழை**. அறி. இ; (படம் 13) 'பண்பாட்டு வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு' என்னுந் தலைப்பில் உரையாற்றுகையில், பண்பட்ட உள்ளத்திலிருந்து விளையும் செயற்பாடு-களைத்தாம் நாம் பண்பாடு என்று கூறு-கிறோம் என்றும், இந்தியாவிலேயே தமிழ் நாடுதான் பண்பாட்டில் முழுவளர்ச்சி பெற்-றிருந்த தென்றும், ஆனால் இன்றுள்ள நிலை மிகவும் வருந்தத் தக்கதாக உள்ளதென்றும் முன்பிருந்த, ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நிலையும், அனைவரும் நன்றாக வாழ வேண்டும் என்றிருந்த பரந்த நோக்கும் பொதுநலவுணர்வும் இன்று மிகவும் குறைந்து விட்டன என்றும், இந்த நிலைகளையெல்லாம் மாணவர்கள் நன்கு ஊன்றிக் கவனித்து, அவற்றை மீட்டுக் கொணர்வதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்!

படம் 14

அவரைத் தொடர்ந்து திரு. **அ. ஆறிறைவன்** அறி. மு. (சென்னை,

www.thamizham.net - Free E book No 7516

இந்தியத் தொழில் நுட்பக்கழகம் (படம் '4) 'அறிவியல் வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு' என்னும் பொருள் பற்றி உரையாற்றினர். அக்கால், அவர், மாணவர்கள் அறிவியல் கருத்துகளைத் தமிழில் தருதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றும், இன்றைய வாழ்க்கையில் அறிவியல் பெரும் பங்கு பெறுகிறது என்றும், மேனாடுகள் இன்று பெரும் அளவில் முன்னேறியுள்ளதற்குக் காரணியம் அவை அறிவியல் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டியதுதான் என்றும், இன்று தமிழின முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுகின்ற நாம, இன்றைய நிலையில் வளர்ந்துள்ள அறிவியல் நிலைகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும், மாணவர்கள் இந்த நிலையில் உழைக்க வேண்டு மென்றும் கூறி முடித்தார். அடுத்து, தலைவர் திரு. **கு. இராசேந்திரன்** அவர்கள் மாணவர்கள் வெளிப்படுத்திய கருத்துகளை யெல்லாம் தொகுத்துக்கூறி, இன்றுள்ள மாணவர் நிலைகளையெல்லாம் ஒரு மாணவராக உள்ள தாம் நன்கு அறிந்து கொள்ள முடியும் என்றும், இந்த மாணவர் குழு காயம், நம் பாவலரேறு அவாகள் கருதுகிறபடியும், தென்மொழியில் அவர் கடந்த பல்லாண்டுகளாக எழுதிவருகின்றபடியும் அமைந்தால் அதனால் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் விளையும் என்றும், இடையிடையே பல தென்மொழிப் பாடல்களை உணர்வுடன் எடுத்துக் கூறி நீண்ட ஓர் உணர்வுரையாற்றினர் அவர் ஆற்றிய வீறு பெற்ற கருத்துகள் அவையோரை மெய்மமறக்கச் செய்தன.

அடுத்து, மாநாட்டுக்கு மிக்க ஆர்வமுடன் வந்திருந்து, இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் இடைவிடாமல் பங்கு கொண்ட பாவோகி **சுத்தானந்த பாரதியார்**, கழகத் தோற்றத்தை வாழ்த்திச் சில வாழ்த்துப் பாடல்களைப் பாடினர். அதைத் தொடர்ந்து அவர்பேசுகையில், தமிழ்மொழி ஒன்றுதான் உலகில் எந்த மொழியின் துணையின்றிப் பேசுவதற்கும் ஏற்ற மொழி என்றும், வேறு அனைத்து மொழிகளும் கலப்புமொழி யென்றும், அப்படிபபட்ட தனித்தமிழ்மொழியை மிகவளமாக எழுதவும் பேசவும் ஆற்றல்மிக்க நம் பெருஞ்சித்திரனர்அவர்களுக்குத் தாம மிகவும் கடமைப் பட்டிருப்பதாகவும், அவர் தமக்கும் ஒரு குரு மாதிரிதான் என்றும், அத்தகையவர் தொடங்குகின்ற இந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தை வாழ்த்துவதற்காகவே, தாம் இங்கு வந்திருப்பதாகவும், இந்த நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் தாம் எழுதிக் கொண்டிருக்கும் வரலாற்றில் குறிப்பதாகவும் இதன் கொள்கைகளையும் சிறப்புகளையும் மேலை ஐரோப்பிய நாடுகளில் பரப்பப் போவதாகவும், இந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்திற்குப் பின்னேற்றமே கிடையாதென்றும் குறிப்பிட்டார்கள்.

இறுதியாகப் பாவலரேறு அவர்களின் சிறப்புரை நிகழ்ந்தது. அவர்கள் சிறப்புரையாற்றுகையில், இந்த நாட்டில் மாணவர்கள் தாம் உண்மையாகவே கவனிக்கப்பட வேண்டியவர்கள் ஆவார்கள். இப்

www.thamizham.net - Free E book No 7516

பொழுதைய நிலையில் மக்களுக்குப் பயன்படாத — ஆனால் அரசியல் தலைவர்களால் பயன்படுத்திக் கொள்ளப் பெறுகின்ற ஒரு கூட்டம் மாணவர்கள் கூட்டம். எனவே மாணவர்களைத்தான் முதலில் நாம் கவனிக்க வேண்டும். ஒரு வகையான நச்சுணாவு நாகரிகம் என்னும் பெயரால் பரவிவரும் இக்காலக்கட்டத்தில் பெற்றோர்கள் தம்குழந்தைகள் நிலையிலும், படிக்கின்ற மாணவர் நிலையிலுந் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருத்தல் வேண்டும். இல்லாவிடில் நாம் நினைக்கும் எதிர்காலக் குமுகாயம் அமைவது மிகவும் கடினம். பெற்றோர்கள் தம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி விடுவதோடு தங்கள் கடமைகள் தீர்ந்து போனதாகக் கருதுகிறார்கள். அக் குழந்தைகள் பள்ளிகளில் என்ன படிக்கிறார்கள், எப்படிப் படிக்கிறார்கள் என்பதிலெல்லாம் கருத்துச் செலுத்தத் தவறி விடுகிறார்கள். இப்படிப்பட்ட குழந்தைகள் தம் மனம் போன போக்கில் தாறுமாறாக வளர்ந்து கல்லூரியில் நுழைந்து, அங்குப் படிப்பிலே கவனம் செலுத்தாமல் ஒழுக்கமும் கட்டுப்பாடும் இன்றி வளர்ந்து, கட்டுக் கடங்காத காளை மாடுகள் போல் வளர்ந்து குமுகாயக் கேடர்களாக வருகிறார்கள். இந்நிலை நம் குமுகாயத்திற்கும் இனத்திற்கும் நாட்டுக்கும் ஏற்பட்டு வரும் ஒரு பெரிய இழப்பாகும். 'இளமையோ எச்செயலும் செய்யும்; இளமை அறிவோடு இயைந்தால், நாட்டுக்கு விளைவதெல்லாம் நன்மையே யாம்' என்று கூறுவார் பாரதிதாசன். ஒரு நாட்டிலே நன்றாகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள் — நன்றாக வளர்க்கப்பட வேண்டியவர்கள் இளைஞர்கள். அவர்களுடைய நலத்தையொட்டித்தான் ஒரு நாடு படிப்படியாக வளர்ச்சி பெறும். அதே போல் அவர்களுடைய சீர்குலைவை யொட்டித்தான் அந்த நாடு படிப்படியாகத் தாழ்ந்து போகும். பொருளியலிலே வீழும்; அரசியலிலே வீழ்ச்சி பெறும். எனவேதான் மாணவர்களுடைய நோக்கும் போக்கும் தமிழின் பக்கம் திரும்ப வேண்டும்; தமிழின நலத்தின் பக்கம் திரும்ப வேண்டும். தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதிலே அவர்கள் முன்னே வந்து நிற்க வேண்டும்; என்கின்ற கருத்தோடு இந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டிலே, தொடக்கத்திலே அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கென்று அமைக்கப் பெற்றுள்ள மாணவர் அரங்கில், அவர்கள் தங்கள் கருத்துகளை மனந்திறந்து சொல்ல வேண்டும்; நாம் அதை முகாமையாகக் கவனிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மாணவர் அரங்கை இந்தத் தொடக்க மாநாட்டின் முன் பகுதி நிகழ்ச்சியாக அமைத்தோம்.

மாணவர்கள் — அதில் பங்கெடுத்தவர்கள் உண்மையாகத் தமிழ் மொழி பற்றி, தமிழ் இன நலம் பற்றிய பலவேறு கருத்துகளை அங்கெடுத்து வெளியிட்டார்கள். இந்த மாணவர் அரங்கிற்குத் தலைமையேற்ற ஆராய்ச்சி மாணவர் கு. இராசேந்திரன் அவர்கள் தென்

www.thamizham.net - Free E book No 7516

மொழியைத் தொடக்க நாளிலிருந்து படித்த மாணவர். ஏராளமான தென்மொழிப் பாடல்களை மனப்பாடம் பண்ணி, மாணவர்களுக்கிடையே அவ்வப்பொழுது பரப்பிக் கொண்டு வருகின்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஆயிரம் மாணவர்களைத் திரட்டித் தென்மொழி இயக்கம் — தனித்தமிழ் இயக்கம் கண்டவர். அவர் இந்த அரங்கிற்குத் தலைமையேற்று, மாணவர்களின் கருத்தை ஒருமுகப்படுத்தி, நம்மிடை வெளிப்படுத்தும்படி செய்திருக்கிறார். உண்மையாக நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். வேறு நாடுகளிலே அங்குள்ள அரசுகள் அங்குள்ள மாணவர்களை நன்றாகக் கவனித்து அக்கறையோடு அவர்களைக் கல்வியிலே நாட்டமுறும்படி செய்து, நாட்டு நலனில் அவர்கள் ஆர்வம் காட்டும்படி வழிப் படுத்துகிறார்கள் எடுத்துக் காட்டாக, சிங்கப்பூருக்கு நான் சென்றிருந்த பொழுது, அங்கிருக்கின்ற மாணவர்களுக்குக் கட்டாயக் கல்வி புகட்டப் பெறுவதைப் பார்த்தேன். அவ்வாறு பள்ளியிறுதி வரை படித்த மாணவர்கள் கட்டாயமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் படைத்துறைப் பயிற்சியும் பெற வேண்டும் என்பதையுந் தெரிந்து நான் வியப்படைந்தேன். ஏனென்றால் இளமை உணர்ச்சி நாட்டுக்கும் மக்களுக்கும் அரசியலுக்கும் பயன்படுத்தப் படும் பொழுது, அது நாமெல்லாம் சேர்ந்து செய்கின்ற நன்மைகளை விட இன்னும் நல்ல விளைவைத் தரும் என்று அவர்கள் கருதுகிறார் -கள். எனவேதான் மாணவர்களை நன்றாக வளர்த்து நல்ல குடிமக்களாக விளங்கும்படி அவர்கள் செய்கிறார்கள்

ஆனால் இக்கால மாணவர்களிடையே நல்ல மன வளர்ச்சி இல்லாமையைக் கண்டுதான் உண்மையில் வருந்த வேண்டியுள்ளது. அதேபோல் அவர்களுக்கிருக்கும் அறிவுவளர்ச்சியும் ஒரு நோக்கத்தைக் கொண்டதாக, கொள்கையைக் கொண்டதாக இல்லை. அவர்கள் கல்வியமைப்பும் அவர்கள் வாழப் போகும் வாழ்க்கை அமைப்புக்குப் பொருந்துவதாக இல்லை. பல மாணவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கல்லூரிக்குப் போவதாகக் கூறிக் கொண்டு, வழியில் உள்ள நெடுஞ் சாலைகளின் ஓரங்களிலும் இன்னும் உண்டிச் சாலை திரைப்பட அரங்குகள் இவற்றின் முன்னிலையிலும், கூட்டமாகக் கூடி நின்று பேசியும் ஆரவாரித்தும் பொழுதுகளைப் போக்கித் திரிவதை நாம் பார்க்கிறோம். அவர்கள் தங்கிப் படிக்கின்ற கல்லூரி விடுதிகளும் ஒரு பொதுத் தங்கல் மனை போல் உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் (Boarding and Lodging) உரிய இடமாக உள்ள நிலைகளையும், கல்வி கற்கின்ற மாணவர்களுக்குரிய இடமாக இல்லாமலிருக்கும் நிலைகளையும் இவ்வரங்கிற்குத் தலைமை தாங்கிய தலைவர் இராசேந்திரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் படிக்கின்ற பொத்தகங்களும் கல்வித் தொடர்பானவையாக இல்லாமல், கீழான இழிவுணர்வுகளை வளர்க்கின்ற மிகவும் தாழ்வான பொத்தகங்களாக

www.thamizham.net - Free E book No 7516

இருப்பதையும் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மாணவர் களின் இந்த நிலையால் நாட்டிற்கு எவ்வகையான நாம் நினைக்கின்ற — முன்னேற்றமும் ஏற்பட முடியாதென்பதை முதியவர், பெரியவர் கள், கற்றவர்கள், பெற்றோர்கள் முதலிய அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், மாணவர் அரங்கை இம் மாநாட்டின் முதலரங்காக அமைத்து, அதில் மாணவர்களையே பங்கேற்கச் செய்து, அவர்களையே தமிழ்மொழி வளர்ச்சி, குமுகாய வளர்ச்சி, பொதுவுடைமை வளர்ச்சி, அரசியல் வளர்ச்சி, கலைவளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி முதலியன பற்றிப் பேசச் செய்து அவர்கள் நோக்கில், எந்தக் குறிக்கோளுடன் என்ன சொல்கின்றார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினோம்.

இங்குப் பேசிய மாணவர்கள் அவை தொடர்பான சில பல கருத்து களைத் தெளிவாகவும் சிறப்பாகவும் எடுத்துச் சொன்னார்கள். குறிப் பாக நம் அறிவுத்தொகையன் அவர்கள் கூறுகிறபொழுது, பகுத்தறிவு வளர்ச்சியையும் பொதுத்தொண்டு மலர்ச்சியையும் முன் வைத்து மாணவர்கள் அந்த நிலையிலே உணர்வு பெற்றவர்களாக, உண்மை யை விளங்கிக் கொண்டவர்களாகத் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஒரு கொள்கையோடும், நோக்கத்தோடும் கற்கின்ற மாணவர்கள் நம் நாட்டிலே மிகக் குறைவு. பெரும்பாலும் இன்றுள்ள மாணவர்களில் நூற்றுக்குப் பத்து பேரிடம் கூட, ஓர் இலக்கு, ஒரு கொள்கை, ஒரு நோக்கு என்றெல்லாம் கூறு கின்றோமே, அது போல் எந்த உணர்வும் இல்லாமல் இருப்பது மிகவும் வருத்தமாக இருக்கிறது.

அடுத்தபடி, இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இப் பொழுதுள்ள மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் அரசியல் காரர்களே. அவர்கள் இவர்களைத்தங்கள் கொள்கை நோக்கத்துக் காகவோ, அவற்றைச் செயல்படுத்துவதற்காகவோ அன்று, அவர் களின் பதவி அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அவலநிலைமைகளைச் சுட்டாமல் இருக்க முடியவில்லை. எனவே, இந்த நிலைகளிலிருந்து, அவர்களை மீட்டு, அவர்களின் எழுச்சியுணர்வை ஒரு கொள்கைப் பாதையில் கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்கள் கருத்துகளுக்கு இங்கு முகாமை கொடுத்தோம்.

மற்றபடி, இனி அடுத்து நடைபெற விருக்கும் அரங்குகளில் தான் இந்த மாநாட்டின் நோக்கங்கள், கொள்கைகள் விளக்கப் பட விருக்கின்றன. புதிதாகத் தொடங்க விருக்கின்ற இயக்கத்தைப் பற்றியும் விரிவாகச் சொல்லப் பட விருக்கின்றன. பெரியோர்கள், அன்பர்கள், பொதுமக்கள் அனைவரும் இறுதிவரை அமைந்திருந்து அத்தனை நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு, இங்கு அறிஞர்கள் சொல்லுகின்ற கருத்துகளில் கவனம் செலுத்தி, இந் நாட்டிலுள்ள

www.thamizham.net - Free E book No 7516

உ. த. மு. க. தொடக்க மாநாட்டில் இரண்டு நாள்களிலும் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் தவறாமல் வந்திருந்து பெருமைப் படுத்திய தமிழீழ விடுதலைக் கூட்டணி நாயகர் நாவலர் திரு. **அமிர்தலிங்கமும்** நாயகி திருவாட்டி. **மங்கையர்க்கரசி** அமிர்தலிங்கமும மேடையில் வீற்றிருந்த காட்சி

மகளிரரங்கிற்குத் தலைமையேற்ற **மங்கையர்க்கரசிக்கு, தாமரை பெருஞ்சித்திரனார்** பொன்னாடை போர்த்துகிறார்.

www.thamizham.net - Free E book No 7516

மகளிரரங்கில் பங்கேற்ற மங்கையர் மணிகள் !
மேடையில் அமர்ந்திருப்பவர்கள்: புலவர் பொன் தெய்வநாயகி சோதி, தென்னி தேவகாந்தி, மங்கையர்க்கரசி, தாமரை பெருஞ்சித்திரனார். நிற்பவர்கள் : பொற்கொடி இறைக்குருவனார், நீர்மலர் கண்ணன்.

மகளிரரங்கில் தலைமையேற்று, தமிழீழ மறத்தி **மங்கையர்க்கரசி** வீறுரையாற்றி அனைவர் உள்ளத்தையும் நெகிழ்வித்த காட்சி.

www.thamizham.net - Free E book No 7516

அரசியல், பொருளியல், குமுகவியல், கலை,பண்பாடு முதலிய துறைகளில் ஒரு மறுமலர்ச்சியும் இன்றுள்ள நிலையில் முன்னேற்றமும் ஏற்படுவதற்கு வழிவகை காணுதற்குத் துணை நிற்க வேண்டும்.' என்பதாகக் கூறி முடித்தார்கள்.

அதன்பின் திருச்சி தென்மொழி முகவரும்,உறைத்த தென்மொழி மறவரும் ஆகிய திரு. **குழந்தை ஈகவரசன்** நன்றி கூற மாணவர் அரங்கம் இனிதே நிறைவுற்றது.

பொதுமக்கள் இடைவேளையின் பொழுது உணவுக்காத் திடலை விட்டு வெளியே போகாவண்ணம். திடலின் ஒரு புறத்தில் உணவுப் பொட்டலங்கள் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. தயிர், புளி, எலுமிச்சை, குழம்பு தோய்ந்த பொட்டலங்கள் குறைந்த விலைக்கு விற்கப் பெற்றன.

பாவேந்தர் அரங்க நிகழ்ச்சி

பிற்பகல் 3 மணியளவில் பாவேந்தர் அரங்கில் இயக்கப் பாடல் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியைத் **தென்மொழி க. தமிழப்பன்**, அறிமுகப் படுத்திப் பேசினர். தென்மொழி **சோ. ஆற்றலரசு**, தென்மொழி **நா. இளமாறன்**, செல்வி. **சித்திரச் செந்தாழை**, ஆகியோர் தென்மொழிப் பாடல்களை இசைக் கருவிகளுடன் பாடினர். தென்மொழி **ப. முருகவேள்** கருவி இசைத்ததுடன் அமைப்புப் பொறுப்பையும் மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து புலவர் **இறைக்குருவனர் — பொற்கொடி** இணையரின் மகள் சிறுமி **அங்கயற்கண்ணி**யும் சில தென்மொழிப் பாடல்களைப் பாடிக் கூட்டத்தினரை வியப்படையச் செய்தாள். (படங்கள் வேறு பக்கங்களில்.) இசை நிகழ்ச்சியின் இறுதியில் தென்மொழியன்பர் புலவர். **நாவை-சிவம்**, இல.இ. நன்றியுரை கூறி,இயக்கப் பாடல் இசை நிகழ்ச்சியை இனிதே நிறைவுறச் செய்தார்.

நீலாம்பிகை யரங்க நிகழ்ச்சி

7-11-81 காரி பிற்பகல் 4 மணியளவில் மகளிரரங்கம் தொடங்கியது. முதலில் தமிழ் வாழ்த்து பாடப் பெற்றது. அதை யடுத்து திருவாட்டி. **தென்னி. தேவகாந்தி**, அறி. மு., (படம். 15) தமிழீழ விடுதலைக் கூட்டணியின் மகளிரணித் தலைவரும், தமிழின விடுதலை மறத்தியுமாகிய திருவாட்டி. **மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்** அவர்களைத் தலைவராக இருந்து, மகளிரரங்கத்தை நடத்திக் கொடுக்க வேண்டுமென்று முன்மொழிந்தார். அவரைத் தொடர்ந்து திருவாட்டி. **தாமரை, பெருஞ்சித்திரனர்** (படம் 16) தலைவரையும், மற்ற தலைவர்களையும், மகளிரரங்கத்தில், பங்கு கொண்டு பேசவிருந்த மகளிரையும், பொது மக்களையும் வரவேற்றுப் பேசினர். அதையேற்று, திருவாட்டி **அமிர்தலிங்கம்** அவர்கள், மேடையின்

www.thamizham.net - Free E book No 7516

படம். 15

முன்வந்து நின்று, கணீரென்ற இனிமையான குரலில் தமிழீழத் தாய் வாழ்த்துப் பாடித் தொடக்கத்திலேயே அவையோரைக் கிளுகிளுக்கச் செய்து, அவர்கட்கு உணர்வேற்றி அமைந்திருக்கும்படி செய்தது வியப்பை யளித்தது அம்மையார் அவர்கள் பேசுகையில், இவ்வளவு பெரிய மாநாட்டிற்கு தம்மையும் தம் கணவரையும் அழைத்துக் கலந்து கொள்ளச் செய்ததுமன்றித் தங்களைத் தலைமைப் பொறுப்பேற்றுப் பெருமைப் படுத்தச் செய்ததற்கு மாநாட்டு அமைப்பாளர்க்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். அதன் பின் அவர் தம் பேச்சில் தமிழீழத்தில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தமிழின அழிவு நடவடிக்கைகளையெல்லாம் உணர்வு பெறக் கூறிக் கூட்டத்தினரைக் கிளர்ச்சியுறும்படி செய்தார். அழகிய இனிமையான தமிழில் அவர் பேசியது அவையோரின் நெஞ்சங்களை உருக்கியது; உணர்வேற்றியது; சிங்களவர் தமிழர்க் கிழைக்கும் கொடுமைகளை நேருக்கு நேர் உணர்ந்து கொள்வது போலும் ஒரு படப்பிடிப்பை உருவாக்கிக் காட்டியது அம்மையாரின் உரையைக் கேட்ட பெண்களில் சிலர் அழுதனர்; சிலர் விக்கினர். ஆடவர்களின் உறுதியான நெஞ்சமும் கரைந்து, கண்களில் நீர் கசியுமாறு உணர்வு நிரப்பியிருந்தது.

படம். 16

அவர்களின் நெஞ்சை நெகிழ்க்கும் முன்னுரைக்குப் பின், திருவாட்டி **பொற்கொடி இறைக்குருவனார்** (படம்.17) 'தமிழ்மொழி வளர்ச்சியில் மகளிர் பங்கு' என்னுந் தலைப்பில் பேசினார். அவர் தம் உரையில், நாம் நம் குழந்தைகளைத் தாய்மொழியில் — இனத்தில் பற்றுடையவர்களாக வளர்க்க வேண்டும் என்று கூறினார். அவரை அடுத்துப் பேசிய திருவாட்டி **நிர்மலர் கண்ணன்** (நிரசா கண்ணன்) (படம். 18), 'பண்பாட்டு வளர்ச்சியில் மகளிர்பங்கு' என்னும் பொருள் பற்றிப் பேசினார். அவர் தம்

படம். 17

www.thamizham.net - Free E book No 7516

படம். 1?

உரையில், பண்பாடு என்பது அகவொழுக்கம் என்றும், எவ்வளவு பெரிய பதவி பெற்றாலும, உயர்ந்த கல்வி கற்றாலும் மக்கள் பண்பாட்டை இழந்து வாழ்தல் பெருமைக்குரியதன்று என்றும் கூறினர்.

அவரையடுத்து, 'குமுகாய வளர்ச்சியில் மகளிர் பங்கு' என்னுந் தலைப்பில் புலவர். திருவாட்டி **பொன்-தெய்வநாயகி சோதி** (படம். 19) உரையாற்றினர். அவர் உரையில் குமுகாயத்தில பெண்களுக்குள்ள சிறுமைகளைக் கூறி, மகளிர் அவற்றைத் தவிர்த்து எப்படிக் குமுகாய நிலையில் ஈடுபட வேண்டும் என்பது பற்றியெல்லாம் விரித்துப் பேசினர். அவரையடுத்து, புலவர். **கார்குழலம்மை** இலக். இ அவர்கள 'கலைவளர்ச்சியில் மகளிர் பங்கு' என்பது பற்றி உரையாற்றினர்கள். அவர்கள் உரையாற்றுகையில், கலை, தொழிலியற்கலை, கவின்கலை என்று இருவகையானது என்றும், தொழிலியற்கலை ஒரு நாட்டு வளர்ச்சிக்கு மிகத் தேவையானது என்றும். கவின்கலை மனநலத்திற்காகப் பயன்படுத்தப் பெறுவது என்றும், ஆனல் இக்காலத்தில் அது வெறும் பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தப் பெறுகிறது என்றும். இன்னும் கலைகளின் கூறுகளையும், அவற்றின் நன்மை தீமைகளையும், அவற்றில் மகளிர் பங்கு என்ன என்பது பற்றியும் விளக்கமாகப பேசினாகள. ஆனல் அவர்கள் உரை யாருக்கும் சரிவரக் கேட்க இயலாமற் போனது வருந்தத் தக்கது.

படம். 19

அவரையடுத்து, இசைக் கோலக் கலைஞரும் சிறந்த ஓவிய அறிஞரும் ஆகிய திரு. **சாவி தம்பிராசு** (படம். 20) அவர்கள் இசைக்கோலம்' என்னுந் தலைப்பில் மிக அருமையான, நுட்பமான கருத்துகளை வெளிப்படுத்தினாகள. இசைக்கும் கோலத்திற்கும் உள்ள தொடர்புகள் பற்றியும், ச,ரி,க,ம,ப,த, என்னும் ஏழு இசையெழுத்துகளினின்று பிறக்கும் பண்கள்

படம். 20

www.thamizham.net - Free E book No 7516

எவ்வாறு அளவிறந்தனவாக உருவாகின்றனவோ, அவ்வாறே அவை சான்ற ஏழுபுள்ளிகளினின்று அளவிறந்த கோலங்கள் உருவாகும் வியப்பினை எளிய முறையிலே எடுத்து விளக்கினார். அவர் பேச்சு மிகப் பயனுடையதாக விருந்தது ஆனால் பொதுமக்கள் அவர் பேசிய கருத்துகளில் அவ்வளவு கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. அவர் போலும் கலைஞர்கள் அருகி வரும் இந்நாளில், எவரெவரையோ அரசக் கலைஞராக ஏற்று உதவும் அரசு, அவரைப் பயன்படுத்தி, மறைந்து வரும் கோலக் கலையை மக்களிடை வளரச் செய்தால் என்ன ? பார்ப்பனர் ஒருவரிடம் இக் கலைத்திறன் இருந்திருப்பின் அவர் வெளிப்பாடும், புகழ்பாடும், பயன்பாடுமே வேறு வகையாக உலகமெல்லாம் முரசு கொட்டியிருக்கும். தமிழரிடையில் தோன்றும் அறிஞர்கள் மதிக்கப் பெறாமல், தமிழினம் எவ்வாறு முன்னேறும் ?

ஓவியக் கோலப் புலவரை யடுத்து, திருவாட்டி **மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்** அவர்கள் முடிவுரை யாற்றினார்கள். அவர்களின் முடிவுரை மிகவும் மனத்தைக் கிளர்விப்பதாகவும், தமிழீழப் போராட்டத்தில் அனைவரையும் ஈடுபட ஊக்குவிப்பதாகவும் இருந்தது. முடிவுரையிலும் அம்மையார் தம் இசைத்திறனை வெளிப்படுத்தினார். அம்மையாரின் முடிவுரையில், தமிழ்க் கலைகள், பண்பாடுகள் இவற்றைப் பற்றியும் அவற்றை மீண்டும் புதுப்பிப்பது பற்றியும் குறிப்பிட்டார். மேலும் அவர் பெண்களின் நடனக் கலையாகிய பரத நாட்டியம் இன்றைக்குத் தமிழர் கலை இல்லை யென்று சொல்லப் பெறும் அளவிற்கு நாம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம் என்றும், இப்பொழுது நம்மிடையில் வழங்கி வரும் இசை, நடனம் அனைத்தும் தமிழர்களுக்கே சொந்தமான கலைகள் என்றும், அக் கலைகள் உலகெங்கும் பரவியுள்ள தமிழர்களிடையே ஓர் இணைப்புத் தொடர்பாகவும், அவர்களை ஒருவர்க் கொருவர் அடையாளங் கண்டு கொள்ளவும் உதவக் கூடியன என்றும், தமிழீழத்தில் உள்ள தமிழர்களும், இங்குள்ள தமிழர்களும் ஓரினத்தவரே என்பதையும், அங்குள்ள சிங்களவர் நம்மினத்தவரினின்று வேறுபட்டவர்கள் என்பதையும் நம் கலைகளும், பண்பாடுகளுந்தாம் தெளிவாக உணர்த்துகின்றன என்றும், அக் கலைகளையும் பண்பாடுகளையும் கட்டிக் காத்து வளர்க்கக் கூடிய வாய்ப்புகள் இங்குள்ள தமிழர்களுக்கிருப்பனபோல் தங்களுக்கில்லை என்றும், அங்குள்ள நாங்கள் தமிழ்க் கலைகளையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ள விரும்பினால், அவற்றை அரும்பாடு பட்டுத் தேடி எடுத்துக் தொலைப்பட்டு வளர்க்க வேண்டியுள்ளது என்றும், அந்த நிலைதான் உரிமையற்ற நிலையென்றும், ஆனால் அந்த உரிமையெல்லாம் நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள் என்றும், அங்குள்ள தமிழர் தழுவிய சமயங்களுக்கும் ஆதரவற்ற நிலையில்தாம இருக்கிறது என்றும், அவற்றையும் அவை தொடர்பான தமிழர் கோயில்களையும் தாங்களே முனைந்துபாது காத்துக்

www.thamizham.net - Free E book No 7516

கொண்டால் தான் ஆயிற்று என்றும், இல்லையெனில் அவற்றுக்கு அரசு ஆதரவோ உதவியோ கிடைக்காது என்றும், அந்த அளவிற்குத் தாங்கள் உரிமையற்றுக் கிடக்கின்றோம் என்றும் 'இங்கு மகளிர் அரங்கம் நடத்திப் பெண்களைப் பெருமைப் படுத்துகிறீர்கள். பல உடன்பிறப்புகளும் இதில் பங்கெடுத்துக் கொண்டு தங்கள் கருத்துகளைக் கூறினார்கள். உண்மையிலேயே எனக்குப் பெருமையாக இருந்தது; பெண்களின் ஒத்துழைப்பு — இணைந்து பாடுபடும் தன்மை இல்லையென்றால் இல்லறம், நாட்டு நடப்பு எதுவும் நடக்காது என்று நம் அனைவர்க்கும் தெரியும். பெண்களை — திருவள்ளுவர் முதல் பாரதிதாசன் வரை — அனைவரும் பாராட்டுகிறார்கள். அந்தப் பெண்களும் ஆண்களுடன் ஒத்துழைப்புத் தந்தால்தான் நாட்டின் உரிமையையும் மீட்க முடியும் என்று தெரிந்து கொள்ள வேண்டும்' என்றும், அங்குள்ள பெண்கள் அந்த அளவுக்கு உரிமை மீட்புப் பணிக்குத் தங்களை ஒப்புக் கொடுக்கின்றார்கள் என்றும், 'ஆனால் இங்கு நம் தாய்மார்களெல்லாம் தமிழர் கலை, பண்பாடு, நாகரிகம் என்றும், அவற்றை காக்க பெண்களெல்லாம் பாடு பட வேண்டும் என்றும், பேசினார்கள்.'

'உங்களுக்கு வருத்தத்துடன் ஒன்றைச் சொல்கிறேன், அங்கு நம் பெண்களெல்லாம் நெற்றில் பொட்டு வைத்துக் கொண்டு வெளியே போக முடியாது. ஏனெனில் தமிழ்ப் பெண்கள் என்பதை அது சிங்களவர்க்குக் காட்டிக் கொடுத்து விடும். தமிழ்ப் பெண்கள் பொதுவாக வெளியே போக முடியாது. அந்த அளவுக்கு நாங்களெல்லாம் உரிமையற்ற நிலையில் இருக்கிறோம். இங்கிருக்கிற பொழுது, நான் சொந்த வீட்டில் இருப்பது போல் இருக்கிறேன். ஆனால் கொழும்புக்குப் போக வேண்டும் என்று நினைக்கும் பொழுது எனக்கு அச்சமாக இருக்கிறது. அந்த நிலையில் அங்குத் தமிழ்ப் பெண்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது' என்றும், 'இதை நான் மிகைப்படுத்திக் கூற வில்லை' என்றும் கூறி, இதுபோலும் கருத்தை எடுத்துக் கூற எனக்கு இம் மாநாட்டில் ஒரு வாய்ப்பைக் கொடுத்தது மன்றி, தலைமைப் பொறுப்பையும் கொடுத்த ஐயா அவர்களுக்கு என் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன் என்றும் குறிப்பிட்டு ஒரு பாடலையும் பாடி முடித்தார்கள்.

அவர்களின் உரைக்குப் பின்னர் இறுதியாகப் பேசிய பாவலரேறு அவர்களின் சிறப்புரையில், அடுத்து நடைபெறப் போகும் கலைநிகழ்ச்சிகளின் சிறப்பைக் கூறி, அவற்றை அனைவரும் தவறாமல் இருந்து கேட்க வேண்டும் என்றும், திருவாட்டி மங்கையர்க்கரசியார் அவர்களின் உரைச் சிறப்பையும் குரலிசைச் சிறப்பையும் பாராட்டி நன்றி கூறியும் உரையைத் தொடர்ந்தார்கள். அதன் சுருக்கம் வருமாறு:

www.thamizham.net - Free E book No 7516

"இவ்வரங்கிற்குத் தலைமையேற்றுச் சிறப்புப் படுத்திய தமிழீழ விடுதலை மறத்தி திருவாட்டி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் தமிழீழத்தில் நடைபெற்ற — நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தமிழின அழிப்பையெல்லாம் ஒரு தாயின் பதைப்போடு இங்கெடுத்துக் கூறினார்கள். தம் இன மக்களெல்லாம் படும்பாட்டை நேரில் பார்த்து, உணர்ந்து நெஞ்சம் கொதித்து ஒரு தாய் எத்துணைத் துடிதுடித்துப் போவாரோ அந்த உணர்வோடும் துடிப்போடும் கொதிப்போடும் அதை இங்குக் கூறும்பொழுது நம் நெஞ்சமெல்லாம் மருகி நின்றது. இந்த மகளிரரங்கத்திற்கு மறைமலையடிகளாரின் மகளார் திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் அரங்கம் என்று பெயர் சூட்டப் பெற்றுள்ளது. நீலாம்பிகையம்மையார் தம் வாழ்நாள் முழுவதையும் தமிழ்த் தொண்டுக்கே ஈகம் செய்து கொண்ட பெருமை மிக்கவர். அவருடைய பெயரால் அமைந்த அரங்கத்தில் நடைபெறும் இம் மகளிர் மாநாட்டுக்குத் தமிழ் இன விடுதலைக்காகவே உழைத்து வரும் ஒரு வீரத்திருமகள் தலைமையேற்க வேண்டும் என்னும் நோக்கத்துடன்தான் திருவாட்டி மங்கையர்க்கரசியை நாங்கள் அழைத்தோம். அவர்களுடைய விறுணர்வையும் தமிழினப் பற்றையும் இங்கு நேரிடையாகப் பார்த்தீர்கள்.

அடுத்து, இந்த மாநாட்டிற்குத் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அன்பர்கள் ஏராளமாக வந்திருக்கிறீர்கள். அதற்காக நாங்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். தமிழ் நாட்டில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்த மழையாக இருந்தும் அவர்கள் துன்பத்திற் கிடையிலும் இடர்ப்பாடுகளுக் கிடையிலும் இங்கு வந்து மாநாட்டில் பங்கு கொண்டமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் வந்திருக்கின்ற அன்பர்கள் தங்கள் குடும்பத்தினரையும் அழைதது வந்திருந்தால் இன்னும் சிறப்பாகவும் பயனாகவும் இருக்கும். ஏனெனில் 2000, 3000 ஆண்டுகளாக நாம் பட்ட அடிமைத்தனத்தையும் இழிவையும் போக்குவதென்றால், மனைவி மக்களை விட்டு விட்டு நாம் மட்டும் தனித்து முயன்றால் அது முடியாது. அவர்களுக்கும் பொதுவுணர்வு ஊட்டப் பெறுதல் வேண்டும். கணவனும் மனைவியுமாகப் பொதுத்தொண்டில் ஈடுபடுகின்ற தேவை இன்றியமையாமை தமிழினத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஓரினம் தன உரிமைகளை மீட்க ஒட்டு மொத்தமான முயற்சியில் ஈடுபடும் பொழுதே வெற்றி வாய்ப்புகள் எளிதில் கிட்டும். வெளியூர் அன்பர்கள் குடும்பத்துடன் வரவியலாமற் போயினும் உள்ளூர் அன்பர்களாகிலும் அவ்வாறு செய்திருந்தால் அது நம் கொள்கையுறுதிக்குப் பெருமை சேர்ப்பதாக இருந்திருக்கும். இந்த நிலையினால் எனக்குத் தெரிகிறது என்னவென்றால், நாம் இன்னும் பெண்களை அடிமை நிலையிலேயே வைத்திருக்கிறோம் என்பதே. தமிழனே அடிமையாக அஃது அரசி

www.thamizham.net - Free E book No 7516

யலாயினும், பொருளியலாயினும், குமுகாய வியலாயினும், கலை, பண்பாட்டு நிலைகளில் ஆயினும் அந் நிலையில்தான் — இருக்கிறான். அப்படி அடிமையாக உள்ள தமிழனுக்கு அவன் மனைவி மக்களெல்லாம் — அடிமையாக — உள்ளார்கள் என்பதே புலப்படுகின்றது. இல்லெனில் இந்த இன விழிப்பு மாநாடும் இங்கும் பேசப் பெறும் கருத்துகளும் நமக்கு மட்டுமே தேவை என்று கருதுவோமா? கருதி, நம் மனைவி மக்களை அழைத்து வராமல் இருந்திருப்போமா? அருள் கூர்ந்து எண்ணிப் பாருங்கள் நமக்கு அத்தகைய உணர்வு இது வரை இல்லாமலிருந்தாலும், இனிமேலாகினும அது வர வேண்டும். வருவித்துக் கொள்ள வேண்டிக் கொள்கிறேன். ஏனெனில், நம் நாட்டுப் பெண்களுக்கு நாட்டில் என்ன நடக்கின்றது என்று தெரிய வேண்டும. தம் கணவர்கள் எத்தகைய பொதுவுணர்வில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். நம் தொண்டுணர்வுப் பாதையினை நம் பிள்ளைகளும் தெரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நம் முனைப்புகள் -தொண்டு முயற்சிகள்-தடைப்படும் பொழுது,நம் பிள்ளைகள் நம்மைப் பின்பற்றி இந்த மொழிக்கும், இனத்திற்கும் ஏற்பட்டிருக்கின்ற அடிமைத்தனத்தையும் இழிவையும் போக்க முன்வருவார்கள். நம் தலைமுறையில் நம் வாழ்நாள் வரையில் செய்கின்ற முயற்சி, நாம் இல்லாதபொழுது தடைப்படுமானால், நமக்கு அடுத்த தலைமுறை மீண்டும் முன்பிருந்த நிலைக்கே தள்ளப்பட்டு நிலையான அடிமையாகவே போய்விடும். அக்கால் நம் தலைமுறைத் தொண்டும் வீணாகவே போய் விடக் கூடும. நம் தமிழினம் தன்னை அடிமைத் தலையினின்று மீட்டுக் கொள்ள இயலாமல் மீண்டும் மீண்டும் வல்லடிமைப் பட்டுக் கொண்டு கிடப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும் என்பதை அன்பர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவே நம் இனக்கவலை குடும்பத்தின் கவலையாக மாறும் நாளில்தான் இந்த இனம் விடுவிக்கப் பெறும். ஏனெனில் அது குடும்பக் கவலையாக மாறுகிற பொழுதுதான் நம் முயற்சிகளுக்கு அவர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கும். அல்லாவிடில் அவர்களின் எதிர்ப்பிலோ, தடையிலோ நாம் அரைகுறை முயற்சியைத்தான் செய்ய வேண்டியிருக்கும். சிலர் திருமணமானவுடன், இத்தகைய பொதுவுணர்வை யெல்லாம் தடைப்படுத்திக் கொள்வதற்கு இது தான் காரணியம். இளைஞர்களாக இருக்கும் பொழுது நல்ல தமிழுணர்வோடும், தமிழின உணர்வோடும், தமிழ் நாட்டுணர்வோடும் இருந்த இளைஞர்களெல்லாம், திருமணத்திற்குப் பின் மனைவிக்கும் குடும்பத்திற்கும் கட்டுப் பட்டவர்களாகப் போய், மாற்றார்க்கு என்றென்றுமே அடிமைகளென முடங்கிக் கிடக்கின்றவர்களை — அப்படி நாம் அடிமைகளாக இருப்பதையும் அறிந்து கொள்ள முடியாதவர்களாக —விரும்பாதவர்களாக இருக்கும் பலரை-எனக்குத் தெரியும். அதனால்

www.thamizham.net - Free E book No 7516

நான் சொல்கிறேன்; நம் இனம் இன்னும் சரியான முறையில் நம் அடிமைத்தளைகளை உடைத்தெறியும் படியாகச் சரியான பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. இந்தப் பாதையில் சரியானபடி முயலுகின்ற ஒரு குடும்பத்தை எடுத்துக் காட்ட வேண்டுமானால், நம் தமிழீழத் தலைவர் திரு. அமிர்தலிங்கனார் அவர்களின் குடும்பத்தையே எடுத்துக் காட்டலாம். அவர்கள் மனைவியும் தாமுமாகத் இன, நாட்டு விடுதலைக்காக ஈடுபடுவதுமன்றித் தம் இரண்டு மக்களையும் கூட அதில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அவர்களின் மூத்த மகனார் நாடு கடத்தப்பட்டு இலங்கைக்குள்ளேயே காலடி வைக்கக் கூடா தென்று தடுக்கப்பட்டு, இங்கிலாந்திலே குடும்பத்துடன் இருக்கிறார். இன்னொரு மகனார் மதுரையிலே படித்துக் கொண்டு இனத் தொண்டு நாட்டுத் தொண்டு செய்து வருகிறார். அப்படித்தான் நாம் குடும்பம் குடும்பமாக இன மீட்பு முயற்சியில் ஈடுபட வேண்டும். அந்த நிலை உருவாக வேண்டுமானால் இது போலும் பொது மாநாடுகள், மொழி, இன நலம் கருதும் மாநாடுகளுக்கு வந்திருந்து, இங்கு அறிஞர்கள் பேசுகின்ற கருத்துகளைச் செவி மடுக்கச் செய்கின்ற வாய்ப்பை நம் மனைவி மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்; அவர்களை இங்குக் கட்டாயம் அழைத்து வர வேண்டும்.

இவற்றை யெல்லாம் எதற்கு இத்துணை விரிவாகச் சொல்கின்றேன் என்றால், நீங்கள் இங்கிருந்து வீடு திரும்பியவுடன், அங்கு யார் யார் வந்திருந்தார்கள், அவர்கள் என்னென்ன பேசினார்கள், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்றால் என்ன, அதை ஏன் தொடங்குகிறார்கள், அதற்கு என்ன தேவை வந்தது என்றெல்லாம் உங்களை உங்கள் மனைவி மக்கள் கேட்கக் கூடும். இவற்றை யெல்லாம் அவவளவு விரிவாக-அவர்களும் உணர்வு பெற்று, நம்முடன் மொழி, இன நாட்டு முன்னேற்றத்திற்கு ஒத்துழைக்கும் அளவில்-உங்களால் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அப்படி நீங்கள் ஒருவாறு விளக்கிச் சொல்வதாகவே வைத்துக் கொண்டாலும் அவர்கள உங்களை அடுத்துக் கேட்கலாம், 'அப்படியென்ன தமிழுக்கும், தமிழினத்திற்கும் பேரிழப்பு ஏற்பட்டு விட்டது' என்று அதற்கு நீங்கள் விடை சொல்வது அத்துணை எளிதன்று. தமிழினம் எப்படி வாழ்ந்தது, எங்குத் தோன்றியது, என்று தோன்றியது வரலாற்று நிலையில்—அரசியல் நிலையில் — குமுகாய நிலையில் — மொழி நிலையில் அதற்கு ஏற்பட்ட இழப்புகள் என்னென்ன, இழிவுகள் என்னென்ன அவற்றை எப்படிப் போக்குவது, என்னென்ன முயற்சி செய்யப் பெறவேண்டும் — என்பது பற்றி யெல்லாம் விளக்கிக் கொண்டிருக்க உங்களால் முடியுமா ? இங்கு அவர்களை அழைத்து வந்து, இங்கு அவை தொடர்பாகப் பேசப் பெறும் அறிஞர்கள் பலரின் வாயிலாகப் பல்வேறு வகையான விளக்கங்களைக் கேட்பதற்கு நீங்கள் வாய்ப்பேற்படுத்திக் கொடுத்தால், அவர்களும் அவற்றைத் தெரிந்து கொள்ளவும், பொதுத்

www.thamizham.net - Free E book No 7516

தொண்டில் ஈடுபட்டவும் அதன் வழி நம் முயற்சிகளுக்குத் துணை நிற்க வும் இயலுமே! இல்லையானால் என்றிருந்தாலும் அவர்கள் நமக்குத் தடையாகத்தானே இருப்பார்கள். மாறாக, அவர்கள் நல்லுணர்வு பெறுவதுதான் எப்பொழுது? நம்மின மீட்புக்கு அவர்கள் உதவுவது அல்லது துணை நிற்பது தான் எப்பொழுது? நம்மினம் அடிமைத் தளையிலிருந்து மீள்வதுதான் எப்பொழுது? எண்ணிப் பாருங்கள். எப்படியும் ஒட்டு மொத்தமான ஓர் இன முயற்சி செய்யப் பெற்று லொழிய நம்மினம் தனக்கு வய்த்த இழி நிலைகளினின்றும் இழப்பு நிலைகளினின்றும் மீள்வது மிகக் கடினமாகும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். (பாவலரேறு அவர்களின் உரையின் பிற பகுதிகள் பின்னர் வரும்).

பாவலரேறு அவர்கள் பேசி முடிந்த பின், அடுத்த கலை, இசை நிகழ்ச்சிகளுக்காக ஒரு பதினைந்து நிமையம் இடைவெளி விடப் பெற்றது. அக்கால் மணி 8 ஆகியிருந்தது.

சுந்தரேசனார் இன்னிசை அரங்க நிகழ்ச்சி
('வீரத்தாய்' நடிப்புரை நிகழ்ச்சி)

இஃதோர் அருமையான நடிப்புரை நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சி இரவு 8 மணி போல் தொடங்கியது. புறநானூற்றின் வீரத்தாய் ஒருத்தி தன் தந்தையையும் கணவனையும் போருக்கனுப்பி, அவர்கள் போரின்கண் இறந்துபட, விளையாடிக் கொண்டிருக்கும் தன் ஒரே அறி வறியாச் சிறுவனையும் போருக்கு அனுப்புகிறாள் (புறம்.279) அவன் போரில் இறக்கிறான் அவன் புறமுதுகிட்டிறந்ததாய்ச் சிலர் பழியுரைக் கின்றனர். அதைக்கேட்கப் பொறுளாய் அவள் போர்க்களத்திற்கு வாளொடு செல்கிறாள். போகும்பொழுது, தன் மகன் மண்டமர்க் களத்தே முதுகில் புண்பட்டிறந்திருப்பானுபின், அவன் உண்ட தன் மார்பை அறுத்தெறிவதாய் வஞ்சினம் கூறுகிறாள். அதே வேகத் துடன் போர்க்களம் சென்றவள் அங்குள்ள பிணங்களையும் குற்று யிராய்க் குலையுயிராய்க் கிடந்தவர்களையும் வாளால் புரட்டிப் பார்க்கிறாள். இறுதியில் தன் மகன் மார்பில் புண்பட்டு மாண்டிருந் ததைக் கண்டு, அவனை ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தாள் (புறம். 278)

புறநானூற்றில் மேற்சுட்டிய இரண்டு பாடல்களிலும் அடங்கி யுள்ள இவ்விரண்டு செய்திகளையும் ஒன்றுபெற இணைத்து அழகிய உரையாக அன்பர் ஒருவர் எழுதியிருந்தார். அவரின் திருமகள் செல்வி நற்செல்வி (அகவை 12 இருக்கும்) வீரத்தாயாக வீறுபெற உரைமுழக்கி அருமையாக நடித்துக் காட்டினாள். அவளின் சொல் பலுக்கல் அழகும், அதில் கலந்த வீறுணர்வும், அவ்வுணர்வொடு கலந்த மெய்ப்பாடும் அவையோரை மெய்சிலிர்க்க வைத்தன

www.thamizham.net - Free E book No 7516

அனைவரும் அச் சிறுமியின் நடிப்பிலும் உரைமுழுக்கத்திலுமே வைத்தக்கண்ணும் செவியும் வாங்காமல் பார்த்து மகிழ்வெய்தினர். திரைப் பின்புல உரையை **செங்கதிர்ச் செல்வி** (அருணா) (அகவை 14 இருக்கும்) மிக இயற்கையாகப் பொருள் தெளிவுடனும், உணர்வு வெளிப்பாட்டுடனும் படித்தாள். செங்கதிர்ச் செல்வியின் பின்னுரையும், நற்செல்வியின் நடிப்பும் இன்றைய திரைப்பட நடிகர்கள் சிலரையும் தோற்கடித்தன. அற்றைநாள் காட்சி கண்ணெதிரிலேயே நடப்பது போலும் அத்துணை இயற்கையாக இருந்தது. வீரத்தந்தையாக சிறுவன் (அகவை 9) **தமிழ்ச் செம்மலும்**, வீரத்தாயாக **சிறுமி** (அகவை 11) **இசைமொழியும்** நன்றாக நடித்தனர். இதில் வீரமகளாக சிறுமி (அகவை 8) **அங்கயற்கண்ணி** மிகவும் சிறப்பாக, இயற்கையாக நடித்தாள். தாய் தன், வீர மகளிடம் பாட்டனும் தந்தையும் போர்களத்தில் இறந்த செய்தியைக் கூறி, 'நாட்டையும் மொழியையும் காக்க நீயும் போர்க்களம் புறப்படு' என்று கூறிய பொழுது வீரமகளாக நடித்த சிறுமி அங்கயற்கண்ணி' தன் தாயிடம், 'கவலைப்படாதேயுங்கள் அம்மா; 'போர்க்குச்' சென்று வருவேன்; வென்று வருவேன்' என்று கூறிய காட்சி, உடலைப் புல்லரிக்க வைத்தது. இந்தநிகழ்ச்சியைக் கண்டு அவையோர் அனைவரும் மிகவும் உணர்வும் உவகையும் பெற்றனர். அவர்கள் காட்சி முடிவில் மகிழ்ந்து நீண்ட கையொலி செய்தது அவையைக் கலகலப்பாக்கியது. காலை முதல் அறிஞர்களின் சொற்பொழிவால் சுமை நிறைந்திருந்த அவர்கள் நெஞ்சம், இந்நிகழ்ச்சியால் சுமை நீக்கம் பெற்றுப் பேருவகையும் புத்துணர்வும் பெற்றன எனலாம். இந்நிகழ்ச்சியை நம் மாநாட்டுச் செயற் குழு உறுப்பினருள் ஒருவரும், ஆற்றல் மிக்கவரும் இன நல நாட்டத்தில் யாருக்கும் சளைக்காதவரும், உண்மையான திரவிட இனப் பற்றுளரும், வரலாற்றறிவு நிரம்பப் பெற்றவருமான திரு. அருட்கையன் (கருணாகரன்) அவர்கள் அமைத்திருந்தார். அவர்களுக்கு அனைத்து உள்ளங்களும் நன்றி கூறின. மொத்தத்தில் இந் நிகழ்ச்சி அடுத்து நடைபெற விருந்த '**இயக்க மெல்லிசை நிகழ்ச்சிக்கு**க் கட்டியங் கூறி நின்றது எனலாம்.

இயக்க மெல்லிசை நிகழ்ச்சி

எப்பொழுதும் நம் சார்பில் மாநாடுகள் நடத்தினால் 'இயக்க மெல்லிசை நிகழ்ச்சி' ஒன்று கட்டாயம் இருக்கும். மாநாடுகள் இரண்டு நாட்கள் என்றால், முதல் நாளிரவில் இசை நிகழ்ச்சியும், இரண்டாவது நாள் நாடகமும் இருக்கும் இக்கால் உதமுக. மாநாடு இரண்டு நாட்களாக இருந்தும், இயக்க மெல்லிசை நிகழ்ச்சி மட்டும் முதல் நாளிரவில் வைக்கப் பட்டது நாடகம் தவிர்க்கப் பெற்றது. வெளியூரிலிருந்து வரும் குடும்பங்கள், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் புறப்படும் பரபரப்பில், கலை நிகழ்ச்சியையோ நாடகத்தையோ பார்த்துக்

www.thamizham.net - Free E book No 7516

கொண்டிருப்பதை அவ்வளவு பெரிதாகக் கருத மாட்டார்கள் என்பதால், நாடகம் தவிர்க்கப் பெற்று, இசை நிகழ்ச்சியும் முதல் நாள் இரவிலேயே வைக்கப் பெற்றது

இதுகாறும் நடந்த நம் மாநாடுகளில் இசை நிகழ்ச்சியை, நெய்வேலி தென்மொழியன்பர் திரு. **தனிமகன்** அவர்களின் தலைமையில் இயங்கிய 'செந்தமிழ் இசைக் குழு'வைக் கொண்டு நடத்தினோம். இக்கால் அக் குழுவிலுள்ள பாடகர்கள் கலைந்து போய் வேறு வேறு ஊர்களில் வாழ்ந்து வருவதால் அவர்களை ஒன்றிணைக்க இயலாமல் உள்ளது என்று குழுத்தலைவர் தெரிவித்தார். அதனால் வேறு ஒருவரைத் தேட வேண்டியிருந்தது. சென்னையில் நிறைய இசைக் குழுக்கள் இருக்கின்றன. இரண்டோர் இசைக் கலைஞர்களை அணுகினோம். ஒருவர் நிறைய தொகை கேட்டார். கருவி இசைஞர்களுக்கு வேறு தனிக் கட்டணம் கொடுக்க வேண்டும் என்று தெரிந்தது. பிறிதொருவர் அவ்வளவு பொருத்தமாக அமையவில்லை. வேறு இசைக் குழுக்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம். இடையில் நம் **அருட்கையன்** அவர்களே, இளம் இசையமைப்பு இயக்குநர் **சீர்பதி** அவர்களை அழைத்து வந்தார். அவர் நம் கொள்கைப் பாடல்களைப் உடனே தெரிந்தெடுத்த சில பண்களில் கணீரென்ற குரலில் பாடிக் காட்டினார். அவர் குரலினிமையும், பாடல்களைப் பாடிய முறையும், சொற்களைப் பலுக்கிய நிறைவும், பாடலடிகளையும் சொற்களையும் பொருளும் உணர்வும் சிதையாமல் பாடிய திறமையும் கண்டும் கேட்டும் வியந்து போனோம். ஆனால் ஒரேயொரு பொருந்தாத நிலை இருந்தது, சீர்பதி பார்ப்பனர் என்ன செய்வது? செயற் குழுவில் ஆய்வு நடந்தது. ஓரிருவர் கடுமையாக மறுத்தனர். சிலர் அதனால் தாழ்வில்லை என்றனர். இறுதியில், அவர் யாராக இருந்தாலும் முதலில் அவர் ஒரு கலைஞர்; அடுத்து, நம் கொள்கைப் பாடல்களை (அவற்றில் ஆரிய எதிர்ப்புணர்வு இருப்பினும்) பாடுதற்கு இசைகிறார்; மூன்று அவரே பண்ணமைக்கும் திறம் வாய்ந்தவர்; நான்கு அவரே கருவி இசைஞர்களையும் அமர்த்திக் கொள்ள முன் வருகிறார். இனி, ஒலிபெருக்கி அமைப்பையும் நம்மிடம் விடாமல் அவரே பார்த்துக் கொள்வதாகக் கூறுகிறார். இத்தனைக்கும் மேலாக அவரிடம் நாம் பேசி, ஒப்புக் கொள்ளப் பெற்ற தொகை எல்லா நிலைகளையும் எண்ணிப் பார்த்த பொழுது ஓரளவு குறைவே. குறைவில்லையென்று கொண்டாலும் மிகுதியில்லாமல் இருந்தது தெரிந்தது.

இனி, இதற்கு மேலும் நாம் ஆராய்வதற்கு என்ன இருக்கிறது. மாநாட்டுக்கு இடையிலிருந்த நாட்களோ மிகவும் குறைவு. அதற்குள் நம் பாடல்களுக்குப் பண்ணமைத்துப் பயிற்சி பெற்று, ஒத்திகை நடத்தி மாநாட்டுக்கு அணியமாவதென்றால் மிகவும் கடினம். வேறொருவரும் இனிமேல் பார்க்க வேண்டும். அவர் பொருந்த வேண்டும்; நம் பாடல்களுக்குப் பண் அமைக்க வேண்டும்; அவர்

www.thamizham.net - Free E book No 7516

கேட்கும் தொகை நமக்கு ஒத்து வருவதாய் இருக்க வேண்டும்: அவற்றுக்கு மேல் கருவி இசைஞர்கள், ஒலிபெருக்கி, விளக்கு அமைப்புகள், போக்கு வரத்துகளை — எல்லாவற்றையும் தேடிப் பிடித்துக் கட்டமைப்பதென்றால், அவ்வளவு எளிதிலலை என்று உணரப் பெற்றது. இனி. இதன் மேலும் ஒருண்மை இருந்தது. நம் இனவீடணர்கள் பார்ப்பனர்களுக்காக- அவர்கள் கொள்கைக்காகப் பயன்படும் பொழுது. தூய தமிழ் இசையாற்றலுள்ள ஒருவரை பார்ப்பனர் என்பதற்காக நாம ஏன் தள்ள வேண்டும்? அவரை நாம் மட்டும் ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? என்பதுதான் அவ்வுண்மை. இறுதியில் சீர்பதியே இசைக்குழுவுக்கெனத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

நம்மைப் பொறுத்த வரையில் அவர் இசையறிவை நாம் விலை கொடுத்து வாங்கிக் கொள்கின்றோம். அதில் தவறென்ன? பார்ப்பனர் கடையில் உள்ள பொருளை நாம் வாங்குவதில்லையா? அவர்களின் உண்டிக் கடைகளைத் தேடிப் பிடித்து நாம் சுவைக்கச் சுவைக்க உண்பதில்லையா? அவர்கள் கற்பிக்கின்ற பொழுது நாம் கற்பதில்லையா? அவர்கள் வைத்து நடத்தும் பள்ளிகளில் நாம் பயில்வதில்லையா? அல்லது நம் பிள்ளைகளை அங்கு அனுப்புவதில்லையா? இனி, அவர்கள் நடத்தும் சவளிக் கடைகள், நகைக் கடைகள், பல்பொருள் கடைகள், குளம்பித்தூள் கடைகள் இன்னும் பல்வேறு கடைகளில் போய் நாம் முண்டியடித்துக் கொண்டு பொருள்கள் வாங்குவதில்லையா? எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களால் எழுதப் பெற்று, பிடிக்கப் பெற்று, இசையமைக்கப் பெற்று, இயக்கப் பெற்றுள்ள திரைப் படங்களை நாம் பார்ப்பதே இல்லையா? இனி, அனைத்துக்கும் மேலாக அவர்கள் கதை யெழுதுகிற, நடத்துகிற குமுதம், ஆனந்த விகடன், துக்ளக், இதயம், மயன், தினமணிக் கதிர், சாவி, இன்னும் நம்மவரே முதலிட்டு நடத்த, அவர்களே இருந்து அவர்கள் மொழியில் எழுதி நடத்தி வருகிற குங்குமம் முதலியவற்றை, ஏதோ ஒரு காரணம் காட்டி வாங்கிப் படித்துச் சுவைக்காதவர்கள் எத்தனைப் பேர்? இனி, இன்னொன்றையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கபிலர், பரணர், பரிமேலழகர் முதலிய எண்ணிறந்த புலவர் பெருமக்களின் பாடல்களையும் இலக்கியங்களையும் நாம் படித்துத் தமிழுணர்வும் அறிவுணர்வும் பெறுகின்றோமா, இல்லையா? இவற்றையெல்லாம் நாம் நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

இத்தனைக்கும் சிரீபதி நம் இயக்கப் பாடல்களை — நம் கருத்து நிரம்பியவற்றை — அவை அவர் இனத்துக்கு மாறாக இருந்தாலும் — இசைக்காக — கலைக்காக — அல்லது காசுக்காக என்றே வைத்துக் கொண்டாலும் — மனமுவந்து — சிறிதும் மனம் கோணாமல் - முகம் சுளிக்காமல் பாடுகிறேன் என்று முன்வந்ததை நாம் வரவேற்கவே வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7516

இவ்விடத்தில் நாம் ஒன்றைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பார்ப்பனீயம் என்பது பார்ப்பனர்கள் அறிந்தோ, அறியாமலோ, நேர்மையாகவோ சூழ்ச்சியாகவோ கடைப்பிடித்து வரும் ஓர் இனக் கொள்கை. அக் கொள்கை காலத்திற்கும், அறிவுக்கும், அறிவியலுக்கும் வாழ்வியலுக்கும், மாந்தநேயத்திற்கும், வேறு எதற்குமே பொருந்தாத காட்டுவிலங்காண்டிக் கொள்கை கண்மூடித் தனமான, மூடத்தனமான, மக்களை இழிவு படுத்துகின்ற கொள்கை. அந்த உண்மையை வேண்டுமென்றே பார்ப்பனர்கள் உணர மறுக்கின்றனர்; அல்லது உணர்ந்தாலும், ஒப்ப மறுக்கின்றனர்; அல்லது ஒப்பினாலும் தங்கள் பழங்கொள்கையின் ஆழமான சில மரபுகளைக் கைவிட மறுக்கின்றனர். ஆனால் அதே அடிப்படையில் அவர்களில் திரிந்து வருகின்ற மனம் மாறி வருகின்ற சிலரை நாம், அருவருத்து ஒதுக்கி வைக்கின்ற நிலை அறிவாகாது; அறிவியல் சிந்தனைக்கும், மெய்யறிவியலுக்கும், பொருந்தாது. எனவே நாமும் நம் முரட்டுத்தனத்தை மாற்றிக் கொள்ளவே வேண்டும். மாறி வர விரும்புகின்றவர்களை வரவேற்பதே நம் பண்புடைமை! ஓர் இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக ஓர் ஆளையோ ஆள்களையோ விரும்பாத — அல்லது வெறுக்கிற — அல்லது பழக மறுக்கின்ற தன்மை பச்சைக காட்டு விலங்காண்டித் தன்மையே! பிறகு நாம் எப்படித் தாழ்த்தப்பட்ட மக்களைச் சமமாகக் கருத முடியும்? இனி, நம் தமிழின மக்களில் மன நிலையாலும், பண்பு நிலையாலும், நடைமுறை நிலையாலும் இனக்கேட்டு நிலையாலும் எத்தனை வெறுக்கத்தக்கவர்கள் உளர்? அவர்களையெல்லாம் தமிழர் என்று கொள்வதை விட, நம் கொள்கைப் பாடல்களைப் பாடுபவரை — தொகை வாங்கிக் கொண்டு — ஒரு கருவி போல் — நாம் பயன்படுத்திக் கொள்வதில் என்ன பிழையிருக்க முடியும் என்று நமக்கு விளங்கவில்லை. இவற்றையெல்லாம் சிந்தித்துத் தெளிந்த பின்னரே, ஒருவர் தமிழுக்கோ தமிழின வளர்ச்சிக்கோ பயன்பட முடியும்! எனவே **சிரீபதி**யிடமே இசைக் குழுவின் பொறுப்பு, ஒப்படைக்கப் பெற்றது. பாடல்கள் தேர்தெடுத்துத் தரப்பெற்றன. அவரும் இடையிடையில் வந்து, தாம் அமைத்த பண்ணையும அதற்குரிய பாடல்களையும் பாடிக் காட்டி, இசைவுபெற்றுச் சென்று கொண்டிருந்தார்.

இறுதியில அவர் நம் மாநாட்டு மேடையிலேறிப் பாடும் நேரமும் நெருங்கியது. பாடல் குழு அணியமானது. அன்று (7-11-81) முன்னிரவு 8-45 மணியளவில் இசை தொடங்கியது.

மரபிசைப் பாடல்கள் பொங்கி வழிந்தன. தென்மொழிப் பாடல்கள் அவற்றுக் கேற்ற பண்களுடன் இசையருவியாய்க் கொட்டின. அவற்றிலுள்ள கருத்துகள் உயிர் பெற்று அனைவர் நெஞ்சங்களிலும் பாய்ந்தன. அவர்களை உணர்வு பெறச் செய்தன. கூட்டம் மெய்ம்மறந்து, தமிழிசையிலும் கருத்து மலர்ச்சியிலும் உள்ளத்தைப் பறி கொடுத்தது. கூட்டத்திலிருந்த அனைவர் தலை

www.thamizham.net - Free E book No 7516

களும் தமிழிசை மகுடியில் ஆடின. சீர்பதி தொடக்கத்தில் மேடையின் முன் வந்து நின்று, இசைத் தெய்வத்தின் தூதுவன் போல், பாவலரேறு அவர்களின் 'விரிவிசும்பை' என்று தொடங்கும் இறை வாழ்த்தைப் பாடிய பொழுதும், 'அன்னை மொழியே' என்று தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தை இசைத்த பொழுதும், அவையோர் வியப்பெய்தினர்; மெய்ம்மயிர் பொடிந்தனர்; உடல் கிளர்த்து உள்ளம் ஒன்றினர். தென்மொழிப் பாடல்கள் உயிர் பெற்று ஒவ்வோர் உள்ளத்திலும் களி நடம் புரிந்தன. தமிழீழத் தலைவர் **அமிர்தலிங்கனாரும் மங்கையர்க்கரசியும்** தாங்கள் விடுதலை பெற்ற தமிழகத்திலேயே இருப்பதாய் உணர்ந்திருத்தல் வேண்டும். முகத்தில் மலர்ச்சியும் அகத்தில் எழுச்சியும் பொங்க ஒவ்வொரு பாடலுக்கும் கூட்டம் எழுப்பிய கையொலியோடு தங்கள் கையொலியையும் இணைத்தனர் அடிக்கடி அருகிலிருந்த பாவலரேறுவிடம் 'இசை நிகழ்ச்சி மிகவும் அருமை; பாடல்கள் உயிர் பெற்றுத் திகழ்கின்றன. இப்படிப் பட்ட இசை நிகழ்ச்சியை ஊர் தோறும் நடத்த வேண்டும். தமிழீழத்திற்கும் இந்நிகழ்ச்சி நடத்தப் பெறவேண்டும்' என்று கூறிக் கொண்டிருந்தனர். தம் இன்னிசைக் குரலால் அனைவரையும் மகிழவைத்த மங்கையர்க்கரசியம்மையாருக்கு மகிழ்ச்சி தாளவில்லை. உணர்வெழுச்சியால் அடிக்கடி தம் கணவரிடம் இசையையும் பாட்டின் கருத்துகளையும் பற்றிப் பரிமாற்றம் செய்து கொண்டேயிருந்தார். சீர்பதியின் கருவிக் குழுவினர் இசை வெள்ளத்

பாவலர்க்குள் ஏறுகும் சித்திரனார்!

பாவலர். ஆ. பு. திருமாலன் — செலாமா.

தூயதமிழ் வளர்ச்சிக்குத் துறைதோறும் கடனாற்றும்
துரையே! மேலாம்
ஆயதமி ழினத்திற்கும் அம்முறையே காணற்கிங்(கு)
ஆர்த் தெழுந்து
பாயுமோ ரரிமாவே! பைந்தமிழால் பகைநடுங்கப்
பா வெடுத்துச்
சாயுமா றடிக்கின்ற சான்றாண்மைக்
கென் தலையைத் தாழ்த்துவேனே!
நடுக்கமிலா நெஞ்சுரமும் நலிவில்லாச் சிந்தனையும்
நலம் பெருக்க
அடுக்கடுக்காய்த் துன்பங்கள் அடுத்தடுத்துக் கோடுபோ
லெழுந்திட் டாலும்
மிடுக்குடனே தோளுயர்த்தித் தாவலெனும் வில்லெடுத்துக்
கணைகள் பூட்டித்
தொடுக்குமோ ராசிரிய உரையொன்றே துணையாகும்
தமிழர்க் கென்பேன்!

www.thamizham.net - Free E book No 7516

தையே உருவாக்கினர். கருவிகள் இசையுடன் ஒத்தியங்கி உணர் வலைகளை எழுப்பினர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில், 'சிந்து மணற் பரப்பில் சிற்றில் விளையாடி' என்று வரும் அடி பாடப்பெறு கையில், கருவிகள் ஒரு குழந்தையின் சிறுகால் நடைக்கு ஏற்ப கிண் கிணிச் சதங்கையொலி யெழுப்பிச், சிற்றில் விளையாட்டை அவை யோர் முன் கொணர்ந்து நிறுத்தின. 'காட்டுப் புலியடி என் மகன்' பாடலுக்கும், 'என் மொழி என்னினம்' பாடலுக்கும் சிரீபதி அமைத் திருந்த பண்கள் அவையோரை உடல் சிலிர்க்கச் செய்தன. இனி, சிரீபதியுடன் பாடிய திருச்சி உலகநாதனின் மகன் **திருச்சி தியாக ராசனும்** இன்னொரு பாடகரும் பாடிய பாடல்களும் சிறப்பாகவே அமைந்திருந்தன. இப்படி, இதுவரை நாம் அமைத்த அனைத்து மாநாடுகளிலும் வாய்க்காத சிறப்பு நிகழ்ச்சியாக இவ்விசை நிகழ்ச்சி இருந்தது. ஏறத்தாழ இரண்டு மணி நேரம் பெரியார் திடலே இசை மழையில் நனைந்தது.

மொத்தத்தில் முதல் நாள் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாகவே அமைந்திருந்தன. மாணவர் மன்றம், மகளிர் அரங்கம், இபக்கப் பாடல் இசை நிகழ்ச்சி, சிறுவர் சிறுமியரின் 'வீரத்தாய்' நடிப்புரை நிகழ்ச்சி, இறுதியாக நடந்த சிரீபதிக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி அனைத்தும் சிறப்புற — மிகவும் நிறைவுறத் தக்க வகையில் அமைந்திருந்தன. முதல்நாள் மாநாடு அனைத்து நிலைகளிலும் சிறப் புற்றிருந்தது என்று கூறும் பொழுது, முன்னூர் விடியலில் நடந்த

வேராகும் தமிழர்ப்பண் பாட்டிற்குக் காப்பியமும்
தொகைநூ லெட்டும்
நேராகும் படியெமக்கு நீட்டுவித்தார் 'மாணிக்கம்'
நூலா சிரியம்!
பேராகும் பாவலர்க்குள் ளேறுகும் சித்திரனூர்
பாவாண்மைக்கே
யாராகும் படிநிற்பர் பாவேந்தர் போற்றியநம்
பாவலர்க்கே!

(தனித்தமிழும் இனமும் தழைக்கத் தாளாண்மை தளராமல் உழைத்து வரும் பாவலரேறு ஐயா அவர்கட்குத் தமிழ் சான்ற வணக்கம் கூறி வரைவது :-

விடுக்கப் பெற்றுள்ள பா புகழுரையன்று, என்னகத்தெழும் உணர்வுக் கீற்றே! நலிந்து கொண்டிருக்கும் தமிழர்க் குமுகாயத் தனி நிலைக்குப் பாடாற்றும் தலைவர்கள் வேவ்வேறு திசை நோக்கித் தங்கள் செலவை மேற்கொள்ளும் இவ்வேளையில், தனித் தமிழின வெழுச்சிக்கு வழிக்காட்டும் தனி நெறியாளுமைத் தலைமைக்குத் தக்கார் தாங்கள் தாம் என்றுணர்ந்து கொண்ட உள்ளத்தின் எழுச்சி யலைகளே அவை என்பதைப் பணிவன்புடன் கூறிக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். — **அ. பு. திருமாலன்**)

www.thamizham.net - Free E book No 7516

ஒரு பொருந்துயர நிகழ்ச்சியை நினைவு கூராமல் இருக்க வியலாது. நம் தென்மொழி யன்பரும் மாணவர் அரங்கததில் பங்கேற்ற சட்டக் கல்லூரி மாணவரும் ஆகிய **செ. கண்ணன்** அவர்கள் அரங்கில் உள்ள மின்சாரத் தொடர்புடைய ஒரு கம்பத்தில் கொடித் தோரணம் கட்டுகையில் மின்சாரத்தால் தாக்கப்பட்டு அலறியதையும், அதை யறிந்த நம் மெய்த் தொண்டர்கள், மின் தொடர்பை நிறுத்திட அவர் அங்கிருந்து பொத்தென்று வீழ்ந்ததையும், பின்னர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப் பெற்று நலம் பெற்றதையும் என்றும் மறக்கவியலாது. அவரின் உண்மைத் தொண்டும், உழைக்கும் துணிவும் இச் செய்தியைக் கேள்விப் பட்டபொழுது, நம் கண்களில் கண்ணீரை வருவித்தன.

இரவு 11 மணியளவில், மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் நிறைவுற்றன.

காலை முதல் அன்பர்கள் அனைவரும் எறும்பாய் இயங்கினர். மார்புவில்லைகள், தென்மொழிப் பழம் படிகள் நூல்கள் விற்பனையில் அமைச்சர் **இளமுருகன்** முழு மூச்சுடன ஈடுபட்டார். அவருக்குத் துணையாகப **பொய்யாமொழியும தமிழ்வேந்தன் எழிலும்** இயங்கினர். மாநாட்டில் பேசியப் பேச்சாளர்களுக்குக் கைத்தறித் துண்டுகளைப் போர்த்தும் பணியில், மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் மருத்துவர் **கோவிந்தனார்** ஈடுபட்டார். மேடையிலிருந்து பாவலரேறு அவர்களுக்குத் துணையாகத் திருவாளர்கள் புலவர் **இறைக்குருவனார, தென்மொழி ப. துரையரசனார், தென்மொழி மறை நித்தலின்பனார், ப. அருளி, கோட்டை இராவணன்** ஆகியோர் இயங்கினர். **மா. பூங்குன்றன்** நாடாப் பதிவானைக் கொண்டு அனைத்துப் பேச்சுகளையும பதிவு செய்து கொண்டிருந்தார். **தென்மொழி சோ. ஆற்றலரசு, துரை-தென்னவன்** ஆகியோர் சொற்பொழிவாளர்களுக்குக் காலகம் (சோடா) தரும் பணியிலும், சிலர்க்குக் குளம்பி வழங்கும் பணியிலும் ஈடுபட்டனர். பேராளர்களுக்கு உணவு ஏற்பாட்டைக் **கோட்டை இராவணனும், செம்பியன் வல்லத்தரசும்** கவனித்தனர். உணவுப் பொட்டலங்கள் விற்பனைப் பணியைப **புகழேந்தி, செ கண்ணன்,** சிங்கா நல்லூர் **அரங்க - தமிழ்மணி** ஆகியோர் கவனித்தனர். **பொழிலன்** அங்கும இங்கும ஓடி அனைத்து நிலைகளையும் சரிபார்த்துக் கொண்டிருந்தார். மாநாட்டுக்கு வந்திருந்த அன்பர் பலர் அங்கு நிறைவு செய்து கொண்டு வந்திருந்த பற்றுமுறிகளையும், நன்கொடைத் தொகைகளையும் பொருளாளர் **சு. இளங்கோவும்** தென்மொழி **ப. துரையரசன்** அவர்களும் தொடர்ந்து பெற்றுக் கொண்டு கணக்கு வைத்துக் கொண்டிருந்தனர். பெண் பேச்சாளர்களுக்குக் கைத்தறி ஆடைகளைப் போர்த்தும் பணியில் திருவாட்டி **தேன்மொழி அருளி** ஈடுபட்டிருந்தார். இந்த வகையில் அன்பர்களின் ஒத்துழைப்போடு முதல்நாள் மாநாடு சிறப்பொடு நடந்தேறியது. (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7516

மாநாட்டு அனைத்து நிகழ்ச்சியமைப்புகளையும் மேடையில் வீற்றிருந்து. அமைப்பாளர் **பாவலரேறு** ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த காட்சி.

மாநாட்டில், கோலக்கலைஞர் திரு. **சாவி. தம்பிராசு** நீர்மேல் அமைத்த சுந்தரேசனார், நீலாம்பிகை, பாவேந்தர், மாணவர் இராசேந்திரன் ஆகியோரது கோலவடிவங்களை நாவலரும், பாவலரேறுவும் பார்வையிடுகின்றனர்.

www.thamizham.net - Free E book No 7516

தமிழீழ விடுதலைத் தலைவர் **அமிர்தலிங்கனார்** அவர்களுக்குப் **பாவலரேறு** பொன்னாடை போர்த்துகின்றார்.



நாவலர் **அமிர்தலிங்கனார்** அவர்களின் உணர்வுசான்ற உரைமழை!

www.thamizham.net - Free E book No 7516

தமிழினக் காப்பு

'விடுதலை' ஆசிரியர். கி. வீரமணி.

(உ. த மு க. தொடக்க மாநாட்டில், இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சியாகத் தமிழினக் காப்பு மாநாட்டைத் தொடங்கி வைத்து ஆற்றிய சொற்பொழிவு சில சொற்கள் இதழின் கொள்கை நலம் கருதித் தமிழ்ப் படுத்தப் பெற்றுள்ளன.)

நம்முடைய நெஞ்சார்ந்த, பாராட்டுதற்குரிய, தமிழினக் காப்பு மாநாட்டினுடைய சீரிய தலைவர், தமிழீழ விடுதலைக் கூட்டணியின் முதன்மை (முக்கிய)த் தலைவராக விளங்கிக் கொண்டு, சட்டமன்றத்தின் உச்சிக்குச் சென்று கொண்டிருக்கின்ற நம்முடைய ஐயா நாவலர் **அமிர்தலிங்கனார்** அவர்களே! அவர்களுடைய வாழ்க்கையிலே பங்கேற்றுக் கொண்டிருப்பது போல், போராட்ட நிலைகளிலெல்லாம் பங்கேற்கின்ற **அம்மையார்** அவர்களே! நம் அனைவரையும் இன்று ஒன்று திரட்டித், தமிழினத்தைக் காக்க வேண்டும் என்ற பெரும உணர்வுடன், தம்முடைய வாழ்க்கையை ஒப்படைத்து (அர்ப்பணித்து)க் கொண்டிருக்கின்ற, நம்முடைய மிகுந்த மதிப்பு (மரியாதை)க்கும் போற்றுதலுக்கும் உரிய **பாவலரேறு** ஐயா **பெருஞ்சித்திரனார்** அவர்களே! இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிறப்பிக்க வந்திருக்கின்ற தமிழர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தக்கூடிய, தனித்தமிழர்களிலே ஒருவராக இருக்கக்கூடிய பன்மொழிப் புலவர் முதுபெரும் புலவர் **கா. அப்பாத்துரையார்** அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே நம் அனைவரையும் வரவேற்றுப் பேசிய ஆற்றல் மிகு வீரர் **நித்தலின்பனார்** அவர்களே! இந்த நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டு இங்கே வாழ்த்துரைக்க வந்திருக்கின்ற பாவோகி (கவியோகி) பெருமதிப்பிற்குரிய **சுத்தானந்த பாரதியார்** அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே நம் அனைவரையும் உணர்ச்சி உரையில் கூறி எழுச்சி எனக் குறிப்பிடுகின்ற எனது அன்பு உடன் பிறப்பாளர் சகோதரர்) பேரா. பர் (டாக்டர்) **மெ. சுந்தரம்** அவர்களே! பேரா பர் (டாக்டர்), **பாலசுப்பிரமணியனார்** அவர்களே! தன்மானப் பெரும் பாவலர் (கவிஞர்) உவமைப் பாவலா (கவிஞர்) **சுரதா** அவர்களே! இந்தத் தமிழினக் குடும்பத்தைச் சார்ந்த பல்வேறு துறை அறிஞர் பெருமக்களே! அன்பு உடன் பிறப்பியர் (சகோதரி,களே! அருமைத் தாய்மார்களே! தமிழினக் காப்புக்குத் திரண்டு இருக்கக் கூடிய தமிழின வீரர்களே! வீராங்கனைகளே! உங்கள் அனைவர்க்கும் பணிவன்பான வணக்கம்.

உரிய நேரத்தில், சரியானபடி வந்திருந்து தமிழினக் காப்பு மாநாடு இங்கே தொடங்கவிருக்கிறது இந்த மாநாட்டிற்கு அருமையான ஒரு தலைவரைச், சிறப்பாக நம்முடைய ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிருர்கள். ஆனால் இந்த மாநாட்டினைத் தொடங்கி வைக்கக் கூடிய மிக அருமையான பணிக்கு

www.thamizham.net - Free E book No 7516

என்னை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்களே ; எனக்கு அது தகுதி தானு என்று நான் என்னையே கேட்டுக் கொண்ட போது, எனக்கு விடையாகக் கிடைத்தது என்று சொல்லக் கூடியது, ஒன்றே ஒன்று தான். தமிழினத்தினுடைய விடுதலை என்று சொன்னால். தமிழர்களுடைய காப்பு என்று சொன்னால், தந்தை பெரியார் அவர்களை விட்டு உலகத் தமிழினத்திற்கே காப்பு வேறொன்றும் இருக்க முடியாது. அந்தத் தந்தை பெரியாரின் தொண்டர்களுக்கெல்லாம் தொண்டனாக இருக்கக் கூடிய ஒருவரை அழைத்தார். செயல் பாட்டிற்கு ஏந்தாக (வசதியாக) இருக்கும் என்று கருதி (கைதட்டல்). — இது பேச்சு மாநாடு அல்ல; ஏச்சு மாநாடு அல்ல — செயல் மாநாடு — என்று காட்டுவதற்காக-உரிய முயற்சிகளை எடுப்பதற்காக - முன்னேடியாக நீங்கள் என்னை அழைத்திருக்கிறீர்கள். தொடங்கி வைக்க ஆணை இட்டிருக்கிறீர்கள் என்று நான் கருதி — நாங்கள் வேண்டுகோள் விடுத்த போதெல்லாம் தன்மானத்தை விட இனமானமே பெரிதென்று கருதி-பாவலரேறு ஐயா அவர்கள் அறப்போர்களிளெல்லாம் கலந்து கொண்டிருக்கிறார்கள். அண்மையிலே சாதியைக் காக்கின்ற மனு நூலைச் சுட்டெரிக்க வேண்டும் என்று திராவிடர் கழகம் முடிவெடுத்த நேரத்தில் ஐயா பாவலரேறு அவர்களும் அவர்களின் தனித்தமிழ்க் குடும்பத்தைச் சார்ந்த அன்பு நண்பர்களும். அவர்களை தந்தை பெரியார் பிறந்த இடமான, ஈரோட்டிலே முன்னால் நின்று கொண்டு

மாநாட்டுத் தீர்மானங்கள் செயல் பெறுகின்றன !

(உ. த. மு. க மாநாட்டில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களில் சில, அவை தொடர்புடையவர்களைச் செயலுக்குத் தூண்டியுள்ளன. தீர்மானங்கள், எண்கள் 6, 7 பற்றி அவை தொடர்புடைய **உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்** உயர்திரு. **பர். வ. ஐ. சுப்பிரமணியம்** அவர்கள் கீழ் வருமாறு நமக்கு ஒரு மடல் விடுத்துள்ளார். அவரின் பெருந்தன்மைக்கும் கடமையுணர்வுக்கும், வினைத்திறனுக்கும் நம் நெஞ்சு நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

அன்புள்ள ஐயா,

தாங்கள் அனுப்பிய மாநாட்டுத் தீர்மானங்களைக் கண்டேன். அலுவல்கள் தமிழில் நடத்துவதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டோம். திருக்குறள் மொழி பெயர்ப்பைக் கருத்தில் கொண்டு எங்களால் ஆனதை உறுதியாகச் செய்வோம்.

இங்ஙனம்
20-11-81. மிக்க நன்றியுடன்
வ. ஐ. சுப்பிரமணியம்.

www.thamizham.net - Free E book No 7516

மனு (அ) தர்மத்தை எரித்தார்கள். எரித்த நிலையில் தளை (கைது) செய்யப்பட்டார்கள். அரசாங்கத்தின் உணவு போடாத விருந்தின ராக்கப்பட்டார்கள். வழக்கும், இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. அற மன்றத்திற்கும் அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே ஒர் இயக்கத்தை நடத்திச் செல்கின்ற வேறு யாராக இருந் தாலும், இவனோர் இயக்கம் நடத்துகின்ற போராட்டத்திலே நாம் போய் கலந்து கொள்ளலாமா, நம்முடைய இனமானம் என்னுவது, நம்முடைய பெருமை என்னுவது என்று கருதிக் கொண்டிருப் பார்கள். ஆனால் பாவலரேறு அவர்கள் தமிழினத்தைக் காப்பது தான் தமது ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டுமே தவிர யார் பெரியவர்கள், யார் சிறியவர்கள் என்று அளவுகோல் வேண்டா மென்று கருதுகிறார்கள். (கை தட்டல்)

படை புறப்பட வேண்டிய நேரத்தில் படை புறப்படுகிறது. அதற்குத் தடையே இல்லாமல் அந்தப் படையினில் கலந்துகொள்ள வேண்டும் என்று எண்ணி ஒரு நல்ல இலக்கணத்தை அவர்கள் அது மூலம் வகுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதைத்தாம் நாம் இங்கே எல்லோரும் எடுத்துக் கொண்டு பின்பற்ற வேண்டும். தமிழினத் தைக் காக்க வேண்டிய கட்டம் இப்பொழுது மிக முகாமையான (முக்கியமான) கட்டம். இருபதாம் நூற்றுண்டின் இறுதிக் கட்டத்திலே இருக்கிறோமென்று பேராசிரியர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அது வரலாற்றுண்மை. அதைவிட மிகப் பெரிய வரலாற்றுண்மை தமிழினத்திலே மிகப் பிந்திய இறுதிக் கட்டத் திலே இருக்கின்றோமோ என்று கேள்வி கேட்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

தமிழகத்திலே தமிழன், நம்முடைய அண்டை நாட்டிலே இருக் கின்ற தமிழன் அடிபட்டுச் சாகும் பொழுது கொலைபட்டுக் குருதியைச் சிந்தும் போதும் கூட, தாய்த் தமிழன் அக்கம் பக்கம் திரும்பிப் பார்த் துக் கொண்டு ஓடுவதற்கு முயற்சிக்கிறானே தவிர அழுவதற்குக்கூட முயற்சிக்க வழியில்லை. ஏழ்மையான கட்டத்திலே தமிழகம் இருக் கிறது. ஓர் அன்பர் கூட - இங்கு முன்மொழிந்த அறிஞர்களிலே ஒருவர் சொன்னார் தமிழனுக்கு விடுதலை கேட்டு ஈழத்திலே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; அதிலிருந்து தமிழ் நாட்டைப் பிரித்து விடாதீர்கள் என்று சொன்னார். அதைக் கேட்கும்பொழுது நாமெல் லாம் தலைநிமிர்ந்து நாம் இந்நோத்தில் இருக்கிறோமா என்று இங்கு கூடியிருக்கிற நாம் இந்தக் கேள்வியைக் கொள்ள வேண்டும். இங்கு ஐயா பாவலரேறு அவர்கள் நம்முடைய மாநாட்டுத் தலைவர் நாவலா அவர்களுக்கு ஓர் அரிய துண்டினை போர்த்தினார்கள். அதை நாம் பொன்னுடையாகப் பார்க்கவில்லை பட்டாடையாகப் பார்க்க வில்லை; தம்பூர்கள் அழுத கண்ணீரிலே நனைத்த ஆடையாக நீங்கள் கொட்டிக் கொண்டிருக்கிற உங்களுடைய குருதியினை துடைப்

www.thamizham.net - Free E book No 7516

பதற்கு, எங்களுக்கு நேரடியாக வழியில்லா விட்டாலும், இந்தத் துணியையாவது கொடுக்கக்கூடிய நிலையில் நாங்கள் உரிமை பெற்றிருக்கிறோம் என்று சொல்லக்கூடிய ஆடையாகத்தான் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம் (கை தட்டல்)

காரணம் என்ன? இன்றைக்குத் தமிழகத்தில் உள்ளவர்கள் நிலை, தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் ஊட்டிய உணர்வெல்லாம் பொய்யாகி, பழங்கதையாகி, கனவாகிப் போய் விடுமோ என்று கேள்வி கேட்க வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள் இன்னும் குறிக்கோளுக்கு (இலட்சியத்திற்கு) வெளியே இருப்பவர்கள் என்று சொன்னால், நோய் என்று மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டால் தான் மருந்து கொடுக்க வேண்டும். மருத்துவரே நோயினுடைய தன்மையை மறந்து விடக் கூடாது. நோயாளி வேண்டுமானால் ஒருவன் கொல்லாமல் இருக்கின்றான். ஆனால் மருத்துவர்க்கெல்லாம் குறைந்த பக்கம் நோயினுடைய தன்மையை மருத்துவர்கள் தங்களுக்குத் தாங்களே மறைத்துப் பயன் கிடையாது; அது நோயாளிகள் ஒத்துக் கொண்ட காரணத்தால். இங்கே பல மருத்துவர்கள் வந்திருக்கிறார்கள். தமிழினத்திற்குப் பல மருத்துவர்கள் உண்டு. ஆனால் பல மருத்துவர்கள ஒன்று சேர்வதில்லையே என்று பார்க்கும் பொழுது ஒன்று சேர வேண்டும் ஏனென்று சொன்னால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலும் தனித்தனியாக செயல்படும் பொழுது ஆங்கிலத்திலே சொல்வார்களே Special st என்று-அதுபோல் இருக்கும் பொழுது, அவரவர் நோய்க்கு மருந்துகள் இருக்கும் பொழுது, அவரவர் குறையை நீக்குவதற்கு மருந்துகளைச் சொல்வதில் தவறுகாது. அவர்களை ஒருங்கிணைக்க வேண்டும். ஒருங்கிணைக்கும் பொழுது அவர்கள் எல்லோரும் நோயினுடைய தன்மைதான் முகாமையாக (முக்கியமாக) இருக்குமே தவிர, எந்த மருந்துக் குரியவன், யார் பைத்தியக்காரன் யாருக்கு மருத்துவர் அதிகம் என்று காட்டுவதற்கு அல்ல என்பதை - நாம் இன்னும் கொஞ்சம் எண்ணிப் பார்ப்போமேயானால், உறுதியாகத் (நிச்சயம்) தமிழினத்திற்கு எங்கே தொல்லைகள் (சங்கடம்) இருக்கின்றன என்று மிகத் தெளிவாகத் தெரியும். "தமிழன் என்று சொல்லடா. தலைநிமிர்ந்து நில்லடா" என்று நீண்ட காலத்திற்கு முன்னால் பாவலர் (கவிஞர்) பாடியிருக்கிறார். அவர் தெளிவாகத் தெரிந்திருந்து தான் பாடினார் என்று நாம் நெஞ்சாரப் பாராட்ட வேண்டும். ஏனென்றால் தமிழர்கள் என்போர் இப்பொழுதெல்லாம் தலைகுனிந்து நிற்கிறார்கள் என்பது அவருக்கு மிகத் தெளிவாகத் தெரிந்த காரணத்தினால்தான்-தலைநிமிர்ந்தே பழக்கப் படாதவனுக்குத் தலைநிமிர்ந்து நில் என்று அவர் சொன்னார். நிமிர்ந்து நின்று விட்டால், அவர் நிமிர்ந்து நில் என்று சொல்ல மாட்டார். அவர் 'குனிந்திருக்கிறான் தமிழன்' என்று பார்த்துத்தான், அவர் 'குனிந்திருக்கும் தமிழனைக் கொஞ்சம் நிமிர்ந்து நில்' என்று சொன்னார். தலைமட்டும் இப்பொழுது

www.thamizham.net - Free E book No 7516

தமிழனுக்குக் குனியவில்லை இப்பொழுது முதுகெலும்பே வளைந்திருக்கிறது. சில தமிழர்களுக்கு முதுகெலும்பு இருக்கிறதோ என்று நினைக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். ஐயா பாவலரேறு போன்றோர்கள் இதுபோன்று மாநாடு நடத்தினால் ஏராளமான தமிழர்கட்கு முதுகெலும்பு இருக்கிறது என்று கூட அறிவிக்கப் படவேண்டிய அந்தப் பொறுப்பு — கூட்டத்திலே தமிழர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்டியலில் அரசியல் தமிழர்கள் வருவார்கள்; கலைத்துறைத் தமிழர்கள் வருவார்கள்; இன்னும் பல வகைத் துறைத் தமிழர்கள் வருவார்கள் நாம் தமிழர்களுக்கெல்லாம் முதல் நிலை முன்னுரை கொடுக்க வேண்டியவராக வாய்ப்புக் கொடுக்கப் பட்டவராகத் தாய்த் தமிழகத்தில வெட்கத்தை விட்டுத் தான் சொல்லவேண்டிய நிலையிலே இருக்கிறோம்.

எனவே தமிழினக் காப்பு என்பது மிக ஆழமான ஒன்று. அது மாத்திரம் அல்ல. ஐயா அமிர்தலிங்கனார் அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள் என்று சொல்லும் போது புரட்சிப் பாவலர் (கவிஞர்) சொன்ன போது 'தென் திசையைப் பார்க்கிறேன். என் உள்ளமெல்லாம பூரித்தது ஆட்டா' என்று சொல்லக் கூடிய அந்த உணர்வு

தமிழின ஒன்றிணைப்புப் பாடல்.

ஒன்றிணைக! ஒன்றிணைக!
உலகத் தமிழினம் ஒன்றிணைக!

மன்றிருந்த தமிழ் மனத்தினால் இணைக!
மற்றதன் பண்பாடு கலைகளால் இணைக!
நின்றறம் பயில்திருக் குறளினால் இணைக!
நீண்ட நெடும்புகழ் மரபினால் இணைக! (ஒன்)

வென்ற தமிழ்மறம் விளங்கிட இணைக!
வீறுடன் திகழ்ந்த,அந் நினைவினால் இணைக!
சென்றுல கெங்கணும் பாவிவாழ்ந் திடினும்
செந்தமிழ் மறவாத நெஞ்சினால் இணைக! (ஒன்)

இன்றினி திணைக! ஏற்றமோ டிணைக!
எண்திசை நாட்டினும் இருப்பவர் இணைக!
நன்றென இணைக! நாடிவந் திணைக!
நாமினி ஒன்றெனும் நாட்டத்தோ டிணைக! (ஒன்)

(**பெருஞ்சித்திரனா**ரால் எழுதப் பெற்று, **உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்** தொடக்க மாநாட்டின் இறுதியில். தென்மொழி அன்பர்கள் ஒருங்கிணைந்து பாடிய பாடல். உ. த மு. க. நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றின் இறுதிலும் இதனைப் பாடுவதை அன்பர்கள் வழக்கமாகக் கொள்க.)

www.thamizham.net - Free E book No 7516

மிகு அந்த நேரத்திலிருந்து வருகின்றவர்கள். பெருமைப் படக் கூடிய அந்த இராவணனுடைய இடத்திலிருந்து வந்திருக்கிறார்கள். அதனால் தமிழாகளாகிய நபமை ஒன்று சேர விட்டிருக்கிறார்கள். இராவணனை அங்கே இருத்திக் கொண்டார்கள் விபீடணர்களை யெல்லாம தமிழநாட்டிற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்று சொலலக் கூடிய அரசுக்குக் கருத்தைச் சொல்லுதற்குரிய எண்ணு தலுக்காக நாம இருந்து கொண்டிருக்கிறோம் (கை தடடல்). எங்கே இருந்தாலும, இல்லாவிட்டாலும் இங்கே இருந்து அவர்கள் போட்டி யிட்டாலும் அங்கே கூட அவாகள் திருந்த மாட்டார்கள். எனவே தான் மிக முகாமையான (முக்கியமான)தாக நாம் எடுத்துக் கொள்ளபபட வேண்டிய முடிவு எதுவானாலும் இங்கே தமிழினத் திற்கு இனமானப முகாமையானது (முக்கியமானது)- தன் மானத்தை விட! தந்தை பெரியாருடைய நினைவிடத்தை நீங்கள் இங்கே சுற்றிப் பார்ததீர்களானால், வந்திருககிறவர்கள் ஏற்கனவே சென்ற வர்களே தவிர, புதிதாகப் போயப் பார்க்கக் கூடியவர்களாய் இருந் தால — அங்கே ஒரு கல்வெட்டிலே அவருடைய அறிவுரை பொறிக் கப பெற்றுள்ளது தனமானம் மிக முகாமையான (முககியமான) தென்றும், ஆனால் தனமானத்தை விட மிகப் பெரியது இனமானம் எனறும ஐயா அவாகளின் அறிவுரை அங்கே குறிக்கப்பட்டுள்ளது. எனவே இனமானத்தைக காக்க வேண்டிய கட்டத்தில் நாமெல்லாம் இங்கு ஒன்று கூடியிருக்கிறோம. அந்த இனமானத்தை நாம் உயாத்திக் காடட வேண்டும். அந்த இனமானம் பெருகவேண்டும். தமிழினப் எப்படி இருக்கிறது என்று சொல்லும் போது — நாமும் தமிழ் நாட்டிலேயே தாயத திருநாட்டில் எங்கே இருக்கிறோம் என்றால் ஓலைச்சுவடிகளெல்லாம் பாடம் சொல்லிக் கொடுத்தோமே, அங்கேயே தமிழினப் மண்டிக்கிடக்கிறது. தமிழர்கள் மண்டியிட்டுக் கிடக்கிறார்கள். பல தமிழர்கள் வடக்கே மண்டியிடடுக் கொண்டிருக்கிறாாகள். தமிழன் இருக்கக் கூடிய அங்கே இருக்கக் கூடிய — அந்த நிலை தமிழர்களுக்கு மிக இரங்கத்தக்க தாக பரிதாபமாக) இருசகிறது. பொதுவான சிற்றூர் சாதாரண கிராமத்து)ப் பழமொழிகளைக் கூட நாம் மறந்துவிட்ட நிலையில் அரசியல் பேசிக் கொண்டிருககிறோம். ‘வடக்கே தலைவைத்துப் படுக்காதே’ என்று கூறுவாாகள். வடக்கே தலைவைத்துப் படுப்பதில்தான நமக்குள் போட்டி ஏறபடடுவருகிறதே தவிர வேறு எதிலுப இல்லை எனபதில் தமிழினம எங்குப் போய் கொண்டிருக்கிறது என்பதை எணணிப பார்க்கும் நிலையில் நாமிங்குள்ளோம். உறுதியாக (நிச்சயமாக) இது அரசியல் மாநாடில்லை; நமக்கும் அரசியலைப் பற்றிக் கவலையில்லை அடுத்த தேர்தலில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது முகாமையில்லை (முக்கியமில்லை). திருப்பத்துத் திருப்பமா, ஆதரவா என்று பார்ப்பது மட்டுமே நம வேலையல்ல. தமிழினததிறகுத் திருப்பம் வருகிறதா இல்லையா என்று

www.thamizham.net - Free E book No 7516

பார்ப்பதற்குத்தான் நம்முடைய இந்த தமிழினக் காப்பு மாநாடு. (கை தட்டல்). எனவேதான் மிக முகாமையாக (முக்கியமாக) நாம் சிந்திக்க வேண்டிய செய்திகளில் தமிழினம் எங்கே துபர (சங்கட)ப் பட்டால் விட்டிலே ஒலித்திடும் போர்ப்பறை? ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு 'Charity wins the home' என்று சொல்வார்கள். அதுபோல நமக்கு இங்கே இருந்து பார்க்க வேண்டிய கட்டத்திலே தமிழின உணர்வுகள் இங்கே இருக்க வேண்டும். தமிழர்களுக்குத் தொல்லை என்று சொன்னால் மிகத்தெளிவான உணர்வுகள் வேண்டும்.

இப்போரில் உறுதி எந்தத் தமிழனுக்கு இருக்கிறதோ அவன் தான் தமிழன் ; அவன்தான் தமிழன் என்று உணரப்பட வேண்டும். தமிழ் மண்ணிலே பிறந்த காரணத்தினால் தமிழனாகி விட மாட்டான் என்று சொல்ல வேண்டிய காலக்கட்டத்தில் தமிழன் நிலை இருந்து கொண்டு இருக்கிறது. ஏனெனில் தமிழ்க் குமுகாயத்திற்கு (சமுதாயத்திற்கு) உரிய சிறப்பு, (முக்கியம்) என்ன என்று சொல்ல வேண்டிய நிலையிலிருக்கிறது 'தமிழச்சியின் கத்தி' என்ப நூலை புரட்சிப் பாவலர் (கவிஞர்) பாரதிதாசன் சொன்னார்.

'உரித்தார் தோலை'! எப்பொழுது —
உடையவன் தூங்கி வழிந்ததால், உரித்தான் தோலை!'

உடையவன் தூங்கிக் கொண்டிருக்கிறான். நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கின்றான். குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கின்றான். ஆகவேதான் எழுப்புகின்ற மாநாடாக இந்த மாநாட்டை நம் பேராசிரியர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழினத்தினுடையக் காப்பு மிகமிக முகாமையானது (முக்கியமானது). தமிழினம் காக்கப்பட வேண்டும். பல்வேறு வகையான வகைகளிலிருந்து பெருங்கேடுகளிலிருந்து தமிழினம் காக்கப்பட வேண்டும். ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கள் மிகுந்த உறுதியோடு சென்று கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு பேர் அவர்கள் பின்னாலே இருக்கின்றார்கள் என்ற எண்ணிக்கை மிக இன்றியமையாததில்லை! (முக்கியமில்லை). எண்ணம் தான் முகாமையானதே (முக்கியமே) தவிர வேறு கிடையாது. இந்தியாவினுடைய படைத்துறை (இராணுவம்) — எடுத்துக் காட்டுக்கு — (உதாரணத்துக்கு) நான் சொல்லுகிறேன்; 600 கோடி பேர் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிறார்கள் என்று சொன்னால் 600 கோடி மக்களுக்கு இருக்கின்ற படைஞர்கள் (இராணுவம்) 600 கோடி இல்லை. அதைப் பாதுகாப்பதற்கு 600 கோடி மக்கள் இல்லை. அதே போல் ஊரிலே காவல் நிலையம் இருக்கின்றது என்று சொன்னால், ஊரில் மக்கள் தொகை எவ்வளவோ அவ்வளவு அளவில் காவல் தொகை இருக்கின்றது; இருக்க வேண்டும் என்று கணக்குக் கூறுதல் தேவை (அவசியம்) கிடையாது இருப்பவர்கள் சிலர் தாம்! அவர்களிடம் இருப்பது கட்டுப்பாடு. அதன் காரணமாகத்தான் இந்தத் துணைக்(உப) கண்டத்தினுடைய பாதுகாப்பு அந்தப் படைத்துறையி (இராணுவத்தி)

www.thamizham.net - Free E book No 7516

னரிடையே ஒப்படைக்கப் பெற்றுள்ளது. அது போல, தமிழ்க் குமுகாயத்(சமுதாயத்)தினுடைய பாதுகாப்பு இந்தப் படைத்துறையிடம் (இராணுவத்திடம்) ஒப்படைக்கப் பெற்றுள்ளது. ஒப்படைக்கப் பெற்றிருக்கிறது என்பது வேறு பிரித்து நாம் சொல்ல வேண்டிய அந்தக் கட்டுப்பாட்டோடு நாம் இது போன்ற தலைவர்கள் பின்னாலே இருக்க வேண்டும். மிகப் பெரிய பதவிகளெல்லாம் கூட அவர்கள் (பெருஞ்சித்திரனார்) நினைத்திருந்தால், அவருக்குக் கிடைத்திருக்கும். பல தமிழர்கள், பல வேறிடங்களிலே, 'இந்து'க்களால் பிரிக்கப்பட முடியாத தமிழர்கள் பதவிகளால் பிரிக்கப்படக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். எனவே இக் காலத்து (நவீன காலத்து)ப் போர் முறைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. உத்திகள் மாறிக் கொண்டிருக்கின்றன எனவே அப்படிப் பார்க்கும் பொழுது, ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களைப் பற்றி-அவர்களும் நானும். இன்னொரு பெரியவர் — தமிழ் நாட்டிலே மிகப்பெரியவர் — அவர்களும் ஒரு பொது வீட்டிலே கலந்து கொண்டோம். ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களிடப் பாவலரேறு அவர்களிடம் — தம் பக்கத்திலே அமர்ந்தவர் (அந்தப் பெரியவர்) சொன்னார். உங்களை இந்தப் பதவிக்குக் கூடப் போட்டிருப்பார்கள், ஆனால் நாங்களெல்லாம் சொல்லும் போது கூட, அவர்கள் ஒன்று சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்றால். 'நீங்கள் அவ்வளவு தூரம் வளைய மாட்டீர்க'ளென்று சொன்னார்கள். அவர் நாம் சொல்வதற்கெல்லாம் சரியாக ஒத்து) இருக்க மாட்டார்களே மற்ற தகுதியெல்லாம் அவருக்கு இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் சொல்வதெற்கெல்லாம் வளைய மாட்டார்களே என்று அவர்கள் சொன்னார்கள்! என்று சொன்னது மட்டுமன்றி, 'அதனால்தான் உங்களுக்குப் பதவி கிடைக்க முடியாமல் போய் விட்டது, என்றும் அவரே வலிய இவரிடத்தில் சொன்னார் நான் அருகிலே இருந்தபோது, என்ன வென்று கேட்டு நான் சிரிப்புக்குச் சொன்னேன் — 'இதை நீங்கள் எந்தக் கோணத்திலே சொல்கிறீர்களோ தெரியாது. ஆனால் இதைவிட நம்முடைய பாவலரேறுவிற்கு மிகப்பெரிய தகுதி – மிகப் பெருமை வேறு இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து — என்று'' (கை தட்டல்)

ஏதோ இது தகுதிக் குறைவு என்று கருதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய கண்ணோட்டத்திலே இது தான் அவர்களுக்கு உரிய தகுதி என்று நான் அவரிடம் சொன்னேன். ஏனெனில் பதவிக்காக வளையாத நிலைதான் — தகுதிகளில் சிறப்பான (முக்கிய) நிலை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்; அல்லது எண்ணிப் பார்க்க வேண்டும் தந்தை பெரியார் அவர்கள் இந்த நாட்டிலே தொண்டு புரிய வேண்டும் என்று நினைத்த நேரத்திலே அவர்கள் எதைப்பற்றியும் கவலைப் படவே இல்லை. ஆழமான தொண்டு - எடுத்துக் கொண்ட பணியின் இன்றியமையாமை — இவற்றைத் தான் பார்க்க வேண்டும். (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7516



உலகத் தமிழின விடுதலைக் கழக முன்னோடி அமிர்தலிங்கனார் அவர்களின் தமிழினக் காப்புரைத் தொடர்ச்சி.



பாவலரின் உணர்வு மழையில் நனைந்து கிடக்கும் மக்கள் கழனி!

www.thamizham.net - Free E book No 7516

சிறுமி நற்செல்வி (சுமதி) வீரத் தாயாகவும் சிறுவன் தமிழ்ச் செம்மல் வீரத்தாத்தாவாகவும் திறம்பட நடித்த காட்சி.

வீரத்தாய் தன் கணவனைப் போருக்கு அனுப்பும் உடல் புல்லரிக்கும் வீரவுரைக் காட்சி.

'வீரத்தாய்' நடிப்புரை நிகழ்ச்சி

சிறுமி அங்கயற்கண்ணியாகிய வீரமகன் போரில் மாண்டு கிடக்கிறான். வீரத்தாய் போர்க்களந் துழாவுகிறாள்.

மார்பில் புண்பட்டுச் செத்த வீரமகனை எடுத்து மடியில் வைத்து, வீரத்தாய், ஈன்ற ஞான்றினும் பெரிதுவுவந்து உரையாற்றிய காட்சி.

www.thamizham.net - Free E book No 7516

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டுத் தீர்மானங்கள்!

(சென்னை, பெரியார்திடலில், துலை 22, 23 நவம்பர் 7, 8-1981 இல் நடைபெற்ற உ.த.மு.க. தொடக்க மாநாட்டில் நிறைவேற்றப் பெற்ற தீர் மானங்கள்)

1. மொழி நூற்பேரறிஞர் தேவநேயப் பாவாணர், உரைவேந்தர் ஔவை துரைசாமி, பண்ணுராய்ச்சிப் பேரறிஞர் குடந்தை சுந்தரே சனார், வரலாற்று வல்லுநர் க.குஞ்சிதபாதம் (K.K. Pillai), திருக் குறள் பீடம் தவத்திரு. அழகரடிகள், புலவர் வி. மு. சோமசுந்தரனார் ஆகியோர் எதிர்பாராத வகையில் மறைந்தமைக்கும், அரசியல் சமயநிலைகளில் நிலையற்ற போக்கினராக இருந்தாலும், திரைப்படப் பாவலராய்ச் சிறந்து விளங்கிய கண்ணதாசன் மறைவுக்கும் உழைத்த தமிழன்பரும் நெடுநாளைய தென்மொழித் தொண்டரும் ஆன திருச்சி மகிழ்நன் அவர்களின் துணைவியார் குமுதம் அம்மையார் அவர்கள் அண்மையில் எதிர்பாராத வகையில் மறைந்தமைக்கும் இம்மாநாடு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

முன்மொழிபவர்: மருத்துவர். கோவிந்தனார். வழிமொழிபவா: கோட்டை. இராவணன்.

2. தமிழே தமிழ்நாட்டின் சட்டப்படியான ஆட்சிமொழியாக இருந்தாலும், நடைமுறையில் அது பெரிதும் புறக்கணிக்கப் படு கின்றது. இந்நிலையை மாற்றி, தமிழே அனைத்துத் துறைகளிலும் முழுமையான ஆட்சிமொழியாக விளங்க, தக்க நடவடிக்கை மேற் கொள்ளுமாறு தமிழ்நாடு, புதுவை அரசுகளை இம்மாநாடு வலி யுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

மு.மொ. தென்மொழி மறை நித்தலின்பனார். வ. மொ: அழ.இளமுருகன்

3. பெயர்ப்பலகை விளம்பரங்களில் தமிழுக்கு முதலிடம் அளிக்க வேண்டும் என்ற அரசுச் சட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப் பெறவில்லை. கடைப்பிடிக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு பெயர்ப் பலகைகளிலுள்ள சொற்கள் தூய தமிழில் அமையும்படி உரிய சொற்களை அரசே தக்க வல்லுநர் குழுவின் வழித் தேர்ந்தெடுத்து வழங்குமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மு. மொ: மின்பாறை கி. பாலு. வ. மொ: நா. இளமாறன்.

4. தமிழ்நாட்டு மழலையர் பள்ளிகள் அனைத்திலும் தமிழ் முற்றும் புறக்கணிக்கப்படுவதோடு, தொடக்கம் முதல் இந்தி, ஆங்கிலம் ஆகிய அயன்மொழிகளிலேயே அனைத்துப் பாடங்களும் பயிற்றுவிக்கப் பெறுகின்றன. இந்நிலையை மாற்றித் தொடக்கக் கல்வியைத் தமிழி லேயே பயிற்றுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் உடனே மேற் கொள்ளுமாறும், தொடக்கப் பள்ளிகளில் மூன்றும் வகுப்பில் தொடங்

www.thamizham.net - Free E book No 7516

கும் ஆங்கிலப் பயிற்சியை முன்பு போல் ஆறும் வகுப்பிலிருந்து தொடங்குமாறும் இம்மாநாடு வேண்டுகிறது.

மு. மொ: பேரா மறை திருநாவுக்கரசு. வ மொ: வி. பொய்யாமொழி

5. பல்லாயிரம் கற்களுக்கு அப்பால உள்ள இலண்டன் பி பி. சி. பிலிப்பைன்சு, மலேசியா, சிங்கப்பூர் முதலிய பிறநாட்டு வானொலி நிலையங்கள் கூட ஓரளவு நல்ல தமிழைக் கையாளுகின்றன. ஆனால் இங்குள்ள வானொலி நிலையங்கள் ஏராளமான பிறமொழிச்சொற் களைக் கலந்தும், தமிழ் ஒலிப்பு முறைகளைச் சிதைத்தும், கொச்சை நடையைக் கையாண்டும் தமிழ்க் கொலை செய்வதையும் தமிழின நல மேம்பாட்டுக்கு உழைக்கும் தமிழின அறிஞர்களைப் புறக்கணிப் பதையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு, வானொலி நிலையங்கள் தம் போக்கை மாற்றிக் கொள்ளுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மு. மொ: அ வே. மழலைச்செல்வன் வ. மொ: தென்மொழி. க. தமிழப்பன்.

6 தஞ்சையில் அமையும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குத் 'திருவள்ளுவர் தமிழ்ப் பல்கலைக் கழகம்' எனப் பெயர் சூட்டுமாறும், இப்பல்கலைக் கழகத்தின் ஆய்வுகள் முதலிய அனைத்து நடவடிக்கை களும் 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்' போல் பிறமொழியில் அமை யாது தூய தமிழிலேயே அமையும்படி ஆவன செய்யுமாறும் இம் மாநாடு அரசைக் கோருகிறது.

மு. மொ: தென்மொழி ந. முத்துக்குமரன் வ. மொ: க. ஆறுமுகனார்.

7. தமிழ்ப்பல்கலைக்கழகம், உலகப் பொதுமறையாம் திருக்குறளை உலக மொழிகளிலெல்லாம் மொழி பெயர்த்தும் ஆராய்ச்சி விளக்கங் கள் எழுதியும் உலகெங்கும் பரப்பும் பணியைச் சிறப்புப் பணியாக மேற்கொள்ளுமாறு இம்மாநாடு வேண்டுகிறது.

மு. மொ: பொங்கலூர் திருவரங்கனார் பொறி இ. வ. மொ: திருமேனி, பல்லடம்.

8. தமிழ் நாட்டிலுள்ள நடுவணரசு நிறுவனங்களில் இந்தியும் ஆங்கிலமும் என்னும் நிலையை மாற்றி, தமிழும் ஆங்கிலமும் எனும் நிலையைக் கைக்கொள்ளுமாறு நடுவணரசை இம்மாநாடு கோருகிறது.

மு. மொ: க. செல்லப்பன். வ மொ: ந. அருட்கையன்

9. அந்தமானில் இதுவரையில் மாணவர்கள் தமிழும் ஆங்கில மும் பயின்று வந்த நிலையை மாற்றி, அவ்வுரிமையைப் பறித்துக் கொண்டு, இந்தியும் ஆங்கிலமும் பயிலுமாறு அவர்களைக் கட்டாயப் படுத்தும் அந்தமான் ஆளுமைப் போக்கை வன்மையாக கண்டிப்ப தோடு. இவ்வுரிமைக்காகப் போராடிய தமிழ்க் கல்விப் பாதுகாப்புக் குழுவினர் மீது பழிவாங்கும் போக்கைக் கைவிடுமாறும் இதுவரை அரசுப்பணியினின்று போராடி, அதற்காக வேலை நீக்கம் செய்யப்

www.thamizham.net - Free E book No 7516

பட்ட 150 அலுவலர்களுக்கு அப்பணியைத் திரும்பத் தருமாறும் அந்தமான் ஆட்சியாளரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

மு மொ : துரை. தென்னவன். வ. மொ :க. ஆகுன்றன்.

10. குடியரசு நன்னாளில் குடியரசுத் தலைவர் சமற்கிருதம் பெர்சியன், அரபுமொழி, அறிஞர்களுக்கு "விருதுகள்" வழங்கப்பெறுவது போன்றே உலக முழுதுமுள்ள தமிழ்மொழி அறிஞர்களுக்கும் விருது--கள் வழங்கப் பெற வேண்டும்.

மு. மொ; மா. துரை. வ. மொ: சோ. மா. இளமுருகன்.

11 இந்தியாவின் உச்சமன்றத் (Supreme Court) தலைமை நடுவர் உயர்திரு சந்திரசூட் அவர்கள் பொறுப்பும் நடுவு நிலைமையுமின்றி, ஓர் அரசியல் கட்சிக்காரர் போல், அறமன்றங்களில் ஆங்கிலத்திற்கு மாருக மாநிலமொழிகள் அறமன்ற நடவடிக்கை மொழியாக அமைந்தால் அறமுறை கெட்டுவிடும் என்றும், இந்தியே அதற்குத் தகுதியுடைய மொழியென்றும் கூறியதுடன், அவ்வவ் மாநில மொழியினத்தவர்க்கே முதலிடமும் வாழ்வுரிமையும் கோருவது பொருந்தாதது, கண்டிக்கத்தக்கது என்றும் கூறியிருப்பதை இம் மாநாடு மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறது.

மு. மொ: தென்மொழி அரங்க. தமிழ்மணி. வ. மொ: இரா தமிழ்க்கதிர்.

12 கோவை அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் தமிழ் பெரிதும் புறக்கணிக்கப் படுவதையும் தமிழ்ப் பேராசிரியர்கள் இழிவு செய்யப்படுவதையும் இம்மாநாடு மிக வன்மையாகக் கண்டிக்கிறது. இச்சிக்கலில் அரசு உடனடியாகத் தலையிட்டுத் தமிழுக்கு உரிய இடம் வழங்கவும், தமிழ்ப் பேராசிரியர்களுக்கு நயன்மை வழங்கிடவும் உரிய நடவடிக்கை எடுப்பதுடன், இதுபோன்று பிற பள்ளி, கல்லூரிகளிலும் நடைபெருமல் இருக்க எச்சரிக்கையாக இருக்குமாறும் அரசை இம்மாநாடு வேண்டுகிறது.

மு. மொ: க. க. ஆறுமுகம். வ. மொ: க அங்கமுத்து.

13 ஒரு கட்சியின் சார்பில் வேட்பாளராக நின்றுவெற்றி பெற்ற பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் தேர்தெடுக்கப் பெற்ற பதவிக் காலத்திற்குள் அக்கட்சியை விட்டு விலகினுல், தமது உறுப்பாண்மைப் பதவியை இழக்கும் வகையில் கட்சி மாற்றத் தடைச் சட்டம் கொண்டு வருமாறு அரசை இம்மாநாடு கோருகிறது.

மு. மொ: செ. செம்பியன். வ. மொ: கதிர் நிலவன்.

14. தேர்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை மக்கள் விரும்பினுல் திரும்பப் பெறுகின்ற உரிமை அளிக்கும் வகையில் தேவையான சட்டநெறிகளை இயற்றுமாறு இம்மாநாடு இந்தியஅரசைக் கோருகிறது.

மு. மொ: கு. இராசேந்திரன். வ. மொ: சீனு. அரிமாப்பாண்டியன்

www.thamizham.net - Free E book No 7516

15. இந்திய அரசு பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கு அரசியல் ஏற்பு வழங்கியுள்ளதைப் போன்றே தமிழீழத்தமிழர் விடுதலை முன்னணிக்கும் ஏற்பு வழங்குவதுடன், தென்னாப்பிரிக்கா இனவெறியைக் கண்டித்தது போன்று, இலங்கைத் தமிழர்களுக்காக ஒன்றிய நாடுகள் அவையில் (ஐ. நா.) குரல் எழுப்பித் தக்க தீர்வுகாண நடுவணரசை இம் மாநாடு வேண்டுகிறது.

மு. மொ: தென்மொழி ஆற்றலரசு. வ. மொ: புலவர். வெற்றிவேந்தன்.

16. பன்னெடுங்காலமாக இனஅழிப்புக்கும், ஒடுக்கல்களுக்கும், இன்னல் இழிவுகளுக்கும் ஆளாக்கப்பட்டு உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் ஈழத்தமிழினத்திற்கு உடனடியாக விடுதலை வழங்குமாறு இலங்கைக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு செயவர்த்தனே அவர்களை இம்மாநாடு கோருகிறது.

மு. மொ: புலவர் திரு இறைக்குருவனார். வ. மொ: வாசுதேவன்.

17. காசுமீரில் உள்ளதுபோன்று தமிழ்நாட்டிலும் அயல் மாநிலத்தார் வீடு, தோட்டம் போன்றவற்றை வாங்கத் தடைசெய்வதுடன், தமிழ்த் தேசிய இனப்பாதுகாப்பிற்காக அயல் மாநிலத்தாருக்கு ஒப்போலை உரிமையைத் (Voting right) தவிர்க்குமாறும் இம்மாநாடு அரசை வேண்டிக் கொள்கிறது.

மு. மொ: செ. கண்ணன் க. இ. வ. மொ: தாமரை பெருஞ்சித்திரனார்.

18. ஆப்பிரிக்கா, மொரிசியசு, பர்மா போன்ற வெளிநாடுகளுக்கும்,பம்பாய்,ஐதராபாது போன்ற தமிழர்கள் மிகுதியாக வாழும் அயல் மாநிலங்களுக்கும் தமிழாசிரியர்களைச் சிறப்பு நிலை ஊதியத்துடன் அனுப்பி, அங்கு வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க ஆவன செய்யுமாறு தமிழ் நாட்டரசை இம்மாநாடு வேண்டுகிறது.

மு. மொ: மு.சு. தங்கவேலன் க.மு. வ. மொ: வெற்றியழகன்க. மு;

19. நீண்ட நெடு நாட்களாக எந்த உசாவலும் இன்றிச் சிறையாளிகளாக வைக்கப்பட்டுள்ள தீவிர இயக்கத்தைச் சேர்ந்தவர்களை மாந்த நேய உணர்வுடன் விடுதலை செய்யுமாறு அரசை இம்மாநாடு வேண்டுகிறது.

மு. மொ: செம்பியன் வல்லத்தரசு. வ. மொ: மா. பொழிலன்.

20. தமிழகத்தில் பிறக்கும் சிறுவர் சிறுமியர் அனைவர்க்கும் 18 அகவை வரை கட்டாயக் கல்விமுறையைச் செயற்படுத்தவும், அதற்கு மேல் இளைஞர் அனைவரும் 5 ஆண்டுகள் கட்டாயப் படைத் துறைப் பயிற்சி பெறவும், பெண்களுக்கு அவர்கள் விரும்பினால் 5 அல்லது 3 ஆண்டுகள் படைத்துறைப் பயிற்சி தருமாறும் தமிழக அரசை இம் மாநாடு வலியுறுத்துகின்றது.

மு. மொ: பு. க. இளமுருகன். வ. மொ: அ. துரையரசு

www.thamizham.net - Free E book No 7516

21. தெருப் பெயர்களில் சாதிப் பெயர்களை நீக்க வேண்டும் என்ற அரசின் ஆணை முழுமையாகச் செயற் படுத்தப் பெறவில்லை. அதனை முழுமைப் படுத்துவதோடு சாதியின் பெயரால் வெளிவரும் இதழ்களையும், இயங்கும் கல்வி நிறுவனங்கள், அமைப்புகள் முதலிய வற்றின் பெயர்களையும் மாற்றியமைக்க ஆவன செய்யுமாறும் தமிழ் நாட்டரசை இம்மாநாடு கோருகிறது.

மு. மொ ஆறிறைவன் வ. மொ। சுப. திருமாறன்.

22. 1973- ஆம் ஆண்டு எழுதி முடிக்கப் பெற்று, 1976 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் வெளிவந்து நாற்பது படிகளுக்கு மேலும் விற்பனையான நிலையில், நெருக்கடிக் காலத்தில் ஏதோ ஒரு வகை உள்முக நோக்கத்தால் தடைசெய்யப் பெற்றபேராசிரியர் கோ. தங்கவேலனுர் அவர்கள் எழுதிய "தமிழ் நில வரலாறு" என்னும் அரிய நூலுக்குத் தடையை நீக்குமாறு அறிஞர்கள் பலரும் பல வகைகளில் வேண்டுகோள் விடுத்தும் அரசு செவி சாய்க்காததை இம்மாநாடு மிகமிக வன்மையாகக் கண்டிப்பதோடு. உடனே அத் தடையை நீக்கிப் புழக்கத்திற்கு விடுமாறும், கல்லூரிமாணவர்க்குப் பாடமாக வைக்கவும் தமிழ்நாட்டு அரசை இம்மாநாடு கோருகிறது.

மு. மொ: தென்மொழி. கோ. நக்கீரன். வ. மொ. பழங்கரைவேள்.

23. துப்பரவுத் துறையில் கடைநிலைப்பணிகளுக்கு ஆட்கள் பயன்படுத்தப்படுவதை உடனே நீக்கிவிட்டு, மாற்று ஏற்பாடாக இயந்திரங்களைப் பயன்படுத்தவும் எடுப்புக் கழிவறைகளை முற்றும் நீக்கிவிட்டுப் புதுமுறைக் கழிவறைகள் அமைக்கவும் ஆவன செய்யுமாறு தமிழ்நாட்டு அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மு. மொ: அ. தங்கராசன். வ. மொ: பூ. கயற்கண்ணி.

24. தில்லியின் அனைந்திந்திய வானொலியும், தொலைக்காட்சியும், ஆளுங்கட்சியின், குறிப்பாகத் திருவாட்டி இந்திரா அம்மையாரின் விளம்பரக் கருவியாகப் பயன்படுத்தப் பெறுவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

மு. மொ: வழக்கறிஞர் ப. அருளி. வ. மொ: இரணியன்.

25. அறுபது விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழ் வாழும் ஏழ்மை மிகுந்த இந்நாட்டில், ஒரு சாரார், - 'வேள்வி'(யாகம்) என்னும் பெயரில் ஏராளமான உணவுப்பொருள்களையும் பிறவற்றை-யும் தீயிலிட்டுப் பாழாக்குவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு, இதனை, உடனே தடை செய்யுமாறு அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மு. மொ: மருத்துவர் பாலதண்டாயுதம்; வ. மொ: புலவர் நயம்பு அறிவுடைநம்பி

26. ஏராளமான அயல்நாட்டுச் செலவாணியை ஈட்டித்தரும் வெடி மருந்துப் பொருட்களை, தீபாவளி முதலிய விழாக்காலங்களில்

www.thamizham.net - Free E book No 7516

வேட்டுவைத்துப் பாழாக்குவதோடு பொது மக்களுக்கும் பலவகையில் இடையூறு செய்யும் இப்பொறுப்பற்ற செயலை உடனே தடைசெய்யு மாறு இம்மாநாடு அரசை வேண்டுகிறது.

மு. மொ: கோ. தாமரைக்கோ. வ. மொ: ச சின்னத்துரை.

27. பெருத்த வருவாயுள்ள தொழில்கள் அனைத்தையும் நாட்டு உடைமையாக்க வேண்டும் என அரசை இம்மாநாடு கோருகிறது.

மு. மொ: ப. துரையரசன். வ. மொ: தேன்மொழியருளி.

28. தமிழ்நாட்டிலும் புதுவையிலும் மாநில அரசு நடுவணரசுத் துறைகளிலும் எண்பது விழுக்காடு தமிழர்களுக்கே வேலை வாய்ப்பு ஒதுக்கீடு செய்யுமாறு இம்மாநாடு இருமாநில அரசுகளையும் கேட்டுக் கொள்கிறது.

மு. மொ: மா. பூங்குன்றன். வ. மொ: அழகன்.

29. தமிழ் வாயிலாகக் கல்வி கற்றோர்க்கு அரசுப் பணிகளிலும் தனியார் துறைகளிலும் போதுமான அளவு வேலை வாய்ப்பு உறுதிப் படுத்தப்படாததால் தமிழ் வாயிற் கல்வி கற்க மாணவர்கள் மிகுவாகத் தயங்குகின்றனர். தமிழ் வாயிற்கல்வி கற்போக்கு ஊக்கந்தரும் வகையில் அவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் எதிர் காலத்தில் எண்பது விழுக்காடு வேலை வாய்ப்பளிக்க ஆவன செய்யுமாறு அரசை இம்மாநாடு கோருகிறது.

மு. மொ: புலவர் மு. சேதுகா, வ. மொ: மா. செந்தாழை அறி. இ.

30. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகிய மலைவளம், கான்-வளம் ஆகியவை அண்டை மாநிலத்தவராலும் பிறராலும் கள்ளத் தனமாக அழிக்கப்பட்டு வருதலைத் தமிழக அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தத் தக்கன செய்ய வேண்டுகிறது.

மு. மொ: தென்னி. தேவகாந்தி அறி. மு. வ. மொ: சிவப்பிரகாசம்,

31. திரைப் படச் சுவரொட்டிகள், விளம்பரங்கள் போன்றவற்றை அருவருப்பான முறையில் அச்சிட்டு, கண்ட கண்ட இடங்களில் ஒட்டுவதைத் தவிர்த்து, அருவருப்பற்ற சுவரொட்டிகளை அவ்வத் திரையரங்குகளின் முகப்புகளில் மட்டுமே, ஒட்டச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இம்மாநாடு கோருகிறது.

மு மொ: புலவர் மு. ஆறுமுகம். வ. மொ: இறை. பொற்கொடி.

32. உயர்நிலைப்பள்ளியில் இந்தியவரலாறு, ஆசியா, ஐரோப்பா வரலாறு கற்பிக்கப்படுவது போன்று தமிழ்நாட்டு வரலாறும் முழுமையாகப் பள்ளியில் கற்பிக்கப்பட வேண்டும் என அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மு. மொ: புலவர் ஆறுமுகவேலன். க மு. வ மொ: தே மு பெருமாள்
மாநாட்டு அமைப்பாளர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

www.thamizham.net - Free E book No 7516

உ.த.மு.க. உருவாகும் பொன்னுள்!

— தமிழவேள்

கட்சியினுல் சாதியினுல் கண்மூடிப் பழக்கத்தால்
காரிருளில் எங்கெங்கோ கிடக்கின்ற நம்தமிழர்
ஒட்டுறவோ(டு) ஒளிபெறவே ஓரியக்கம் காண்கின்ற
ஒப்பற்ற திருநாள்தான் வாராதோ? என்கின்ருய்!

பாட்டாளி என்போராய்ப் பாரெங்கும் நம்மக்கள்
படுகின்ற துயரெல்லாம் பார்த்துள்ளம் மிகநொந்து
கூட்டாகத் **தமிழர்தம் முன்னேற்றம்** மிகவேண்டும்
கழகத்தின் கால்கோள் நாள் வந்ததுகாண்! என்தோழா!

பாலினிலே தண்ணீரைப் பக்குவமாய்க் கலத்தல்போல்
பைந்தமிழில் பிறமொழியைப் புகுத்துகின்ற பகைவர்தம்
வேலையினை வென்றடக்கித் தூய்மையுடன் செந்தமிழை
வேகமுற வளர்க்கும்நாள் வாராதோ? என்கின்ருய்!

பேச்சினிலும் ஏட்டினிலும் பார்க்கின்ற எத்துறையும்
பைந்தமிழே தூய்மையுடன் தலைமைபெறச் செய்வதனை
மூச்சாகக் கொண்டுள்ள **முன்னேற்றக் கழக**மெனும்
மன்றம்தான் முகிழ்க்கும்நாள் வந்ததுகாண்! என்தோழா!

சமயத்தால் பலவழியாய்ச் சாதியினுல் பலநூருய்ச்
சச்சரவும் சண்டையுமே அன்ருடச் செய்திகளாய்
எமனுகத் தம்குடிக்கே இருக்கின்ற தமிழரெல்லாம்
ஏற்றமுடன் இணையும்நாள் வாராதோ? என்கின்ருய்!

சாதிமதப் பிரிவுகளோ, சமர்புரியும் கீழ்மேலோ
சாத்திரத்தின் பேராலே சிலர்சொல்லும் வேற்றுமையோ
ஏதுமின்றிச் சமநிலையை ஏற்படுத்த **ஒருகழகம்**
எழுகின்ற திருநாளும் வந்ததுகாண்! என்தோழா!

அரசியலா அதுகள்ள வாணிகமே என்கின்ற
அரும்பொருளில் ஆவின்தோல் போர்த்திவரும் புலிகள்தாம்
அரசியலை நடத்துகிற அவலநிலை போய்ஒழிய
அறம்அரசை ஆளும்நாள் வாராதோ? என்கின்ருய்!

இழிவுரையோ கொடுஞ்செயலோ பதவிக்காம் பூசல்களோ
ஏமாற்றித் தாம்உயரும் ஏய்ப்புகளோ இல்லாமல்
பழிக்கஞ்சித் தன்னலத்தைப் பின்தள்ளித் தொண்டாற்றும்
பேரவைதான் பிறக்கும்நாள் வந்ததுகாண்! என்தோழா!

www.thamizham.net - Free E book No 7516

சீனாவில் மழைபெய்தால் சென்னையிலே குடைபிடிக்கச்
சொல்கின்ற பிறநாட்டுப் பொதுவுடைமை வேண்டாமல்
வானுர்ந்த தமிழ்ப்பண்போ(டு) ஒட்டியதாம் பொதுநிலையை
விளக்கிடவே ஒருநாள்தான் வாராதோ? என்கின்றாய்!

இல்லாரும் உள்ளாரும் இல்லாத சமநிலையில்
இருக்கின்ற வளமெல்லாம் எல்லோர்க்கும் பயன்நல்க
வல்லதொருபொதுவுடைமைப்பொருளியலேவேண்டுமெனும்
ஒருகழகம் உருவாம்நாள் வந்ததுகாண்! என்தோழா!

கழிகாமக் கூத்துகளும் கற்பழிப்பு வேலைகளும்
கலையென்னும் பெயராலே காசுபணம் குவிக்கின்ற
இழிநிலையை மாற்றிடவே இந்நாட்டில் ஓரியக்கம்
எழுகின்ற நன்னாளும் வாராதோ? என்கிறாய்!

மக்களினம் மனவளமும் மதிநலமும் பெற்றுயர்ந்து
மாண்புடைய நல்வாழ்வில் மிடுக்குடனே நடைபோடத்
தக்கநெறி கலைவளர வழிகோலும் கழகத்தைத்
தொடங்குகின்ற திருநாளும் வந்ததுகாண்! என்தோழா!

எத்துணையோ முன்னேற்றம் ஏற்படினும் வையத்தில்
எங்கள்முன் னோர்செய்தார் எனவேயாம் செய்கின்றோம்
புத்துணர்வோ புதுமுறையோ வேண்டோம்யாம் என்கின்ற
போக்கொழியும் புதுநாளும் வாராதோ? என்கின்றாய்!

காலத்திற் கேற்றபடி அறிவியல்சேர் அணுகுமுறைக்
கொள்கையினைக் கொண்டதுவாய்ப் புத்துணர்வைப் பெற்றது
வாய்
ஞாலத்துத் தமிழர்தம் நலம்காக்கும் நல்அவையொன்(று)
ஓங்குகின்ற திருநாளும் வந்ததுகாண்! என்தோழா!

உண்மையினை ஒழுக்கத்தை உயிருக்கும் மேலாக
உறுதியுடன் பற்றி, அறவழியினையே பின்பற்றும்
பண்டைநம் தமிழ்மரபும் பண்பாடும் மீண்டுமிவண்
பூக்கின்ற பொன்னாள்தான் வாராதோ? என்கின்றாய்!

தலையாய தமிழ்மரபும் பண்பாடும் தழைத்திடவே
துணையாகும் பிறநாட்டுப் பண்பாடும் அணைத்தேகும்
உலகத்துத் தமிழினத்தின் முன்னேற்றக் கழகம்தான்
உருவாகும் பொன்னாளும் வந்ததுகாண்! என்தோழா! ○

www.thamizham.net - Free E book No 7516

தென்மொழி சோ ஆற்றலரசு. தென்மொழி நா. இளமாறன், செல்வி சித்திரைச் செந்தாழை ஆகியோர் தென்மொழிப் பாடல்களை இசைத்தனர். தென்மொழி ப. முருகவேள் கருவியிசைத்தார்.

இயக்கப் பாடல் இசை நிகழ்ச்சி

இயக்கப் பாடல்களை இசைக்குழுவினர் சிறப்புறப் பாடி மக்களுக்கு அறிவூட்டினர்.

www.thamizham.net - Free E book No 7516

செல்வி அங்கயற்கண்ணி தென்மொழிப் பாடல்களை
வீறு முழக்கிறாள் !

திருவள்ளுவர் அரங்கத்தில் தலைவர்கள்
மேடைமீது வீற்றிருக்கும் காட்சி.
இடமிருந்து வலம் : பாவலரேறு, அமிர்தலிங்கம், கி. வீரமணி,
பாவோகி சுத்தானந்த பாரதியார்.

www.thamizham.net - Free E book No 7516

தமிழ் நாட்டினத்திற்குப் பொருந்திய பொதுவுடைமை

வெங்காலூர் 'குணா'

(மா நாட்டில் 'குணா' அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் விரிவு)

தமிழ்க் குமுகம் ஒரு வகுப்புப் பண்பாடாக, பன்னெடுங்காலந் தொட்டுத் தொடர்ந்தும் தனக்குள் மாறியும் மருவியும் வந்துள்ளது. வடதிராவிடப்பண்பாடுகள் ஆரியத்தைத்தழுவிப் புதிய கூடுகளுக்குள் புகுந்து ஒளிந்து கொண்டாலும், அவற்றின் திராவிட அடிக்கட்டுகள் இன்றைய குமுக அறிவியலால் அகழ்ந்தெடுக்கப் பெற்றுப் புதிய விளக்கங்களுக்குத் தளமிட்டுள்ளன. தமிழகத்தின் வகுப்புப் பண்பாட்டின் தொண்மையும் முதன்மையும் இன்று உலகுக்கு விளங்கி வருகின்றன.

தொண்மையில் கற்களைக் கருவியாக்கி உணவு தேடியபோது உருவான குமுக வாழ்க்கை, நாகரிகம் என்னும் நிலையை எய்திய போது, அந்நாகரிகம் மாக்களை மக்களாகவும் மக்களை மாக்களாகவும் செய்தது. மாக்கள் மக்களாவது வரலாற்றில் ஒரு பாய்ச்சல் நிலையெனின், மக்களை மாக்களாக்கியது மற்றொரு தனி நிலை. அத்தகைய நிலையைத் தோற்றுவித்தவை மக்கள் தங்களுக்கென உருவாக்கி கொண்ட கருவிகள். அக்கருவிகள் அவர்தம் படைப்பு முறையில் தோற்றுவித்த புதிய நிலைகளும், அத்தகைய படைப்பு முறையில் எழுந்தபுதிய மாந்த உறவுகளும் மக்கள் பிறரோடு உறவாட வல்ல வினைக்களத்தை விரிவுபடுத்தின. குமுகத்தின் தேவைகள் விரிவடைந்த போது பழைய கருவிகளின் பயன்கள் குறைவுடைதாயின. ஆகவே புதிய கருவிகளின் கண்டு பிடிப்புகள் தேவைப்பட்டன. அப் புதிய கருவிகள் படைப்புத் துறையில் புதிய விரிவுகளையும் சிக்கல்களையும் தேவைகளையும் தோற்றுவித்தன. படைப்பு முறையில் தோன்றிய விரிவுகளும் விரிசல்களும் சிக்கல்களும் புதிய படைப்பு உறவுகளை உருவாக்கிக் கொண்டன.

உழைப்பு இயற்கையை மாற்றவல்ல மாந்தனின் பேராற்றல்; உழைப்பு ஒரு படைப்பாற்றல். அந்த உழைப்புக்கும் இயற்கையின் மண்டிக் கிடக்கின்ற இடு பொருளுக்கும் (raw material) இடையிலான உறவால் எழுவதே பண்டம் என்னும் பருப் பொருள். அப் பண்டமே மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வது. உழைப்பு, இடுபொருளின் மீது செயல்பட இடைநிலைத் தேவையாக அமைந்தனவே கருவிகள். கருவிகள் இட்டுக் கட்டப் பெற்ற தொகுப்புகள். மக்களினம் தொன்று தொட்டு தான் வாழ்வதற்குப் பல் வகைக் கருவிகளைச் சார்ந்து நிற்கின்றது.

மக்களினம் கருவிகளைச் சார்ந்திருக்கும் அளவு பெருகப் பெருக, கருவிகளில் திறமும் அறிவும் பெருகின. கருவிகளின் வளர்ச்சி நாகரிகத்திற்கு இட்டுச் சென்றது. மக்களின் வாழ்வியல் அதனால்

www.thamizham.net - Free E book No 7516

பண்படலாயிற்று அதனால் மாக்கள் மக்களாயினர். நகர வாழ்க்கையை அடியொற்றி எழுந்த நாகரிகம் என்பதே குமுகம் வகுப்புகளாகப் பிரிவுற்றதன் விளைவுதானே? ஆனால் மாக்களை மக்களிடமிருந்து பிரிக்கின்ற வளர்ச்சி முற்றதாக ஓர் ஒருதலைப் போக்கும் அன்று. அத்துடன் சேர்த்துப் பிறந்ததே உழைக்கின்ற மக்களை மாக்களாக்கும் எதிர்வினை. பிரிக்க வொண்ணா நிலையில் அவை இணைந்தும் முரணியும்செயல்பட்டன. ஒற்றுமையில் அவ்வேற்றுமை வகுப்பு நாகரிகத்தில் புதிய நிலைகளைத் தோற்றுவித்தன. இதுவே குமுக வரலாறு.

மக்கள் எப்படி மாக்களாயினர்? தொல்குடி நிலையில் இயற்கையோடு போராடி இயற்கையைத் தழுவி வாழ்வதற்கு அன்றாடத் தேவைகள் இருந்தன. உணவு, உறைவிடம், உடுக்கை போன்ற விலங்கினத் தேவைகளுக்கு அப்பால் மக்களினம் புக நேர்ந்த போது, சிலவாழ்வியல் ஒழுக்கங்களும் ஆடல்பாடல்,பாட்டு,எழுத்துப்போன்ற மாந்த நுகர்ச்சிகளும் பொதுவாகவே இருந்தன. அத்தகைய வாழ்வியல் ஒழுக்கங்களிலும் நுகர்ச்சிகளிலும் ஒரு கீறல் கீறப் பெற்று அக்கீறல் அகழிபோல் வாய் பிளந்த போது, கடமையிலிருந்து உரிமை விலகியது. குமுகத்திற்காக எல்லோரும் உழைப்பது, உழைப்பின் பலனில் எல்லோரும் சமமாக உரிமை பாராட்டுவது என்னும் நிலையில் ஏற்பட்ட அப்பிளவு, உழைப்பதை மட்டுமே பலரின் கடமையாக்கியது. பொது உழைப்பின் பலன் மீது தொல்குலங்கள் கொண்டிருந்த உரிமையை ஒரு சிலர் பறித்துக் கொண்டனர். அவர்கட்கு உடல் உழைப்பிலிருந்து ஏதோ ஓர் அளவில் விடுதலை கிட்டியது. பிறர் கூடி உழைத்து உருவாக்கிய பொருட்களைத் தனி உடமையாக்கிக் கொள்வது அவர்களுடைய தனி உரிமையாகிறது. உழைக்கும் கடமையை மட்டும் கட்டிக் கொண்டு உரிமையை இழந்தவர் யாவரும் உண்பது, ஓரளவு உடுப்பது, எங்கோ ஒண்டுவது என்னும் விலங்கு நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டனர். மக்கள் நிலையிலிருந்து மீண்டும் மாக்கள் நிலைக்குத் திரும்பினர். உழைப்புக் கடமையைத் துறந்து உரிமையை மட்டும் தமதாக்கிக் கொண்ட ஒரு சிலர், வாழ்வியல் நுகர்ச்சிகளின் முகடுகளுக்குச் சென்று வாழ்ந்தனர். மேட்டுக் குடிப் பண்பாட்டை வளர்த்துக் கொண்டனர். அவ்வகையில் எழுந்ததே குன்றத்தில் கோயில் கட்டி அரண் எழுப்பித் தன்னை ஆண்டை-அரையன்- தலைமகன்- அரசன் ஆண்டவன்- திருமால் என்னும் நிலைக்கு உயர்த்திக் கொண்ட தனிநிலை. அந்நிலையில் குமுகப் படைப்பை இயக்குவதற்கு ஆட்சி தேவைப்பட்டது. அந்த ஆட்சியின் உறுப்புகளாகப் படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் அமைந்தன.

தொல் குடிகளைப் பிற குலங்களின் தாக்குதல்களிலிருந்தும் ஆநிரை கவர்தலிலிருந்தும் கொள்ளைகளிலிருந்தும் காத்துக் கொள்

www.thamizham.net - Free E book No 7516

வதற்குப் பழங்கற்காலத்தின் பிற்பகுதியில் காவல் அரண்களும் குலத் தலைவனின் இல்லும் குன்றமேறின. அத்தலைவனின் காவல் தொழிலுக்கும் ஒற்றுச் செயலுக்கும் ஈடுதந்து போற்றி 'இறை' என்னும் கட்டணத்தை உரிமை பெற்ற குடிகள் விரும்பியே கட்டலாயினர். பின்னர், அந்தக் குலத்தலைவர்கள் தொல்குடி மரபுகளையும் வழக்காறுகளையும் பொதுத் தேர்வு முறையையும் மாற்றி வேலிக்குள்ளேயே இருந்து மக்களைச் சுரண்டியும் அரட்டியும் மிரட்டியும் இறையை வாங்கி ஆளத் தொடங்கினர். தம் குலத்துச் செல்வந்த ஆண்டைகளே அக் குமுகத்தின் மிகை உழைப்பை (Surplus labour) பறித்துத் தம தாக்கிக் கொண்டனர். அந்நிலையில் புறக்காவலுடன் அகக்காவலையும் கருதி அரண்கள் வலுப்படுத்தப் பெற்றன. தனியுடைமை வெண்ணெய் போல் திரட்சியுற்றுத் தனியாற்றலாக உருக் கொண்டது, பொதுக் காவல், தனிக் காவல் என்னும் எதிர்மறையாகிபது. அத்துடன் ஆநிரையைக் காக்கும் கரந்தைப் போர்களுக்கும் அப்பால் மண் கவரும் கொள்ளை வஞ்சிப் போர்களும், நாடு பிடிக்க வந்த பகைப்படையுடன் பொருது அந்நாட்டைக் காத்துக் கொள்ளும் காஞ்சிப் போர்களும், பகை வேந்தனின் படைகளை அழித்து ஆரவாரித்துக் களிக்கும் வாகைப் போர்களும், தன்னுடைய படை வலிமையை உலகுக்கு காட்டுவதற்காக நடத்தப்பட்ட தும்பைப் போர்களும் முற்றிடப்பட்ட அரணைக் காக்கின்ற நொச்சிப் போர்களும், அரணை முற்றுகையிடுகின்ற உழிஞையும் புதிய போர் இலக்கணங்களாயின. மாற்றுக் குல மக்களை அடிமையர்களாக்கினர். தோற்ற குலத்தின் பெண்டிரை 'கொண்டிமகளிர்' என்று சொல்லிப் பொது மகளிராகவும் விலைமகளிராகவும் செய்தனர். கோயில் ஊர் எனப்பிரிந்திருந்த குடியிருப்போடு புறச் சேரிகளையும் உருவாக்கினர். இழிதொழில் இலக்கணங்களும் தீண்டாமை வழக்கும் தோற்றுவிக்கப் பெற்றன. அடிமை உழைப்பு புதியதொரு படைப்பாற்றலாகக் கட்டமைக்கப் பெற்றது. தொழிற் பிரிவினைகள் இறுக்கமாகப் பெற்றும் பண்முகப்படுத்தவும்பட கம்மியரும் வினைவலராயினர். ஒருவர் தம் தொழிலை மாற்றிக் கொள்வது தடைசெய்யப் பெற்றுப் பிறப்பு வழிச் சாதிகள் உருவாயின. சாதிகளுக்கு இடையிலான உறவுகளும் நெறிப் படுத்தபட்டன.

ஆண்டைகளுக்குப் பூசாரி வகுப்பு துணை நின்று பேய்த்தெய்வங்களையும் பழம் சடங்குகளையும் விரிவாக்கினர். அகத்தால் மக்களை அடிமைப் படுத்திட அச்சமூட்டும் தெய்வங்களும் புனைகதைகளும் படைக்கப் பெற்றன. சமயங்களும் மதங்களும் கட்டுக் கோப்பாகச் செய்விக்கப் பெற்றன. கோட்டைகள், அரண்மனைகள், சிறைக் கோட்டங்கள், கழுமரங்கள், உறுப்புச் சிதைவுக்கூடங்கள், வகுப்பு அறங்கள், சட்டங்கள், படைகள், ஒற்றர்கள் அமைச்சர்கள் போன்றவற்றை உறுப்புகளாகக் கொண்ட அரசு என்னும் புற வன்முறைக் கருவி வடிக்கப் பெற்றது. அதேவேளையில், அகநிலை மயக்கங்களைத் தோற்றுவித்து இவ்வுலகத் துயரங்கட்கும் ஒடுக்குமுறைகட்கும் மறுவுலகத்தில்

www.thamizham.net - Free E book No 7516

மறுபிறப்பில் விடுதலை கிடைக்கும் என்னும் அகவயக் கற்பனையை மதங்கள் செய்வித்தன.

தொல்போர்கள் தோற்றுவித்த தொய்வுகளும் வீழ்ச்சிகளும் அடிமைகளின் கலகத்தால் வேகப்பட்டபோது, நிலத்தை உடைமையாகக் கொண்டோர், உழுதுண்போர்- உழுதுவித்துண்போர் என வகுக்கப் பெற்ற முறைமையும் வழக்கிற்கு வந்தது. நிலவுடைமையைத் தழுவிய புதிய வகை அடிமைமுறை தோற்றுவிக்கப் பெற்றது. அது நிலத்தில் தனியுடைமையை உறுதிச் செய்தது. அடிமைகள் நிலச் சொத்தின் உறுப்பாகவும், தனிஉழவர்கள் தனித்து நின்று நிலக்கிழார்கட்குக் கீழடங்கி வேளாண்மை செய்யவும் ஏற்பட்ட புதிய அரசியல் நிலைகள், புதிய படைப்பு உறவுகளைச் சார்ந்தவையாகின. குடிவார முறையும் எழுந்தது. இறையிலி நிலங்களும் சதுர்வேதி மங்கலங்களும் பிரமதேயங்களும் கோயில் நிலங்களும் பெருகின. அதுவே நிலக்கிழமை என்னும் புதிய வாழ்வியலாகியது. அந் நிலையிலும் பெரும் பகுதி உழைக்கும் மக்கள் மாக்கள் நிலையிலே கிடந்தனர். அவர்கள் பெற்ற விடுதலையோ எள்ளளவே

ஒடுக்குமுறையைத் தழுவிய அவ்வாழ்வியலிருந்து விடுதலைப் பெறத்துடித்த அன்றைய உழைக்கும் மக்களின் உள்ள வேட்கை இங்கும்அங்கும் புகையவே செய்தன. 'உலகம் முழுவதும்' பொதுவானது அன்று. அஃது ஒருதனியுடைமையே எனக்கூறி ஆட்சி செலுத்துகின்ற பேரரசர்கட்கும், இரவும் பகலும் தூங்காது விலங்குகளை வேட்டையாடக் காத்திருகின்ற கல்லா வறியவனுக்கும் உண்பது ஒருநாழி தவசமே, உடுக்கப் பயன்படுவது அரையாடை மேலாடை என்னும் இரண்டே என்னும் பொருளில்:

தென்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே'' (புறம் 189)

என்னும் புறப்பாடலும் அத்தகையப் பொறுமல்களில் தப்பித் தவறி இலக்கிய மேறிய சான்றுகள்.

அந்நிலையில் புற அக ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலை தேடப்புறப்பட்ட அறிவர்கள் பலர். அவர்களில் சிலர் உலகாய்தம் என்னும் கடவுள் மறுப்புக்கொள்கை வழியிலும் பார்ப்பனீய எதிர்ப்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் குமுகச் சிக்கல்கட்கு விளக்கம் தந்தனர். உடலையும் புலனறிவையும் (காட்சியளவையும்) மட்டுமே ஓம்பிய கொச்சை விளக்கத்தைத் தந்த அப் பொருள் முதலாரையும் பார்க்க, மக்களைப் பெருமளவுக்கு ஈர்த்தவர்-

www.thamizham.net - Free E book No 7516

கள் குமுகச்சீர்திருத்தம் காண முனைந்த சமயக் குரவர்களே ஆவர். எண்ணத்தையும் கருத்தளவையும் பெரிது படுத்தப் பேசினாலும், ஒய்ந்தொடுங்கிய எளியருக்கு அவர்கள் கற்பனையில் படைத் தளித்த பொய்யான அகநிலை விடுதலை நன்மையாக- உள்ளத்துப் புண் ஆற்றும் உளவியல் மருந்தாகத் தென்பட்டது. அவர்கள் ஊட்டிய போலி விடுதலை உணர்வு மயக்க மருந்தாகியது குமுக அவலத்திற்கான உண்மைக்காரணங்களையும் அதற்கான மெய்ம்மை விளக்கங்களையும் செயற்பாடுகளையும் அவர்கள் மூடி மறைத்தனர். குமுகக் கொடுமைகளை அவர்கள் உண்மையில் ஒழித்திடவும் இல்லை. சமயப்போர்வை போர்த்திய பண்பாட்டுக் கலகங்களோ மிகப் பல. சித்தர்கள் போன்றோரிடம் பார்ப்பனிய எதிர்ப்பு என்னும் சாதி எதிர்ப்புக் கூறுகள் இருந்தன. இருப்பினும், அந்நிலை ஓர் அடிப் படைப் புரட்சியை ஏற்படுத்தாத நிலையில் புறப்பண்பாட்டு வீச்சுகள் தமிழினத்தை மெல்ல மெல்ல அழித்தே வந்தன. நிலக்கிழமை முறை அளவால் மாறிவந்திடினும் பன்னூறு ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கவே செய்தன.

பார்ப்பனர்க்கன்றிப் பிற பணியறியாத சேர சோழ பாண்டிய பல்லவப் பேரரசுகளாலும் வேளிர்களாலும் பார்ப்பனர் வளர்க்கப் பட்டனர்; ஆரியமும் சாதிவெறி குலஒழுக்கங்களும் சமற்கிருத கல்வியும் ஓம்பப்பெற்றன. முடிவிலா கொள்ளைப் போர்கள் வருத்தித் தமிழரசுகளை உட்பகையால் கொல்ல, புறப்பகைகள் தமிழகத்தை வென்றன. அதனுடைய அண்மைக்காலப் புறப்பகைகளில் ஒன்றே வெள்ளையர் ஆட்சியும் அதுதோற்றுவித்த இந்திய அரசும், பார்ப்பனர்களும் பிறரும் தோற்றுவித்த ஒரிந்திய கோட்பாடும், 'இந்தியம்' என்னும் புதியப் பார்ப்பனிய சூழ்ச்சியும்.

எதிர்க்காற்று:

வெள்ளை வந்தேறிகள் இடைக்காலம் வரையில் அரை விலங்காண்டி நிலையில் கிடந்தவர்களே. அந்நிலையில், உடலுழைப்பிலிருந்து ஓய்வுப் பெற்றவராய், எண்ணத்தின் ஊடறுக்கும் மிதவைகளில் போக்கர்களாய் இருந்த அறிவர்கள் பலர் தமிழகத்திலும் பல்கி இருந்தனர். பொருளியல் தேவைக் கேற்ப, காலம் பார்த்து விதைக்கச் செய்வதிலும் பருவத்தைக் கணிப்பதிலும் அவர்கள் வல்லவர்களாக இருந்தனர். ஆற்றுப் பெருக்கைத் தடுக்கவும் ஆற்றுக்குக் கரை பெடுக்கவும் அணையிடத் திட்டம் வகுத்துக் கொடுக்கவும் திறமுடையவர்களாக விளங்கினர் அவர்கள். ஆட்சிக் கேற்ற சூழ்ச்சிகளையும் வரிமுறைகளையும் வகுத்தும் படைத்தந்திரங்களைத் தொகுத்தும் தந்தவர்களும் அவர்களே. கடல்வழிச் செலவில் அறிவைப் பெருக்கியும் பொருளீட்டு முறைகளை வரைந்தும் செயல்பட்டவர்களும் அவர்கள் தாம். பண்பாட்டு நிலைகளில் கலையையும் இலங்கியங்களையும் சமயவழி உலக விளக்கங்களையும் போற்றவும் செய்த அத் தமிழ் அறிவர்கள் உலகத்தையே கவர்ந்து நின்றனர். அவர்கள் படைத்த அறிவுச் செல்

www.thamizham.net - Free E book No 7516

வங்கள் எட்டுத்திக்கும் படர்ந்தன. மேலை உலகு தென்னகத்தையும் ஆரியவயமாகிய வட திரவிடப் பண்பாடுகளையும் ஏறிட்டு நோக்கி அவற்றிடமிருந்து உற்றுக் கற்றவை மிகப் பல.

அந்நிலை தலைகீழாகியது. அவ்வாறு செய்தது மேலை உலகு குறிப்பாக, இங்கிலாந்து நாடு-கண்ட தொழிற் புரட்சியே. அது வகுத்த புதிய படைப்பு முறையும். படைப்பு உறவுகளும் முதலாளியம் என்னும் உலகளாவிய வாழ்வியலைப் படைத்தது. உலகச் சந்தை அதன் விளைவு. குடியேறி முதலாளிய வெள்ளை வல்லரசு வழியாகப் புகுந்த புதிய வாழ்வியல் கூறுகள் பன்னூறு ஆண்டுகளாகக் கால் ஊன்றி நின்ற நிலக்கிழமை முறையையும் உறவுகளையும் அடியிலேயே அறுக்கத் தொடங்கியபோது வந்துற்ற மாற்றங்கள் தமிழகத்தின் வாழ்வியலை மெள்ள மெள்ள முதலாளிய மயமாக்கத் தொடங்கியது இந்நிலையில், மேலை உலகு, தென்னாடுஉட்பட்ட கீழைஉலகை உற்றும் வியந்து நோக்கியும் அதனிடமிருந்து கற்றும் இருந்த நிலை தலை கீழாக மாறி, கீழை உலகு மேலை உலகைப் பார்த்துப் பயிலவும் கற்கவும் செய்கின்ற நிலை தோன்றியது. இன்றைய போக்கும் அவ்வாறே இருக்கின்றது.

அப்போக்கு வெறுமே எழுந்த எதிர்க்காற்று அன்று. தென்னாடு உட்பட்ட கீழை உலகின் கருத்து வளத்தை முன்பு உண்டு செரித்து வளர்ந்தது மேலை உலகு. அக்கீழை உலகுக்கு வெகு காலத்திற்குப் பின்னர் தோன்றிய நிலக்கிழமை முறையின் கொடுமைகட்குக் கல்லறைக் கட்டி காலூன்றி வலுத்து நின்றன அம் மேலை உலகின் முதலாளிய எண்ணங்கள். அதன் தொழிற் புரட்சியும் முதலாளிய வளர்ச்சியும் போற்றி வளர்த்த அறிவியல் துறைகளும் முதலாளிய தொழில் நுட்பங்களும் கலைகளும் மேலைப் பண்பாட்டின் வலிமையாகின. சிப்பிகளில் மறைந்திருக்கின்ற முத்துகளை போல் மூடு மந்திரக் கருத்துகளில் ஒளிந்திருந்த அறிவியல் மெய்ம்மைகளை மூடுபனியை விலக்குவது போல் விலக்கித் தனித்தெடுத்து தன்வயப் படுத்திக் கொண்டது அம்முதலாளியம். அவ்வாறு தன்வயப்படுத்தியதோடு நில்லாமல் அவற்றைச் செறிவுடனும் முறையுடனும் அளவை-யியல் திறனுடனும் பேணி வளர்த்து செயல் வடிவம் தந்ததுமே அம் மேலை முதலாளியத்தின் சிறப்பு. அதுவே அம் மேலைக்காற்றின் தனித்திறன். அது கீழைக் காற்றை வென்ற எதிர்த் திசை.

மேலை முதலாளியம் பண்ணையடிமைகளைத் தொழிலாளர்களாக மாற்றியது. உழைப்பை முதலீட்டின் அடிமையாக்கிய இளகிய புதிய அடிமை முறையை உருவாக்கியது. பட்டறைகளிலும், ஆலைகளிலும் இரவு பகலெனப் பாராமல் உடல் வருந்த உழைத்துத் தேய்ந்தது அப் பாட்டாளிய வகுப்பு. நோய்வாய்ப் பட்டும் தொழில் இடர்ப்பாடுகளில் செத்தும் வந்த வகுப்புஅது. முதலாளியம் தோற்றுவித்த முடை நாற்ற மெடுக்கின்றச் சேரிக் குடிசைகளில் விலங்குகள் போல்

www.thamizham.net - Free E book No 7516

அடைந்து கிடந்து மாந்த உரிமைகளையும் வாய்ப்புகளையும் இழந்து அல்லலுற்ற நிலையில் வாழ்ந்த அந்த உழைக்கும் இனத்தைக் கண்ணுற்றுக் கண்கலங்கிய அறிவர்களும் பெரியவர்களும் சிலர். அந்நிலையில் முதலாளியத் திணை ஒழுக்கத்தின் ஊழ்பாடுகளை- விதிகளை- ஆதம் சுமித (1723-1790), இரிக்கார்டோ (1772-1823) போன்ற பொருளியல் அறிஞர்கள் அறிய முற்பட்டனர். உழைப்புத்தான் செல்வத்தைப் படைகின்றது என்னும் உண்மைக்கு அவர்கள் அறிவியல் அளவைகளைத் தந்து விளக்கினர். அவர்கள் அரசியல்- பொருளியல் என்னும் அறிவுத் துறைக்கு வித்திட்டனர். அதுவே ஆங்கில அரசியல்- பொருளியல் என்றாகியது.

முதலாளியம் செய்த மாந்த நெறிக்குப் புறம்பான சுரண்டல் வேகத்தையும் ஆழத்தையும், அஃது உழைக்கும் மக்களை மாக்களாக்கிய நிலையையும் உணர்ந்தவராக அந்நிலைக்கு மருத்துவம் பார்த்து மக்கள் நிலையை மீட்டெடுக்கத் துடித்த தூயவர் சைமன் (1760-1925), ஃபூரியர் (1772-1837), இராபர்ட்ஓவன் (1771-1858) போன்றோர் வகுத்த மாற்றுக் கருத்துகள் கற்பனை ஒப்புரவுக் (சோசலிசக்) கருத்துகளாக மலர்ந்தன. அக் கருத்துகள் பிரெஞ்சு நாட்டில் தனித்து வளர்ந்துப் பெருகியதனால் அதனை பிரெஞ்சு கற்பனை ஒப்புரவிடல் என்றே குறிப்பிடலாயினர்.

இங்கிலாந்தில் தொழிற்புரட்சித் தோற்றுவித்த அவலங்களும் ஆலிவர் கிராம்வெல் தலைமையில் ஆங்கில முதலாளிய வகுப்பு நடத்திய போரும் இங்கிலாந்தில் முதலாளிய அரசை நிறுவின. 1789-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் நடந்த முதலாளியப் புரட்சியும் நிலக்கிழமை ஆட்சியை வலியத் தூக்கி எறிந்தது. அந் நிகழ்ச்சிகளின் வீச்சுகள், நிலக்கிழமை வழி வேளிர் அரசுகளாகத் துண்டுபட்டிருந்த செருமனியை ஒரு நாடாக- நாட்டினமாக- இணைக்கவல்ல உள்ளுணர்வைத் தந்தன. சமய வழிக் கோட்பாடுகளிலும் கருத்துமுதல் மெய்யியலிலும் அன்று ஊறித்திளைத்துநின்ற செருமானிய மெய்யியலை அம்முதலாளியத்தின் வீச்சு உசுப்பிவிட்டது. அந்த செருமானி-யில் எகல் (1770-1831) என்னும்பேரறிஞர் பண்டைக் கிரேக்க இடிபாடுகளைத்தேடியதின் வாயிலாகப் படைத்த கருத்துமுதல் அறிவின் இயங்கியல் பார்வை மேலைஉலகையே கவரத் தொடங்கியது. இம்மானுவேல்கான்ட் (1724-1804), பிக்டே (1762-1814) லுத்விக் பயர்-பாக் (1804-1972), இளம் எகலியர்கள் போன்ற அறிஞர்கள் தோற்றுவித்த புதிய அறிவு நிலையைப் பருகி வளர்ந்தது அன்றைய செருமானிய மெய்யியல். இளம் எகலியர்களில் ஒருவராகத் தொடங்கிய கார்ல்மார்க்சு (1818-1883) செருமானிய அறிவுத் துறை பெற்ற முகிழ்ச்சியாக மலர்ந்தார். அவர் வகுத்த உலக விளக்கம், 1. செருமானிய மெய்யியல், 2. பிரெஞ்சு கற்பனை ஒப்புரவியல், 3. ஆங்கில- அரசியல் பொருளியல் என்னும் மூவகை ஊற்றுக் (கண்களைக் கொண்டதாக இருந்தது. (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7516

உள்ளங் கவரும் சிந்து நாகரிகம்

— பொன் - கண்ணன்.

1922-ஆம் ஆண்டு தமிழர்களுக்கு மிகமிக முகாமை வாய்ந்த ஓர் ஆண்டு எனலாம். அந்த ஆண்டில்தான் சிந்து மாநிலத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் ஆரப்பா, மொகஞ்சதாரோ, என்ற இரு புதையுண்ட நகரங்கள் கண்டு எடுக்கப்பட்டன. அதன் காலம் சற்றேறக் குறைய 5000 ஆண்டுகட்கு முற்பட்டது என்றும், அதில் காணப்படும் நாகரிகம் ஐயத்திற்கிடமின்றித் திராவிட நாகரிகமே என்றும் நடுநிலை மேனாட்டு ஆராய்ச்சி அறிஞர்களான வயவர். **சான் மார்சல்** (Sir. John Marshall), **ஈராசு பாதிரியார்** (Fr. Heras) போன்றோர் அழுத்தந் திருத்தமாகக் கூறி விட்டனர்.

அங்குக் காணப் பெறும் நாகரிகம் உலக வரலாற்று ஆசிரியப் பெருமக்களை வியப்பில் ஆழ்த்தியது. இன்று காணும் புது அறிவியல் முன்னேற்றங்களை நினைத்தும் பார்க்க இயலாத பன்னெடுங்காலத்திற்கு முன்பே நமது முன்னோர் எத்தகு நாகரிகத்துடன் வாழ்ந்து காட்டினர் என்பதை எண்ணுந்தோறும் மகிழ்ச்சியும், அத்தகைய நாகரிக வாழ்க்கை வாழ்ந்தவர்களின் வழித்தோன்றல்களாகிய நாம் இன்று " எடுப்பார் கைப்பிள்ளைகளாக " மாறிவிட்ட இழி நிலையை நினைக்குந்தோறும் அளப்பரும் மன உளைச்சலும் ஏற்படுகின்றன.

அக்கால வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. படிக்கட்டுகளுடன் கூடிய மாடிகள் உள்ளன. கழிகள் மீது தடித்த பாய்களை விரித்து, அவற்றின் மீது களிமண் பரப்பித் தட்டையான கூரைகள் வேயப்பெற்றுள்ளன. மாடியிலிருந்து கழிவுநீர் கீழே செல்ல, சுட்ட மண் குழாய்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. ஒவ்வொரு வீட்டிலும் பள்ளியறை, உவளகம் (அந்தப் புரம்), சமயலறை, குளிக்கும் அறை தலைவாயில் முதலியவை இருந்தன. வீடுகள் நாற்புறமும் அறைகளும் நடுவே முற்றமுள்ள " நாற்சார்பு " வீடுகளாக கட்டப்பெற்றுள்ளன. ஒவ்வொரு வீட்டிற்கும் கிணறு உண்டு.

பெரிய வீதி முப்பத்து மூன்று அடி அகலம் கொண்டதாகவும், இருபுறத்தும் வீடுகளைக் கொண்டதாகவும் உள்ளது. அப்பெரிய வீதியைப் பல சிறிய வீதிகள் குறுக்கே கடந்து செல்கின்றன. வீதிகளின் இருபுறத்தும் செங்கற் பதித்த கழிவுநீர் வாய்க்கால்கள் உள்ளன. வீடுகளிலிருந்து வெளியாகும் கழிவுநீர் செங்கற்பதித்த அல்லது சுட்ட களிமண்ணாலான குழாய்கள் வழியாக வீதியிலுள்ள வாய்க்காலில் வந்து கலக்கும்.

இதுவன்றி, மக்கள் வெளியில் சென்று நீராடுவதற்கென்று படிக்கட்டுகளுடன் கூடிய பொது நீராடுந்துறைகளும், இன்பமாகப் பொழுது போக்குவதற்கு ஏற்ற பூம் பொழில்களும், மக்கள் கூடிக் கருத்துரையாடச் சாவடிகளும், வழிபோக்கர் தங்கிச் செல்வதற்கேற்ற தங்கும் விடுதிகளும் காணப்படுகின்றன.

www.thamizham.net - Free E book No 7516

அக்கால மக்கள் நெல், கோதுமை, எள், பட்டாணி, பார்லி, பேரீச்சம் பழம், பல்வகைப் பழங்கள், தவசங்களை அரைத்துச் செய்த பலவகைத் தின்பண்டங்கள், காய்கறிகள், பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், ஆடு, மாடு, பன்றி, ஆமை, முதலை, பறவைகள் ஆகியவற்றின் இறைச்சிகள் ஆகியவற்றை உண்டு வாழ்ந்துள்ளனர்.

அரையில் ஒன்றும் தலையில் ஒன்றுமாக இரண்டு ஆடைகளை அணிந்துள்ளனர். பெண்கள் அரையில் மட்டும் உடை அணிந்துள்ளனர். நாட்டியப் பெண்கள் பெரும்பாலும் வெற்றுமேனியராகவே இருந்துள்ளனர். செல்வர்கள் அழகிய வேலைப்பாடுடன் கூடிய மேலாடையை அணிந்துள்ளனர். யானை மருப்பு, எலும்பு, மாட்டுக் கொம்பு முதலியவற்றாலான சீப்புகள் தலைவாரப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. பளபளப்புச் செய்யப்பட்ட மாழை (உலேக)த்தகடுகளை முகம் பார்க்கும் கண்ணாடிகளாகப் பயன்படுத்தியுள்ளனர்.

பெண்கள் கூந்தலைப் பலவாறு கோதியும், பின்னியும் முடிந்தனர். சிலர் பின்னலை நாடாக்கொண்டு பூக்கள் போல முடிந்து பொன், வெள்ளி, யானை மருப்பாலான ஊசிகளைக் கொண்டு குத்தி வைத்துள்ளனர். ஆடவர் தலைமுடியை நீளவளர விட்டுச் சுருட்டி பின்புறம் முடிந்துள்ளனர். சிலர் உச்சிக் கொண்டைபோட்டும் சிலர் முடியைக் குறுக வெட்டி வரிவரியாகத் தொங்கும்படி சுருட்டியும் விட்டுள்ளனர். இருபாலரும் கண்ணுக்கு மையெழுதிச் செங்காவிப் பொட்டிட்டனர். பொட்டிடும் பொடிகளை முத்துச் சிப்பி ஓடுகளில் வைத்துள்ளனர். முகத்திற்கு நறுமணங் கலந்த வெண்பொடியைத் தடவி அழகு செய்துள்ளனர்.

குயவர் சக்கரங்கள் கொண்டு அழகிய மண்பாண்டங்களைச் செய்து வகைவகையான வண்ணம் பூசியுள்ளனர். நீரருந்தும் கிண்ணங்கள், தட்டுகள், மூக்குடைய ஏனங்கள், தாம்பாளங்கள், தாழிகள், நீர்த் தொட்டிகள், பல்வகை மூடிகள், மணைகள், பூசைத் தட்டுகள், அனற்சட்டிகள், மைக்கூடுகள் இப்படிப் பலவகை ஏனங்கள், கலங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. எலிப் பொறிகள், அம்மி குழவி, திரிகை, உரல், பல வகை விளக்குகள், மெழுகுத்திரி வைக்கும் தட்டுகள், கல் ஊசி, எலும்பு ஊசி, கற்கோடரி, செம்பு, அரிவாள், நாணல்- கோரைப் பாய்கள், நாற்காலி, முக்காலி, மரக்கட்டில் முதலியன பயன்படுத்தப் பட்டுள்ளன.

சிறுவர்கள் மண், மரம், சங்கு, மருப்பு, சிப்பி, ஓடுகள், எலும்புகளால் செய்யப்பட்ட பல வகைப் பொம்மைகள், மண்பந்து, கிலுகிலுப்பை, வாற்புறம் துளையுடைய கோழி, குருவி போன்ற ஊதுகுழல், தலை அசைக்கும் எருது, வண்டிகள், சொக்கட்டான் காய்கள் தாயக்கட்டைகள், கோலி முதலியவற்றை வைத்து விளையாடினர். பெரியவர்களுக்குச் சதுரங்கம், சொக்கட்டான், தாயம் முதலியன

www.thamizham.net - Free E book No 7516

விளையாடுவதும், வில், அம்பு கொண்டு விளங்குகளை வேட்டையாடுவதும் செம்போத்து(கௌதாரி)களைப் போர் செய்ய விடுவதும் சிறந்த பொழுது போக்குகளாயிருந்தன.

வெண்கலத்தால் செய்யப்பட்ட கத்தி, வாள், ஈட்டி, அம்பு, கோப்பைகள், நீர்க்குடுவைகள், தட்டுகள், தாழிகள், மூடிகள், உடை, வாள், இடைவாள், வேல்கூர்வாள், உளி, கோடரி, வாய்ச்சி, மயிர் மழிக்கும் கத்தி தூண்டில் முள், ஆடை தைக்கும் ஊசி, கொழு, கொண்டை ஊசிகள், தெறிகள், முகம்பார்க்கும் கண்ணுடிகள், மை தீட்டும் குச்சிகள், பதுமைகள், மணிகள் ஆகியவற்றைச் செய்து பயன் படுத்தி உள்ளானர்.

பொன், வெள்ளி, வெண்கலம், உயர்ந்த கற்களால் செய்யப் பெற்ற அணிகலன்களையும் பொன்மணி, வெள்ளிமணி பச்சைக்கற்கள் பளிங்குமணிகள், கோத்துச் செய்யப்பெற்ற கழுத்து மாலைகள், மணி வடங்களால் ஆன அரைப்பட்டிகள், தங்க மணிகள். கோத்துச் செய்யப்பட்ட கையணிகள், தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம், பளிங்குகற்கள், சங்கு, சிப்பி, களிமண் முதலியவற்ருல் செய்யப் பட்ட கைவளைகள், கால் வளைகள் நெற்றிச் சுட்டிகள் தங்கக் காதோலைகள், நாடாக்கள், கொண்டை ஊசிகள், மூக்குத்திகள், மோதிரங்கள், தெறிகள், ஓவியம் அழுத்திய மணிகள், மந்திரக்காப்புகள் தங்கக் கவசமிட்ட மணிகள் முதலியவற்றைப் பெண்கள் அணிந்துள்ளனர்.

மக்கள் பலவகைத் தொழில்களில் ஈடுபட்டு இருந்துள்ளனர். கொத்தர், குயவர், கற்றச்சர், கன்னூர், பொற்கொல்லர், மணிவினைஞர் மணித்தேர்வாளர், சிற்பி, ஓவியர், மருத்துவர், மயிர்வினைஞர், துப்புற வாளர்கள், வேளாளர். நெசவாளர், தையற்காரர், பாய்முடைவோர், கப்பல் கட்டுவோர், வணிகர், ஆடுவோர், பாடுவோர், கணித வல்லுநர், எழுத்தறி புலவர் எனக் குமுகாயத்தின் பல தொழிற்பிரிவினரும் ஒருங்கிணைந்து உயர் வாழ்க்கை வாழ்ந்த அம்மக்களின் வாழ்க்கை நெறி இன்றைய வரலாற்று அறிஞர்களை வியப்பில் ஆழ்த்துகிறது.

அக்காலத்தில் இறந்தவர்களைச் சிலர் புதைத்தனர். சிலர் சுட்டுச் சாம்பலை முட்டிகளில் இட்டு நிலத்திற் புதைத்தனர். சுமைகளை எடுத்துச் செல்லவும், வழிப்போக்கிற்கும் எருது, கழுதை வண்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிவக்குறிகள், கொம்புள்ள தெய்வங்கள், நாற்கை தெய்வங்கள், எருதுகள், ஒற்றைக் கொம்பு எருது, ஞாயிறு, பாம்பு, புரு, கலுழன், மரம், ஆறு, மரம் வாழ்தெய்வங்கள் ஆகியவற்றை வழிபட்டார்கள். சிவன் முக்கண் தெய்வமாகவும், விடையூர்வனுகவும், வணங்கப்பட்டுச் சைவநெறியே மிக முகாமையாகத் தழைத்தோங்கியதாக அறியப்படுகிறது.

www.thamizham.net - Free E book No 7516

பெருஞ்சித்திரனுர் புகழ் பாடுவேன் !

— நாவை-சிவம் இல.இ, மணப்பாறை.

மாசர் தெரு,
திருச்சி-62001

அடிமைத் தனங்களில் ஆழ்ந்து கிடந்திடும்
அன்புத் தமிழினை மீட்கவே -தமிழ்
துடிக்கும் உணர்வொடும் தூய நினைவொடும்
தொல்தமிழ் நன்னிலம் கேட்குவோன்!
வெடிக்கும் தமிழ்ப்பகை வீழ்த்திட நாடொறும்
வெற்றிப் படைமருந் தாக்குவோன்! -அந்தப்
பிடிக்கும் தமிழுரு; பெற்றித் தமிழ்த்திரு
பீடுறு நல்வினை ஊக்குவேன்!

நூறுநூ றுண்கள் நொண்டியைப் போலவே
நொடிந்திடும் நம்குலம் வாழவே -பெரும்
ஏறெனத் தோன்றியே இன்னலைத் தாண்டியே
இன்றமிழ்த் தொண்டினை ஆளுவோன்!
மாறிலாச் செந்தமிழ் மண்டிய கொள்கையால்
மாண்புற மக்களைத் தூண்டுவோன்! -அந்த
விறுரைப் பாமகன், வேங்கை உருவினன்,
வெற்றிபெற் றுய்யவே வேண்டுவேன்!

முந்து தமிழினை முற்றுங் குலைத்திடும்
மொய்ம்பிலா ஆரியம் சாடுவோன்!-மொழித்
தந்தை"பா வாணரின" தன்னிக ரற்றநல்
தனித்தமிழ்ப் பாதையில் ஓடுவோன்!
இந்தி விரட்டியோன்; வெஞ்சிறை வாடியோன்;
எந்தமிழ் வாழவே நாடுவோன்! -அந்த
செந்தமிழ்க் காவலன் சீர்மை தவழ்பெருஞ்
சித்திரன் நற்புகழ் பாடுவேன்!

(தொடர்ச்சி அடுத்தபக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரு நூற்றுண்டுகளின் கண்டுபிடிப்புகளான நீராவி, மின்சாரம், கன்னெய் (பெட்ரோல்), வெடி மருந்துகள் ஆகியவற்ருல் உண்டான பயன்களைச் சற்று ஒதுக்கி வைத்து விட்டு அக்கால மக்களின் வாழக்கையையும், இக்கால மக்களின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானுல், அக்கால மக்கள் உறுதியாக இக்கால மக்களை விடசிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்துள்ளனர் என்பது வெள்ளிடைமலை. உலக நாகரிக வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய சீர்த்தி மிகு வரலாற்றைப் படைத்த திராவிடர்கள்-தமிழர்கள்-அவர்களின் வழித்தோன்றல்கள் நாம் என்று எண்ணும் போது உண்டாகும் மகிழ்ச்சிக்கு எல்லையும் உண்டுகொல்!

www.thamizham.net - Free E book No 7516

தென்மொழி, இன்றமிழ்ச் சிட்டினுல் நற்புதுத்
திருப்பம் தமிழினில் நாட்டியோன்! —பிறர்
நன்மொழி, புன்மொழி, எம்மொழி தன்னையும்
நாடா துயர்வழி காட்டியோன்!
என்மொழி, என்னினம், என்னுடை நாடென
எப்பொழு தும்வினை யாற்றுவோன்! —அந்தப்
பொன்மொழிப் பாவலன் பூந்தமிழ்க் கோளரி
பொன்றுப் பெரும்புகழ்ப் போற்றுவேன்!

கழகப் புலவனின் கற்பனை தன்னிலும்
கனிச் சாறுய்ப் பாடல்கள் ஓதுவோன்! —இன்
பழகுத் தமிழ்க்குயில் பார தாசனுய்ப்
பைந்தமிழ் காக்கவே கூவுவோன்!
பழமையில் ஊறிய பாழும் மடமையைப்
பாங்குறச் சாடியே வீழ்த்துவோன்! —அந்த
அழகுத் தமிழ்மகன்! அஞ்சாத நெஞ்சினன்
ஆண்மைச் சிறப்பினை வாழ்த்துவேன்!

உலக முழுவதும் உள்ள தமிழினம்
ஓங்கிய வாழ்வினில் உய்யவே —சிறு
கலகமு மில்லாத கற்கண்டுக் கொள்கையால்
கலைத்தமிழ் வையத்தைச் செய்யவே
உலகத் தமிழின உயர்வுக் கழகமாம்
ஒப்பி லியக்கத்தைத் தோற்றியோன்! —அந்த
இலகும் தமிழ்க்குல ஏந்தலாம் சித்திரன்
இன்னடி ஏத்திப்பா சாற்றுவேன்!

1982-க்குள் ஐந்து இலக்கம் உறுப்பினர்கள்

உ. த. மு. க. வின் தொடக்க மாநாடு வெற்றியுடன் முடிவடைந்து, ஆங்காங்கே அமைப்புகளை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப் பெற்று வருகின்றன. விரைவில் மாவட்ட அமைப்புகளும், கிளைகளும் தொடங்கப் பெறும். அவைபற்றி அதிகார முழுமையான அறிக்கைகள் விரைவில் வெளிவரும். அமைப்பு முயற்சியுடனும் கழகத்திற்கென்று ஓர் இதழ் முயற்சியும் செய்யப்பெற்று வருகிறது. இவற்றுக் கிடையில் உ. த. மு. க. வின் தொடக்கக் குறிக்கோளாக, நாடு முழுவதிலும், உலக நாடுகள் அனைத்திலும் இருந்து, கழகத்திற்கு 1982-ஆம் ஆண்டு முடிவதற்குள் ஏறத்தாழ ஐந்து இலக்கம் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று அன்பர்களும் ஆர்வலர்களும் மனத்தில் உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - விளத்தங்கள், வேண்டுகோள்கள் உறுப்பினர் சேர்ப்புப் படிவங்கள் அச்சாகி வருகின்றன.

www.thamizham.net - Free E book No 7516

தமிழினக் காப்பு

(சென்னை பெரியார் திடலில் 8-11-81 அன்று நடந்த தமிழினக் காப்பு மாநாட்டில் கு. வெ. கி. ஆசான் மிகச்சுருக்கமாக ஆற்றிய உரையோடு ஒட்டிய கருத்துத் தொகுப்பு இங்கே தரப்படுகிறது.)

துறவி ஒருவரின் துயரம்

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டப மேடையில் 1956-57 வாக்கில் பேச வந்த துறவி ஒருவருக்கு மாலையணிவிக்கப் பெற்றது. "துறவிகள் பொதுவாக மாலைகளை ஏற்பதில்லை. இருப்பினும் நீங்கள் போட்டுள்ள இந்த மாலையை நான் வெட்சி மாலையாகக் கொள்கிறேன். ஆம்! தமிழன் தன் இனத்தைக் காத்துக்கொள்ளப் போராட வேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறான். அதற்கு அடையாளமாக, இம் மாலையை அணிந்து கொள்கிறேன்." எதைத்துறந்தும், இனிய தமிழ் மொழிப்பற்றையும், அம்மொழிபேசும் மக்களின் உரிமை நாட்டத்தையும் துறவாத தனிநாயக அடிகள், ஈழத்தமிழர்கள் அக்காலத்தில் சிங்கள வெறியர்களின் கொடிய தாக்குதலுக்கு ஆட்பட்டதை நினைவிற்கொண்டு மேற்கண்டவாறு உணர்ச்சியோடு குறிப்பிட்டார்.

சற்றேறக் குறைய 25 ஆண்டுகள் கழிந்த பின்பும் அதே அவலம், மிகுந்து தொடருகின்ற நிலையை, அவர் இயற்கை எய்துவதற்குச் சில மாதங்கட்கு முன் 1980-இல் ஆற்றிய, தமிழ் ஈழத் தந்தை செல்வநாயகம் அவர்களின் நினைவுச் சொற்பொழிவின் போது தனிநாயக அடிகளார் சுட்டிக்காட்ட மறக்கவில்லை.

அடிகளாரின் இவ்விரு உரைகளை நினைவிற் கொண்டால், காப்பற்ற தமிழ் இனம் தொடர்ந்து தாக்குதலுக்கும் தாழ்வுக்கும் ஆட்பட்டிருப்பதை உணரமுடியும்.

மேலாண்மை

இலங்கைத் தீவில் ஈழத்தில் வாழும் தமிழர்கள் மட்டுமின்றி, இந்தியாவில் தமிழகத்திலும் மொழிக்கும். இனத்திற்கும், நாட்டிற்கும் — மண்ணிற்கும் ஏதங்கள் தொடர்கின்றன. தமிழரின் மொழி உரிமையும் மண் உரிமையும் பொருள் நலமும் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன. அவர்களுடைய இனமானத் தாழ்வு, மத நம்பிக்கையின் பெயரால் இன்னும் தொடர்கிறது. மொழியை இரண்டாவது மூன்றாவது நிலைக்குத் தள்ளியும் மண் உரிமையோடு தொழில் வாய்ப்பைப் பறித்தும், இனத்திற்கு இழிநிலையைக் குமுகாயத்தில் ஏற்படுத்தியும் தமிழர்மீது செலுத்தப்படும் மேலாண்மையை முற்றிலும் அகற்றிக் காப்புச் செய்து கொள்ளவேண்டியது கட்டாயத் தேவையாகிறது.

மொழி உரிமை

மொழி என்பது கருத்துப் பரிமாற்றக் கருவிதானே, அதற்காக இவ்வளவு கவலைப்படுவதேன், எனக் கேட்பார் உண்டு. வரலாற்று

www.thamizham.net - Free E book No 7516

நிகழ்வு ஓட்டத்தைக் கவனியாததால் இப்படிக் கூறுகிறார்கள். கழகக்காலத்திற்குப்பின், பல்லவ பாண்டிய, சோழ, விசய நகர ஆட்சிக்காலத்தில் நம் நாட்டில் கோயில்களில் இருந்து தமிழ் நீக்கப்பட்டு. அவ்விடத்தைச் சமற்கிருதம் பற்றிக்கொண்டது. அதன் பொருளியல் விளைவு என்ன? ஆற்றுப் படுகையில் இருந்த நன்செய் நிலங்கள் எல்லாம் வடமொழி மந்திரங்களை ஓதிய வேதியர் கைக்குப் போய்விட்டன. மற்றவர்கள் புன்செய் நிலங்களிலும் மேட்டுப்பகுதி களிலும் பயிர்செய்யும் கல்விஅறிவற்ற கடின உழைப்பாளிகளாயினர்.

மத நம்பிக்கை, மக்களை ஆட்டிப்படைத்த நிலக்கிழார் அமைப் புக் காலத்தில், சமற்கிருதம் தேவமொழி என்ற மூடநம்பிக்கையைப் புகுத்திப் பார்ப்பன மேலாளுமை நிலைநாட்டப்பட்டது. அரசியல் நடப்புகள் முகாமை பெற்றுள்ள இக் காலத்தில், இந்தியா பல தேசியங்களைக் கொண்ட நாடு (Multi-national Country) என்ற மெய்ம்மையை மறைத்து, இந்தியா ஒரே தேசியம் (Single nation) என்ற பொய்யைப் பரப்பி இந்தி மொழி பேசுவோரின் மேலா -ளுமையை அரசியல், ஆளுமை, அலுவலக, வணிக, தொழில் துறைகளில் ஏற்படுத்தும் முயற்சி தொடர்ந்து கட்டுப்பாடாக நடக்கிறது.

இந்தி மொழியாருடன் சமநிலையில் நாம் போட்டியிட இயலா வகையில் இன்றைய அரசியல் சட்டமும் நடப்பும் இருக்கின்றன. அதோடு நமது மரபும் வரலாறும் தனிச்சிறப்பும் ஒதுக்கித்தள்ளப் படும் நிலை நிலவுகிறது. இந்திய வரலாற்றை முதன் முதலாக முழுமையாக எழுதிய வின்செட் இசுமித் திருவள்ளுவரைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் : "தனித்த தூய்மையும் அழகும் வாய்ந்த அறக் கோட்பாட்டைக் குறள் ஆசிரியர் கற்பித்தார் : நான் தெரிந்த வரையில் வடநாட்டுச் சமற்கிருத இலக்கியத்தில் எதுவும் அதற்கு இணையாக இல்லை." (Vincent A Smith -The Oxford History of India-4th Edition 1981) இவ்வாறு பல அறிஞர்களால் போற்றப் படும் வாழ்வியற் கோட்பாடுகளையும் இலக்கிய வளங்களையும் பெற்ற தமிழ் மொழியையும் வரலாற்றையும் கற்று, இந்திய ஆளுமைப் பணித்துறை (IAS) போன்ற உயர் பதவிகளையோ, மற்ற பதவி களையோ பெற இயலாது. மாறாக இந்தி மொழியையும் சமற்கிருதத் தையும் கற்றால் ஏற்றம் கிட்டும். இதனால் வாழ்க்கைப்போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற ஆவலில் நமது மொழியும் வரலாறும் தனித்தன்மையும் புறக்கணிக்கப்பட்டு, நம் நிலை நிலையாகத் தாழ்ந்து விடும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம்.

மாவட்ட ஆட்சியாளர், காவல்துறைத் தலைவர் முதலிய பெரிய பதவிகளிலும் நமது மாநிலத்தில் உள்ள நடுவண் அரசு அலுவலகங் களிலும் ஏற்கனவே பிற மாநிலத்தாரின் கை ஓங்கிவரக் காண்கிறோம்.

www.thamizham.net - Free E book No 7516

நமது மொழி சம நிலையை இழக்கும் பொழுதும், விலக்கப்படும் பொழுதும் நாம் தாழ்த்தப்படுகிறோம் என்பதை உணர்ந்து, எல்லாத் துறைகளிலும் எல்லா மட்டங்களிலும் அதற்கு முதன்மையும் முகாமையுமான இடத்தை நாம் போராடிப் பெறவேண்டும்.

மண்ணும் பொருளும்

தமிழகத்தின் தலைநகரிலும் வேறு பெருநகர்களிலும் நம் மக்கள் வீட்டு மனைகள் வாங்க இயலா அளவிற்குப் பிற மாநிலத்தார் படையெடுப்பு நிகழ்வதாக, பொறுப்பான பதவிகளில் உள்ள ஆளும் கட்சியினரே மனத்துயரோடு சொல்வதைக் கேட்கிறோம். மிகச்சிறு மாநிலமாகிய கேரளத்தில் மக்கட் தொகை வகைதொகையின்றிப் பெருகுவதால், அங்கு அவர்கட்கு வாழ்வு ஈட்டத்திற்கான வழிவகை-கள் இன்றித் தமிழக மண்ணில் தொடர்ந்து பெரும் அளவில் குடியேறு வதைக் காண்கிறோம். தமிழகத்தில் மலையாளிகள் சிறுபான்மையாரா கையால், அத்தகைய சிறுபான்மையோருக்கே உரிய கட்டுப்பாட்டுட னும் ஒற்றுமையுடனும் செயலாற்றி, வெவ்வேறு துறைகளிலும் சிறப்பாக முன்னேறி நம் வாய்ப்புகளைப் பறித்து விடுகிறார்கள்.

மார்வாரிகளும் குசராத்தியரும் இன்னும் பிற வடநாட்டுக்காரர் களும் தங்களுக்கு இருக்கும் செல்வத்தையும் அரசியல் சாய்காலையும் கொண்டு வைப்பகங்களின் துணையோடு, நமது மாநிலத்தில் பண முதலிடு செய்து, வாணிக வழியில் நமது மாநிலத்தின் ஊதியத்தின் பெரும்பங்கைப் பிழிந்து சென்றுவிடுகின்றனர்.

இவ்வாறு மண்ணுரிமை, பொருளியல் முன்னேற்றம், வேலை வாய்ப்பு முதலிய துறைகளில் நாம் பின்தள்ளப்படுவதிலிருந்து நாம் காப்புச் செய்துகொள்ள வேண்டாமா?

பிறநாட்டு மக்களின் குடியேற்றத்தைத் தடுப்பதற்கு இந்திய அரசிற்கு முழு உரிமை இருப்பதுபோல், தமிழ் நாட்டிற்குள் பிற மாநிலத்தாரும் மொழியினரும் நிலையான உடைமைகளை உரிமை யாக்கிக் கொள்வதையும், அதிகாரிகளாகவும் அலுவலர்களாகவும் அமர்த்தப்படுவதையும் முறைப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் தமிழ் நாட்டு அரசிற்கு முழுஉரிமை இருக்கவேண்டும். அப்பொழுதான் நமது மண் நம்மிடமிருந்து பறிபோகாமலிருக்கும்; தமிழ் நிலம் தமிழருடைய தாக இருக்கும். தமிழர் பிறரின் சுரண்டலுக்கு ஆட்படாதவராக இருப்பர். உழவும் தொழிலும் வணிகமும் நன்கு முன்னேறி, அம் முன்னேற்றத்தின்பயனை நம்மக்கள் முழுமையாகத்துய்க்க இத்தகைய காப்புத்தேவை இக் கோரிக்கை புதிய ஒன்று அன்று. ஏற்கனவே காசுமீர் மாநிலத்திற்கு இத்தகைய காப்பு அரசியல் சட்டப்படி அளிக் கப்பட்டிருக்கிறது, அங்கு நாம் யாரும் சென்று ஓர் அடி நிலத்தைக் கூட உரிமையாக்கிக் கொள்ள இயலாது.

இரும்பு-எஃகு ஆலைகளை நிறுவுதல், இருப்புப் பாதைகளைப் போடுதல், சேது கால்வாய்த் திட்டம் முதலியவற்றை மேற்கொள்ளு

www.thamizham.net - Free E book No 7516

-தல் என்ற வகையில் கவனிக்கும்பொழுது நம்முடைய தொழில் முன்னேற்றத்திற்கு நடுவண் அரசின் ஆதரவு மிகவும் போதாது என்பதைக் காண்கிறோம்.

சமனியக் குமுகாயமும் தன்மானமும்:

நமது இனக்காப்பை உள்ளிருந்து குலைக்கும் ஒரு தீய ஆற்றலாகச் சாதி அமைப்பு இருக்கிறது என்பது அறிந்து, அதை ஒழிக்கவும் சமனியக் குமுகாயத்தை நிறுவவும் தளராது முயலக் கடமைப்பட்டுள்ளோம். நம் இனத்தை இழிவுபடுத்தி, நம்மைச் சூத்திரராகவும் பஞ்சமராகவும் ஆக்கும் இந்துமதத்தை ஏற்கும்வரை, குமுகாய-பண்பாட்டு விடுதலை நமக்குக் குதிரைக் கொம்பாகத்தான் இருக்கும். இனத்திற்கும் தனிமாந்தனுக்கும் இழிவும் தாழ்வும், புறக்கணிப்பும் தருகிற சமய - குமுகாய முறைகளை எடுத்தெறிய வேண்டும். ஏற்றத்தாழ்வற்ற குமுகாய அமைப்பு நமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி வலிமையைச் சேர்க்கும்.

முடிவுரை :

உலகில் உள்ள தமிழ் மக்களிடையே, ஈழநாட்டாரும், தமிழ்நாட்டாரும் தனி உரிமைகள் பெறத் தகுதியுடைய இரு தேசிய இனத்தவர் ஆவர் இவ்விரு இனங்களின் காப்பு, உண்மையான கூட்டரசில் கிடைக்கப்பெறும் முழுமையான தன்னாட்சியில் இயல்வதாகும் அத்தகைய தன்னாட்சிக் கோரிக்கையை-கூட்டரசு முறையை-ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டு, அலுத்து, ஏமாறி அல்லலுக்கு உள்ளாகி, இன்று தமிழ் ஈழம் தனிநாடாக மலரத் தோள் தட்டி நிற்கிறது.

தனித்தன்மையும் தற்காப்பும் அற்றவர்கள் உலக நலத்திற்கு எவ்விதப் பங்கும் ஆற்ற இயலாது. தங்களைத் தாழ்த்திக் கொண்டவர்கள் நாளாவட்டத்தில் மண்ணுக்குச் சுமையாவரே அன்றி, மக்கள் இனத்திற்கு நலம் பயவார். தனித் தன்மையையும், வெவ்வேறு உரிமைகளையும், நலங்களையும் காத்துக் கொள்வதற்காக உலகிலுள்ள ஒவ்வொரு தேசிய இனமும் தகுந்த அரசியல் ஏற்பாடுகளைச் செய்து கொண்டுள்ளன. அத்தகு ஏற்பாடுகளைப் பெறாத தேசிய இனங்கள் போராடிக் கொண்டிருக்கின்றன.

அறிவுடைமை என்னும் அதிகாரத்தில்,

"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"

என்பார் வள்ளுவர். உலகத்துத் தேசிய இனங்கள் அனைத்தும் தங்கள் தனி நலனைக் காத்துக்கொண்டு ஊன்றி நடக்கையில், நமது தனித்தன்மையை மறந்து நாம் இடறி விழுந்துகொண்டிருப்பது வாழ்வாகாது. பிறர்நலம் பேணும் நல்லவர்களாக இருப்பதோடு, நம் நலம் காக்கும் வல்லவர்களாகவும் நாம் இருப்போமாக!

— நன்றி- **இங்கும்அங்கும்** தொகுதி 2. பொத்தகம் 11. நவம். '81.

www.thamizham.net - Free E book No 7516

தமிழினக் காப்பு மாநாட்டில் தமிழினத் தளபதி,
'விடுதலை' ஆசிரியர். கி. வீரமணி தொடக்கவுரையாற்றுகிறார்.

மேடையில் உவமைப் பாவலர் சுரதா, பேரா. சி. பாலசுப்பிரமணியனார், பேரா. மெ. சுந்தரம், பாவலரேறு, பாவலர். முகவை இராசமாணிக்கம், பேரா. மு. ச. சிவம், பேரா. இரா. இளவரசு, பேரா. பொற்கோ முதலியோர் அமர்ந்துள்ளனர்.

உ. த மு. க. தொடக்க மாநாடு நடந்த பாவாணர் அரங்கில் தலைவர்கள் அமர்ந்திருந்த காட்சி!

வலமிருந்து இடம் : வழக்கறிஞர் இரா. கத்தூரி, 'சிந்தனையாளன்' ஆசிரியர் வே. ஆனைமுத்து, ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், பாவோகி சுத்தானந்த பாரதியார், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், பாவலரேறு.

www.thamizham.net - Free E book No 7516

முதல்நாள் இறுதியில் இயக்க மெல்லிசை நிகழ்ச்சி - சிரீபதி குழுவினர்.

இயக்கப் பாடல்கள் சிரீபதியின் இன்குரலோடும், இசைக்கருவி-களின் இன்னொலித் தழுவலோடும் சென்று, அவையோரின் தமிழுள்ளங்களைத் தூண்டி எழுச்சியூட்டின!

இசைப் பாடல்களை அமிர்தலிங்கம் இணையர், அறிஞர்கள் கேட்டு மகிழ்ந்த காட்சி!

சிரீபதி தென்மொழிப் பாடல்களைப் பாடி அவையோரை மெய்ம்மறக்கச் செய்தார்.

சிரீபதியின் இன்னிசைத் தென்றல் இரண்டு மணி நேரம் வீசி அவையோரை மணங்கிளரச் செய்தது

www.thamizham.net - Free E book No 7516

களத்திலே நிற்கிறேன்!

மலேசியப் பாவலர் ஐ. உலகநாதன்.

களத்திலே நிற்கிறேன்; கருவிகள் கொண்டுவா;
காலத்தை மாற்றுகின்றேன்!
நிலத்திலே யாருக்கும் நாமடிமை யில்லையெனும்
நிலையினை நாட்டுகின்றேன்!!
உளத்திலே மூண்டதீ உரையெல்லாம் மூளட்டும்!
ஊரெல்லாம் பரவட்டும் தீ!
நலத்தையே கெடுக்கின்ற நச்சுமரம் எதுவென்று
நார் உரித்துக் காட்டுகின்றேன்!

வீணையைத் தூக்கியெறி; வீரவாள் கொண்டுவா!
வேளையிது; தூங்கி விட்டால்
பானையில் பொங்குவது பச்சரிசியன்று; தமிழ்ப்
பனுவல்களே உலைகளேறும்!
மோனையெழில் தமிழ்; வாளின் முனையாக மாறட்டும்!
முட்டறுக்கும் துணையாகட்டும்!
பூனைகளே புறம்போங்கள் —புலிப்போத்தே! மறவருடன்
புறம்பாடும் மறம்பாட வா!

மலையகத்தில்- ஈழத்தில்- சாவகத்தில்- பர்மாவில்
மண்ணிருக்கும் இடங்கள் தோறும்
தலையகத்தை இழந்துவிட்ட தமிழகத்தின் உடன்பிறப்பு
தவிப்பதினிப் பொறுப்ப தில்லை;
விலைபேசிச் சிலபேரை வலைவீசி வளைத்திங்கு
விளங்குவது அமைதி யென்று
தொலைபேசிச் செய்திதரும் -தொடரான பொய்மைகளைத்
தூளாக்கப் புறப்பட்டு வா!

இந்தஇன எழுச்சிக்கு இங்கெவர் வேரானார்?
எம தந்தை பெரியார் அன்றோ?
இந்தமன வளர்ச்சிக்கு யாரிங்கு நீரானார்
எமதுயிராம் அண்ணன் அன்றோ?
அந்த இரு கண்களை; சந்தையிலே விற்று விட்டு
அங்காடிக் கண்ணு டிக்குள்
செந்தமிழை அடகுவைக்க முந்துகிற தமிழ்த்தலைவர்
சிந்திக்கக் கழகம் வேண்டும்!

(வேறு)

ஒருபத்துக் கட்சிகளை ஒன்றாக்கும் கூட்டணிகள்
சீட்டணிகள் குடைசாயும் அரோகரா!
திருப்பத்தூர் களத்திலே துருப்புக்குள் தகராறும்
செந்தமிழர் வீரமங்கு அரகரா!

www.thamizham.net - Free E book No 7516

உ. த. மு. க. செயற்பாட்டுக்கு உதவும் சில கருத்துரைகள்.

அந்தமான், போர்ட் பிளேயர் **இரா. விவேகானந்தன்**

பெருமதிப்பிற்குரிய தமிழ்த்திரு ஐயா பாவலரேறு அவர்கட்கு,

வணக்கம் பல — பற்பல ஆண்டுகளாக, பல்லாயிரக்கணக்கான உலகத் தமிழர்களின் நெஞ்சங்களிலே குடி கொண்டிருந்த ஏக்கம் உ. த மு. க. வால் நிறைவேறுகிறது என்பதில் ஐயம் இல்லை பரந்துபட்டு வாழும் நம்மினத்தின் தேவைகளையும், அல்லல்களையும் முறையோடு கேட்டறிய தாய் நிலமாம் தமிழகத்தில் இதுவரை இப்படி ஓர் இனந் தழுவிய இயக்கம் இல்லாதிருந்த அவல நிலையைக் களைந்தெறிந்து, உலகெங்கணும் கடல் கடந்து பரந்து வாழும் எம் போன்ற கோடிக்கணக்கான தொலைவாழ் தமிழர்களின் பேராவலை நிறைவேற்றிய தங்கட்கு எம் தாழ்ந்த வணக்கங்களைப் படையலாக்குகிறோம்.

தமிழ்நாட்டுத் தந்நலமிக்க அரசியல்காரர்களின் போராட்டத்தால் தன்மானமிழந்து கிடக்கும், தமிழ்நாட்டு அரசியல் சூழ்நிலை, தன்மானத் தமிழின இயக்கமாகிய உ. த. மு. க. வால் ஒரு புதுப் பொலிவு பெறட்டும்! உ. த. மு. க.வால் தமிழர் தம்மை யார், என்று உணர்ந்து கொள்ளும் தன்னுணர்வாவது ஏற்படட்டும்.

தன்மானமிழந்த நாணங்கெட்ட தன்மைகளையே மூலப் பொருளாகக் கொண்டு, அண்மைக் காலங்களில் மிக இழிவாக நடந்து, தமிழினத்திற்கே இழுக்கை ஏற்படுத்திக் கொண்டு வரும் ..... அரசியல்காரர்களை உ. த மு. க தொடக்க மாநாட்டுக்கு அழைக்காதது கண்டு, மகிழ்ச்சி அடைகிறோம். உ. த. மு. க. தன்மானத் தமிழுணர்வு மிக்கதோர் அறிவார்ந்த இயக்கமாக வளரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மாறிவரும் இவ்வுலகில் நம் தமிழ்நாட்டில், இன்றும் எத்தனையோ ஆயிரம்பேர் கல்வியறிவும், தூய்மையுணர்வும் இல்லாமல் உள்ளனர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

இமயத்தில் காலடியில் குமரிமுனைக் காவடிகள்
எங்கெங்கும் தமிழ்மானம் அரகரா!
உமியெல்லாம் போகட்டும் உள்ளரிசிபோல் தமிழர்
ஓரணியில் பெருகட்டும் மறவராய்!

விடுதலைத் தமிழகத்தை விரைந்திங்கு கொண்டுவர
விடிவெள்ளிக் கழகம் வாழ்க!
கெடுதலைகள் தலைசாய — கீழ்உரமாய் அதைத்தூவிக்
கிளர்ந்தெழுந்த நீவிர் வாழ்க! o

www.thamizham.net - Free E book No 7516

தமிழன் தமிழ் நாட்டை விட்டு வெளியே செல்லும் இடங்களிலெல்லாம் கூலியாகவும் கடைநிலைத் தொழிலாளியாகவுமே உள்ளான். காரணியம் போதுமான கல்வியறிவின்மையே என்பதில் தங்கட்கு வேறுபாடு இருக்க முடியாது ஐயா, எனவே, முதல் வேலையாக, நாட்டிலே கல்வியைப் பரப்ப மேற்கொள்ள வேண்டிய அனைத்தையும் உ. த. மு. க. ஒருமுகமாக முன்மொழிந்து அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் குறைந்தது 15 அகவை வரை அனைவர்க்கும் கட்டாயக் கல்வி முறையை ஏற்படுத்தினால் கூட மிகவும் நன்றாக அமையும். உ த. மு. க. இதில் ஒப்பற்ற தொண்டாற்ற வேண்டும் என்று கைகூப்பிக் கேட்டுக்கொள்கிறேன். (இது தொடர்பாக உ. த மு. க. தொடக்க மாநாட்டுத் தீர்மானம் எண் 20-ஐப் பார்க்கவும். ஆ-ர்.) உ. த. மு. க. தன்னைக் கல்லூரி மாணவர்களிடையே நன்கு அறிமுகப் படுத்திக் கொண்டு, மாணவர்கட்குத் தமிழ் உணர்வையும், தமிழின உணர்வையும் செவ்வனே புகட்டப் பாடுபடல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'ஓகோ'வென நடைபெறவிருக்கும் தொடக்க மாநாட்டைக்காண—கண்டு இன்புற உள்ளத்தில் ஆவல்தான். ஆனால் இடையே உள்ள பெருந்தொலைவுதான் பற்பல சிக்கல்களை ஏற்படுத்தி இயலாமல் செய்

சூள் உரைப்போம்

உலகத் தமிழினத்தை ஒன்று கூட்டுவோம் - நல்ல
உண்மைத் தமிழுணர்வை நிலைநாட்டுவோம்!
குலவிடும் வல்லாண்மை இருள் ஓட்டுவோம் -உயர்
கொள்கை வகுத்து நல்ல பாதை காட்டுவோம்!
அழியாப் பழம்பெருமைத் திறல் சொல்லுவோம் –நமை
அழிக்க முனைவோரின் பகை வெல்லுவோம்!
பழியெனின் உலகையும் பெற மறுப்போம் -நம்
பண்பாட்டைக் காத்திடவே சூள் உரைப்போம் !

தென்மொழிப் பாசறையின் வழி நடப்போம் -உளம்
தெளிந்தநல் லறிவோடு வினை முடிப்போம்!
இன்னல் எதுவரினும் எதிர் கொள்ளுவோம் -என்றும்
இழிந்த மடமைநெறி புறந்தள்ளுவோம்!
மயக்கம் ஒழித்திடுவோம்; மாசு தவிர்ப்போம் –தன்
மானம் நிலைநிறுத்திப் புகழ் குவிப்போம்!
தயக்கம் களைந்திடுவோம் தமிழ் வளர்ப்போம் –உலகத்
தமிழினத்தை முன்னேற்ற அணி வகுப்போம் !

— கடலூர், மணிமாறன். க. மு., கீ. க. இ, கல். இ.

www.thamizham.net - Free E book No 7516

கிறது. என்றாலும் உள்ளமெல்லாம் உ. த. மு. க. பதிந்து விட்டது என்று கூறிக்கொள்ளப் பெருமைப் படுகின்றேன். தொடக்க மாநாட்டிலே தமிழீழத்தலைவர் நாவலர் திரு. **அமிர்தலிங்கம்** அவர்கள் கலந்து கொள்வது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஐயா. உ. த. மு. க. உலகத் தமிழர்களிடையே ஒரு பெரும் தமிழுணர்வை உண்டு பண்ணி, உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் பணியில் மிகவும் விரைவில் வெற்றி கண்டுவிடும் என்று நம்புகிறோம்.

ஐயா, மாநாட்டிலே கலந்து கொள்வது குறித்து, இங்குள்ள பெரு வணிகர் திரு. கு. பாலசுப்பிரமணியம் அவர்களிடம் 'அந்தமான்முரசு' ஆசிரியர் திரு. சுப. சுப்பிரமணியம் அவர்கள் பேசியுள்ளார்கள். அவரும் சென்னைக்கு வந்துவிட்டார். எனவே ஒருவேளை அவர் எங்கள் சார்பாக மாநாட்டிலே கலந்து கொள்வார் என எண்ணுகின்றோம். (கலந்து கொண்டார். கலந்து கொண்டு கருத்தும் அறிவித்தார் - ஆ.ர்.) மாநாடு சிறப்புடன் நடந்து நம் தமிழினத்துக்குப் பெருமை சேர்த்துத் தர வேண்டும், என்று உளமார வேண்டிக் கொள்கின்றேன்.

வாழ்க தங்களது தமிழ்த் தொண்டு!
வளர்க தங்களது தமிழ்ப்பணி! வெல்க உ. த. மு. க. !

பைந்தமிழ் காக்கும் பாவலரேறு

—பாசறை தனிக்கொடி.

ஏட்டிலே புதுப்பு ரட்சி,
எழுச்சியில் மறுமலர்ச்சி,
பாட்டிலே உணர்ச்சி, பேச்சில்
பனிநீரின் குளிர்ச்சி, கேட்போர்
கூட்டிலே தமிழ்வ ளர்ச்சி,
சொல்லில்நீர் வீழ்ச்சி, நாட்டின்
மீட்பிலே கிளர்ச்சி செய்யும்
வீறுபா வலராம் ஏறு!

சுட்டுவார் தமிழ்கெ டுக்கும்
துறையினை; உணரா விட்டால்
திட்டுவார்; மொழிக்குத் தீங்குச்
செய்வோர்கள் உறவா னாலும்
வெட்டுவார்; மட்டு வார்ப்பண்
மீட்டுவார்; புகழால் விண்ணை
எட்டுவார்; பகைமுன் பாய்ந்து
முட்டுவார் எங்கள் ஏறு!

மடுத்திடும் தமிழை வஞ்சர்
மறைத்திடல கண்டு; நெஞ்சம்
துடித்திடும்; மீட்பத் துஞ்சல்
துறந்திடும்; பகைக்கஞ் சாது

www.thamizham.net - Free E book No 7516

களக்காடு, நெல்லை மா. வ. புலவர். சு. நம்பி. மாவட்டத் துணை.
தலைவா தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

அன்புள்ள உ. த. மு. க. இயக்க அமைப்பாளர் அவர்களுக்கு, தங்களின் உ. த. மு. க. இயக்கம் பற்றிய விளம்பரத்தாளைப் பார்க்க நேர்ந்தது அதைப் படித்து மகிழ்ச்சி அடைந்தேன். வாழ்க தமிழினம்! வளர்க ஒற்றுமை! என வாழ்த்துக் கூறுகிறேன்.

யான் ஓர் இடைநிலை ஆசிரியன். புலவா தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளேன். மேலும் இலக்கிய இளவல் (B.Lit.) தேர்வு எழுதியும் வெற்றி பெற்றுள்ளேன். இன்னும் பதவி உயர்வு கிடைக்காமல் இடைநிலை ஆசிரியராகப் பணி செய்து வருகிறேன். என்னுடன் நான்கு ஆண்டுகள் (B.A; B.T) படித்தவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு இரண்டு கொடுத்து விட்டார்கள். ஆனால். தமிழாசிரியர் (புலவர்) படிப்பும், க. இ. (B A) படிப்பும் ஒன்றுதான் என அரசு விளம்பரப் படுத்தியும், க. இ. படித்தவர்களுக்குரிய ஊதிய உயர்வுதான் புலவர்களுக்கு என நெறிப் படுத்தியும், (க.இ) ஆங்கிலம் படித்தவர்களுக்குக் கொடுக்கும் ஊதிய உயர்வைப் புலவர் படித்த என் போன்றவர்களுக்குக் கொடுக்கவில்லை. தமிழ், தமிழ் என அரசு பறை சாற்றுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் ஆங்கிலக் காதல் இன்னும் தீரவில்லை. தமிழ் படித்த காரணத்தால் தமிழாசிரியர்களுக்கு இந்நிலையா?

(முன்பக்கத் தொடர்ச்சி)

வெடித்திடும்; எதற்கும் கெஞ்சல்
வெறுத்திடும்; புகழைப் பஞ்சாய்
விடுத்திடும்; உளத்தில் பிஞ்சை
வென்றிடும் எங்கள் ஏறு!

நத்திடும் நரியைப் பாட்டால்
நசுக்கிடும்; தமிழைச்சொல்லி
எத்திடும் எலியைப் பேச்சால்
இடித்திடும்; தமிழர்க் காகக்
கத்திடும்! கடல்கடந்தே
கவின் தமிழ் உணர்வை நெஞ்சில்
வித்திடும்! அறிவால் ஆழி
வென்றிடும் எங்கள் ஏறு!

கெடடா நற் றமிழை என்றே
கீழறுப் பார்தலையை
எடடா என் றேவும் ஏறு!
எதிர்த்திடும் களத்தில் பாய்ந்து
விடடா ஓர் கைபார்ப் போம்என்(று)
எழுந்திடும் வீறு! மாந்தர்
'அடடா! உன் தொண்டும் என்னே!
எனப்போற்றும் ஆற்றல் ஏறு!

o

www.thamizham.net - Free E book No 7516

இதையெல்லாம் தாங்கள் அறிந்து, உ. த.மு.க. வின் முதற் குறிய கோளாக இதைக் கொண்டு அரசுடன் போராடி ஆவன செய்க் வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். உ. த. மு. க. தமிழ் இனத்திற் காகத் தமிழ் படித்த புலவர்களுக்காகத் தழைத்து வளரட்டும்! வளர்க, உ. த. மு. கழகம்! ஓங்குக அதன் புகழ்!

கோவை. சிங்காநல்லூர் வெ. தமிழ்மாணிக்கம்

செம்மை செழிஇய தென்மொழி ஐயா அவர்கட்கு வணக்கம். தொடங்கப் பெறவிருக்கும் உ த. மு க பற்றியும் தாளிகை பற்றியும் என் சில கருத்துரைகளை இம்மடலில் குறிக்கிறேன். ஏற்பதை ஏலுங்கள்; மற்றவற்றை விட்டு விடுங்கள்.

உ. த. மு க. காலத்தின் தேவை. தமிழினத்தைப் பல்வேறு அரசியல் கட்சிகள் பிளவு படுத்திப் பொருள் பெருக்கி, அகவிலை ஏற்றத்திற்கும் கரணியமாய் அமைந்திலங்குகின்றன. கட்சிகள், மடத்தலைவர்கள் பணத்தலைவர்கள் தரும் பொருளால் ஆதரவால், பெரியார், அண்ணா, காமராசர் போன்ற தலைவர்களின் திருப்பேர் சொல்லியோ, தமிழ், தமிழர் என்று கூறியோ உலகியல் அறிந்த — அறியாத தமிழர்களை ஏய்த்துப் பொருள் சேர்த்து வாழ்கின்றன. அப்படிப் பட்டவர்கள் நடுவே நமது கழகமும் இயங்கப் போகிறது என்றால், எப்படிப்பட்ட, கொடுமையான- இழிவான- இடையூறுன செயல்களை எதிர்த்து, உண்மை ஒன்றையே இயக்கத்தின் உயிர்ப்பாய்க் கொண்டு மெய்த்தமிழ் ஆன்றோர்களின் அறிவுரைப்படி, உழைப்பு ஒன்றையே கருவியாய்க் கொண்டு, உ. த. மு. க. தமிழினத்தின் நலம் காக்க வேண்டும். எவ்வகையில் எதிர்ப்புகள் வந்தாலும், தென்மொழி அன்பர் எவரும் அஞ்சார்- கண்துஞ்சார்- எதிர்த்தே வெல்வார்.

அரசியல் சேற்றில் இறங்கித்தான் தமிழினை மீட்க வேண்டியிருப்பது போல், திரைப்படச் செய்திகளையும் நம் கொள்கைக் கேற்ப வெளியிடல் வேண்டும். அறிவியல், தொழிலியல், மருத்துவம், பொருளியல், வரலாறு, பொறியியல்கண்டுபிடிப்பு இன்ன பிற துறைச் செய்திகளும் வரல் வேண்டும். அடிகளார், பாவாணர், பெரியார் ஆகியோர் நூல்களில் சிற்சில பகுதிகளைத் தொடர்ந்து வெளியிடல் வேண்டும். பாடல்கள் கதைகள் வெளியிடலும் வேண்டும். உருவக் கட்டை செய்யும் பிரிவு ஒன்றையும் தொடங்குவது தாளிகைக்கு நல்லது. இல்லெனில் கட்டைகட்குத் தொகை கொடுத்து மீளமுடியாது. இன்றைக்கு எல்லாத் தாளிகைகளுமே 50காசிற்கும்குறைவாக விற்கப் படுவதில்லை, நாளேடாக வெளியிட்டால் மற்ற இதழ்களைவிட 5 , 10 காசு குறைத்து விற்றல் வேண்டும்.

தக்க செய்திக்குத் தக்க உருவங்களை அச்சிடுவது தாளிகைக்கு அழகு சேர்க்கும். தென்மொழியையோ தமிழ்ச்சிட்டையோ நாளேடாக மாற்றுதீர்கள். அவை என்றும்போல் தம் பணி செய்யட்டும். அயல்

www.thamizham.net - Free E book No 7516

நிலத் தமிழரும், வேற்றுவரும் படிப்பாராதலால், தமிழ் ஒன்றும் ஆங்கிலம் ஒன்றுமாய் இருந்தால் நல்லது. இப்போதுள்ள முன்னணி இதழ்களில் நல்ல விளம்பரங்கள் செய்யப் பெறல் வேண்டும்.

அடுத்து, பூசல்கட்கு மூல காரணமான மதச் சேற்றிலிருந்து இரண்டுங் கெட்ட தமிழரை மீட்கத் "தமிழர் மதம்" தொடங்கல் வேண்டும். கிறித்தவர்போல் ஞாயிறுதோறும், நாம் நமக்குகந்த வாறு, ஆற்றுப் படுகைகள், குள, ஏரிப் பகுதிகள், வேறு திடல்கள் இவற்றில் ஞாயிறு காலையோ பிற குறிப்பிட்ட நாளின் குறிப்பிட்ட நேரத்திலோ திருக்குறள் (தேவை என அறிஞர்கள் ஒப்பியவற்றை மட்டும்) அதிகாரங்களை இசையுடன் அனைவரும் பாடலாம் அல்லது ஓதலாம். இதனால் மனவியல்படி மனத்தெளிவு ஏற்படும். அறிவுக்கும் மெய்யறிவுக்கும் பொருந்துமாறு இறைமையை ஏற்றுப் பாடல்களை ஓதலாம். இதுவே நம் தமிழர்க்கு நம்பிக்கை தரும் செயல்களாக இருக்க வேண்டும். குப்பை கூளங்களான சிற்றிறை வழிபாடு, பேறிறை வழிபாடு சிறுகச் சிறுக மறையும்; தமிழர் மதம் தமிழர் நெஞ்சில் நிறையும்.

.... தாங்கள் எழுத வேண்டிய நூல்களை எழுதி நிறைவுசெய்த பின்னரே, இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று வினையாற்ற லாம் என்பது என் கருத்து. (தங்களை யன்றித் தலைமைப் பொறுப்பு எவர்க்கும் அமைதல் நன்றன்று.) ஏனென்றால் தற்பொழுதே தங்கட்குப் பணிகள்மிகுதி. இயக்கவழி இயங்கத் தொடங்கி விட்டால் சிறிதும் நேரம் கிட்டாது. பாவாணரைத்தான் இழந்து விட்டோம். தமிழகத்திற்குத் தாங்களேனும் நன்றாகப் பயன்பட வேண்டுமென்று ஆசை—பேராசை! எண்ணித் துணிவீர்கள் கருமியத்தில் என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் சிலவற்றைச் சொல்லத்தான் பல்லாண்டுக்குப் பின்னர் இந் நெடுமடலை எழுதினேன். முயற்சி திருவினை ஆக்கும்!

சிவ. ஆதிநாதன்
சிறப்பாசிரியர் '**முக்குடை**'

ஆச்சார்யா குந்தகுந்தர் கல்வி நிலைய
நூலகம்,குந்தகுந்த நகர்
வடவணக்கம் பாடி, வந்தவாசி,

பேரன்புடையீர் வணக்கம்.

கடந்த சில திங்களாக நான் சென்னை நகரத்தில் இல்லை. ஆரவாரம் மிக்க சூழலிலிருந்து ஒதுங்கி அமைதி சூழ்ந்த மலையடி வாரத்தில் வாழ்கிறேன். குருகுலம் அமைத்திடும் பணியில் ஈடு பட்டுள்ளேன்.... இப்பொழுது வெளிஉலகத்தோடு தொடர்பு மிகக் குறைவாகவே உள்ளது. நாளிதழ்களைப் படிப்பதும் இல்லை. இந்த நிலையில் நீங்கள் தொடங்க இருக்கும் கழகம் குறித்து அறிய எனக்கு வாய்ப்பு முன்னதாக நேரவில்லை '**தென்மொழி**' இதழ் வழி (17-12, 18-1, 18-2, 18-3) இப்பொழுதுதான் பார்வைக்கு வந்துள்ளன, இக் கடிதம் அதன் விளைவாகும்.

www.thamizham.net - Free E book No 7516

உலகியலில் வாழும் ஒருவனுக்கு மொழிப்பற்றும், இனப்பற்றும் இருந்தே தீரும். ஆனால் பெரும்பாலான நேரங்களில் இப்பற்றுகளை அவன் வெளிக்காட்டுவதே இல்லை. பிற பற்றுகள் இவற்றைப் பின்னுக்குத் தள்ளி விடுகின்றன; அல்லது அழுத்தி விடுகின்றன. உண்ணுதற்கும் உறங்குதற்கும் உறவு கொள்ளுதற்கும் பெரும் பொழுதினை வீணடிக்கிறான். அறியாமையும் ஏழ்மையும் அவனுடைய உடைமைகளாகின்றன. குழுகாயத்தில் அமைதியில்லை; மக்களிடம் நம்பிக்கை உணர்வு குறைவாகவும் ஏமாற்றுணர்வு கூடியும் காணப்பெறுகின்றன. இவை எங்கே அழைத்துச் செல்லும்?

இந்தக் குழப்பம்மிகுந்த, கவலைதரக்கூடிய நிலையில் 'கழகம்' அமைத்திட முயற்சி மேற்கொண்டுள்ளீர்கள். உங்கள் முயற்சி வெற்றியடைய வேண்டும் என்று விரும்புகிறேன். **'தென்மொழி'** இதழ்களிலிருந்து கழகம் அமைப்பதன் நோக்கம் குறித்தும் கழகத்தின் அமைப்புக் குறித்தும் அறிந்து கொண்டேன். இவையெல்லாம் **எழுத்து நிலையிலும் மேடைப்பேச்சு நிலையிலும் நின்று விடாமல் பொதுமக்களைத் தழுவல் வேண்டும்.** படிக்காத மக்களும் கூட்டங்களுக்கு வராத மக்களும் பெரும்பான்மையாக உள்ளனர். அவர்களோடு எப்படித் தொடர்பு கொள்ளப் போகிறீர்கள்? அவர்களுக்குத் துணைசெய்யக் கூடியவர்கள் உள்ளனர் என்பதை எப்படி உணர்த்தப் போகிறீர்கள்? அவர்களின் இன்ப துன்பங்களில் உடன் இருந்து பங்கு கொண்டு, அவர்களது நம்பிக்கையை எப்படிப் பெறப் போகிறீர்கள்? எனக்குத் தெரிந்த சில வழிகள் :

1. மொழித்தூய்மை வேண்டுமானால், தூய்மையான மொழி ஒவ்வோர் ஊரிலும் கற்பிக்கப்பெற வழி காண வேண்டும்.

2. கற்பிக்க சிறந்த தொண்டர்களை உருவாக்கல் வேண்டும். **ஊதியமேதும் எதிர்பார்க்காத தொண்டர்கள் உருவாக வேண்டும்.**

3. தமிழர் இன வரலாறு கூறப்பெறல் வேண்டும். ஒவ்வொரு சிற்றூரிலும் இப்பணி நடைபெறல் வேண்டும்.

4. அறவாழ்க்கை எஃது என்று விளக்கப் பெறல் வேண்டும். **வாழ்ந்துகாட்டி விளக்குதல் வேண்டும்.** இதற்கு எளிமையும் தொண்டுள்ளமும் உள்ள தொண்டர்கள் வேண்டும்.

5. இன்று அரசென்பது கூட்டுக்கொள்ளை நிறுவனமாக உள்ளது. சுரண்டிப் பிழைப்போர் ஆளும் இனமாகவும், அலுவலர் இனமாகவும் வணிக இனமாகவும், இன்னபிற இனங்களாகவும் பிரிந்து கொள்ளை நடத்துகின்றனர். இந்தக் கொள்ளைக் கூட்டத்தாரிடமிருந்து ஏழை மக்களை எப்படிக் காப்பது? கட்சி சார்பற்ற **அரசியல் விளக்கங்கள் தருதற்கு வழி கண்டாகல்** வேண்டும். இந்த நாட்டு மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்றாகல் வேண்டும் என்ற முனைப்போடும் தொண்டு உள்ளத்தோடும், செயல்படக்கூடிய **திறன்மிக்க நேர்மையாளர்கள் உருவாகல்** வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7516

உ. த. மு. க. தொடக்க மாநாட்டில், தலைவர் பன்மொழிப் புலவர்
பேரா. கா. அப்பாத்துரையார் தலைமையுரை நிகழ்த்துகிறார்.
மேடையில் பாவலரேறு, பதின்கவனகர் திருக்குறள்
பெ. இராமையா, அமிர்தலிங்கம், சுத்தானந்த பாரதியார்,
ஆட்சி மொழிக் காவலர், கீ. இராமலிங்கனார், இரா. கசுத்தூரி
முதலியோர்.



அவையில் பெண்கள் பகுதி!

www.thamizham.net - Free E book No 7516



இரண்டு நாள், நான்கு மாநாடுகளிலும்
அரங்கம் நிரம்பி வழிந்தது!

உ. த. மு. க. தொடக்கத்தில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட தமிழ் நெஞ்சங்கள், அறிஞர்கள், தலைவர்களின் அரிய கருத்துரைகளைச் செவி மடுக்கும் அடர்த்த காட்சி!

www.thamizham.net - Free E book No 7516

ஒரு நாள் இரவில் இவை உருவாகிவிடும் என்றோ, உ.த.மு.க உருவாக்கி விடும் என்றோ நான் நினைக்கவில்லை. ஆனால் உ. த. மு. க. நல்ல விதையை விதைக்கும் என நம்புகிறேன். விளம்பரம் வேண்டாத நல்ல உள்ளங்கள் நெருங்கி வர உ. த. மு. க. களமாக அமையட்டும்! அவர்கள் பணியாற்றும் தொண்டு நிலையமாக உ. த. மு. க. உயர்ந்து ஓங்கட்டும்! - முடிவில் ஒரு வேண்டுகோள். உங்களுக்கு வாய்ப்பு நேரும்போது ஒரு முறை எங்கள் நிறுவனத்திற்கு வருகை தாருங்கள்!

பாவலர் கொ. செ. சுன்னப்பனார், கொம்மக் கோவில்.

பைந்தமிழினத்தின் பல்துறைக் காவலரே! வணக்கம். நுந்தம் ஓயா முயற்சியால் உலகத் தமிழினத்திற்கென ஒரு வலிய பேரியக்கத்தை அமைத்தும், அதன் தொடக்க மாநாட்டைச் சிறப்புற நடத்தியும் விட்டீர்! அது பற்றிப் பெரு மகிழ்ச்சி! ஆனால், 'எந்த மதமும் மூட நம்பிக்கையின் அடிப்படையிலே கட்டப் பட்டதுதான். அங்கு உரிமை உணர்வுக்கு வழி இல்லை. அறிவு வளர்ச்சிக்கு விடிவில்லை. எனவே எந்த மதமும் நமக்குத் தேவையில்லை என்பதுவே நமது கொள்கை! என்றும், 'இறைவன் என்பவன் இப் புடவியில் எங்கோ ஓரிடத்தில் இருந்து கொண்டு, மாந்தவுயிர்கள் உட்பட எல்லா உயிரினங்கள் உயிரல்லினங்கள் அனைத்தையும் ஆட்டுவிக்கின்றான்' என்பது அறிவியலுக்கோ மெய்யறிவியலுக்கோ கூடப் பொருந்துவதன்று' என்றும், தென்மொழிச் சுவடி 17, ஓலை 10-இல் ஆசிரியவுரையில் கூறியுள்ள தாங்கள், மாநாட்டை இறை வணக்கம் செய்து தொடங்கியுள்ளீர். இஃது எந்த அறிவியலுக்குப் பொருந்துவது? ஏனிந்த முரண்பாடு? ஏனிந்தக் குழப்பம்

தெ. சாலமோன்ராசு, தமிழாசிரியர். விருதுநகர்.

... தமிழக விடுதலை விருப்பமும் ஆர்வமும் தென்மொழியில் தவிர வேறு எங்குமே இல்லை. முன்னொரு முறை தமிழ் வாணன் கூறியது போல, பெரியார் பெற்ற 'திராவிட நாட்டு விடுதலை' என்கிற குழந்தையை அண்ணாத்துரை கொன்று விட்டார்; கருணாநிதி புதைத்து விட்டார்; இராமச்சந்திரன் புதைமேடை (சமாதி), கட்டி விட்டார் என்று கூறலாம். ஆனால் **முழு மூச்சாகத் தந்தை பெரியாரின் குழந்தையைப் பேணிக் காக்கும் தங்களைத் தமிழரும். தமிழ் மண்ணும், மொழியும் நன்றியோடு நினைத்துப் போற்றுவர் என நம்புகிறேன்.** தேர்தலில் நிற்றல் எந்த நிலையிலும் நமக்கு வேண்டாம். பெரியார் வழியே நம் வழி; வாழ்க தந்தை பெரியார்! வெல்க அவர் வழி! தொடர்க, தங்களின் மேலான தொண்டு! ●

www.thamizham.net - Free E book No 7516

உ. தி. மு. க. தொடக்க மாநாடு வரவு செலவுக் கணக்கு.

வரவு.	உருபா.
1. பற்றுமுறிகளின் வழி நன்கொடை தண்டிய வகையில். (14-12-81 வரையில்)	37, 599 - 45
2. சென்னைத் தெருக்களில் இறங்கியும், மாநாட்டிலும் உண்டியல்கள் குலுக்கியும் தண்டிய வரவு.	1, 506 - 86
3. நேரிடையாக விடுக்கப் பெற்ற அன்பளிப்புகள்.	8, 745 - 85
4. மாநாட்டில் உணவுப் பொட்டலங்கள் விற்ற வகையில் வரவு.	871 - 15
5. மாநாட்டில் மார்பு வில்லைகள் விற்றவகையில் வரவு.	106 - 25
மொத்த வரவு.	48. 829 - 56

செலவு.	உருபா.
1. அச்சு வகைச் செலவு.	7, 886 - 42
2. அஞ்சல் வகைச் செலவுகள்.	1, 268 - 90
3. போக்கு வரத்துச் செலவுகள்.	694 - 55
4. மாநாட்டில் உணவு விற்பனைக்கு ஏற்பாடு செய்த வகையில்.	1, 456 - 00
5. தொண்டர்களுக்கு ஆன உணவு வகைச் செலவு.	694 00
6. வாடகை வரிகள்.	1, 143 00
7. அலுவலகச் செலவுகள்.	798 - 02
8. ஓவியங்கள், சுவரொட்டிகள். விளம்பரங்கள், தாள் கொடிகள், புகைப் படங்கள் செலவு.	3, 733 - 82
9. பேச்சாளர்கள் வகையில் ஆன செலவு.	1, 660 - 35
10. ஒலிபெருக்கிச் செலவு.	300 00
11. இசைக் குழு வகையில்.	1, 285 - 00
12. மார்பொட்டிகளுக்கும் துணிக் கொடிகளுக்கும்	312 - 50
13. மார்பு வில்லைகள் செய்த வகையில்.	787 - 50
14. பல்வகைச் சில்லறைச் செலவுகள்.	91 - 85
மொத்த செலவுகள் :	22, 111 - 91
15. வைப்பகத்தில் இருப்பு.	26, 717 - 65
	48, 829 - 56

பெருஞ்சித்திரனார்,
அமைப்பாளர்.

இறைக்குருவனார்,
செயலாளர்.

சு. இளங்கோ,
பொருளாளர்

www.thamizham.net - Free E book No 7516

மாநாட்டுக்கு வர இயலாத நெஞ்சங்களின் வாழ்த்துரைகள்!

நம் ஒற்றுமையின்மையால் வந்தேறிகள் ஆள்கிருர்கள்.

பெருந்தகை ஐயா, நான் தங்கள் தமிழ்த் தொண்டுக்கு என்றும் தலைவணங்குகிறவன் ... தமிழினம் காலம் காலமாகத் தனக்குள்ளாகவே போரிட்டுப் பிரிந்து அழிந்து வருவதே வரலாற்று உண்மை இந்தியா முழுவதும ஆள வேண்டிய நம்மொழி, நம்இனம் இன்று இந்திக்காரருக்குக் காவடி எடுத்துக் 'காக்காய்' பிடித்து அலைகிறது, நான் பெரியவன் என்ற தலைக்கனத்தால், இனம் மறந்த மொழி மறந்த செயலால்! முத்தமிழ்க் காவலரும் இயக்கம் முயன்ருர்; ஏளனம் செய்யப்பட்டார். தங்கள் தலைமையிலுள்ள இயக்கம் இதையெல்லாம் கடந்து தமிழினம் உலக அளவில் உயர்ந்து நிற்க, தன்மானத்தோடு சிறந்து வாழ உழைக்கட்டும். தமிழன் இரந்து வாழ்கிருன்; எச்சிலையோடு போராடுகிருன். நம் ஒற்றுமையின்மையால் வந்தேறிகள் ஆள்கிருர்கள்; வாழ்கிருர்கள். தமிழினத்தின் ஒற்றுமை வளரட்டும். ஆளுமை வளரட்டும்! ஆண்ட பெருமையை எண்ணிப் பார்க்கட்டும். அன்பன்,

— **மா. அரசுமணி**, கெசல்நாய்க்கன்பட்டி, சேலம்

உலகத் தமிழரை ஒன்ருய் அழைப்போம்!

பைந்தமிழ்ப் பாவலரேறையா அவர்களுக்கு வணக்கம். உ.த.மு.க. தொடக்க மாநாடு பற்றிக் கடந்த தென்மொழி இதழ்களால் அறிந்தேன். நிகழ்ச்சி நிரல் மகிழ்ச்சியூட்டும் வகையில் அமைந்திருந்தது. மாநாட்டில் பங்கேற்க இன்னும் தலைவர் பலரையும் எப்படியேனும் சேர்த்திருக்க முயன்றிருந்தால் மகிழ்ச்சி பன்மடங்காகியிருக்கும். தேரை இழுக்க ஊரை அழைக்கவா வேண்டும்? தாங்களோ தமிழினங் காத்திட உலகையே அழைத்து விட்டீர்கள். நிலைக்கொப்ப, முறைப்படி, மதிப்புடன் அழைத்திருந்தும் மாநாட்டிற்கு வராமை யாருடைய குற்றம். இனங்காக்கக் கருதுவோர் மனமொத்தன்றே வந்திருக்க வேண்டும். யார் மீது சாடுவது? எவர் மேல் பழி போடுவது?

இக் கழகத்தைத் தொடங்கியதால் குமுகாயத் தொண்டில் பெரியாரையும், அரசியலில் அண்ணாவையும், கருமத் துடிப்பில் கலைஞரையும் விஞ்சியுள்ளீர்கள் என்று துணிந்துரைக்கலாம். தங்களால் தான் அனைத்து நாடுகளிலிருந்தும் இணைந்த இனித்த குரல்களை ஒட்டுமொத்தமாகக் கேட்க முடிகின்றது. இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி உலகத் தமிழன முன்னேற்றத்திற்கு நல்லதோர் வழி வகுப்பீர்களாக! என்னால் கழகத்திற்குக் கூடுதல் ஒன்றும் செய்ய முடியாதெனினும், களமபுகுந்தேனும் உடலுயிர் அளித்திட என்றும் அணியமாயுள்ளேன்.

அரும் பெரும் புலவர்களும், அறிஞர்களும் மாநாட்டிற்கு வந்து இருந்து, கருத்துமழை பெய்து, உ. த. மு. க. என்னும் பயிர் வளர,

www.thamizham.net - Free E book No 7516

வித்திட்டு, நீரிட்டு, உரமிட்டு, களையெடுக்க முழங்கியிருப்பார்கள். இக் கழகப் திக்கெட்டும் பரவி, வான முட்ட வளர்ந்து, தேன் சொட்ட மலர்ந்திடத் தாங்களே தலைமை யேற்க வேண்டும்! பேரறிஞர்கள் நடத்திய அப்பெரும் மாநாட்டை இச் சிறுவனால் கண்டு களித்திட இயலா விடினும், வரவிருக்கும் தென்மொழி இதழில் என் கண் விழியால் கண்டு களிப்பேனாக! என் அண்ணா (த. அன்பழகனார்) அவர்கள் தென்மொழியை என்று காட்டினாரகளோ அன்றே என்மொழி, என்வழி, என்விழி ஆகிய அனைத்தும் தென்மொழியாகி விட்டது.

உலகத் தமிழரை ஒன்றாய் அழைப்போம் — உயர்
உலக அரங்கினில் நனாய்த் தழைப்போம்!

— த. சின்னத்துரை. C/o. 56, A. P. O.

தமிழின மேன்மை காப்போம்!

வேரியக்கிப் புகழ்க்கிளையில் விழுதுவிட்ட
தமிழினத்தார் மேன்மை காக்கப்
பேருலகத் தமிழனத்தின் முன்னேற்றக்
கழகச்சேய் பிறக்கும் போதில்
நேரியக்கும் இனமான நெறிவழியே
மொழிகாத்து நெடிது வாழப்
பாரியக்கும் பாப்படைத்த பாவேந்தர்
மன்றத்தார் படைத்தோம் வாழ்த்து!

— கி. ஆழ்வார். வணி. இ; மெய், மு செயலர்,
பாவேந்தர் மன்றம், திருச்செந்தூர்.

உளமார வாழ்த்தி போற்றுகிறேன்!

பேரன்புடையீா, வணக்கம். தாங்கள் கனிவுடன் அனுப்பியிருந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டின் அழைப்பிதழ் கண்டு மிக மிகப் பூரிப்படைந்தேன். அன்புக்கு மிகுந்த நன்றி!

ஆண்ட தமிழினத்தின் மாண்பு மீண்டும் தழைத்தோங்க, தாங்களும் நண்பர்களும் ஏற்றிருக்கும் சீரிய நற்றொண்டு வெற்றி பெற்றிடவும், மாநாடு பயன் பல விளைத்துத் தமிழ் மண்ணில் விழிப்புணர்வுகளை ஊட்டவும் உளமார வாழ்த்திப் போற்றுகின்றேன். வாழிய தங்கள் பணி! வெல்க தமிழின வேட்கை!

— பாவலா. கா வேழவேந்தன், க. இ; ச. இ.
முன்னாள் அமைச்சர். சென்னை-4.

பல்வகையானும் சிறக்க!

பாவலரேறு திருமிகு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, வணக்கமாக எழுதிக் கொள்வது தாங்கள் தொடங்க விருக்கும் உ.த மு.க. மாநாட்டிற்கு வர ஆவல் இருந்தும், வரவியலாத சூழலுக்குப்

www.thamizham.net - Free E book No 7516

பொறுத்தருள்க! விழா பல்வகையானும் சிறக்க என் உள்ள நெகிழ்வான அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள — வை. மு. கும்பலிங்கன், கும்பகோணம்-1.

வரவேற்கிறேன் ! வாழ்த்துகிறேன் !

அன்புடையீர் ! வணக்கம் பல. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழாச் செய்தியினை அறிந்து உவகை கொண்டேன். உலகத் தமிழர் உணர்வுக்கு ஒரு நல்ல செய்தி ! நல்ல முயற்சி ! வரவேற்கிறேன் ! வாழ்த்துகிறேன்.

— சொ. ஐ. துரை, சிங்கப்பூர்-1233.

ஒத்துழைப்பு என்றும் உண்டு !

அய்யா, தங்களின் தலைமையில் தொடங்க விருக்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாட்டில், சில தவிர்க்க முடியாத வேலைகளின் காரணமாகக் கலந்து கொள்ள இயலாமையேற்பட்டது. மிகவும் வருந்துகின்றேன். தங்களது அரும் முயற்சிக்கு என்னுடைய ஒத்துழைப்பு என்றும் உண்டென்று கூறி, என் பணிவான வணக்கத்தை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களன்புள்ள, — மு. வேந்தன, புதுச்சேரி-1.

இலகு புகழுடன் என்றென்றும் வாழிய !

அன்பே நிறைந்த அகமும், ஆன்றமை
பண்பே வளஞ்சேர் பழகினிய பாங்கும்,
அறங்கிடந்த நெஞ்சும், அருளொழுகு கண்ணும்,
மறங்கிடந்த திண்டோளும். மாத்தமிழே நாவும்,
திகழுநவாம் பெருந்தகைமை பெருஞ்சித் திரனார்
புகழுநவாம் பணியைப் பொற்புடனுற்றும்,
வினையாண்மை மிக்கார் வேண்டுவன விளைப்பார்
துணையாண்மை வீறும் தொல்வரவாய்க் கொண்டார்
அமைவாகவே தொடங்கும் அன்னைத் தமிழினத்தார்
சமைவாகவே ஊன்றிச் சமைத்திடுக வரலாறு !
உலகத் தமிழின முன்னேற்றக் கழகமாம்
இலகு புகழுடன் என்றென்றும் வாழியவே '

— புலவர். பி. மு. சின்னுண்டார், சேலம்-3.

தமிழகத்துக்கும் தமிழினத்துக்கும் ஓர் அருட்பேறு !

பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய அய்யா அவர்களுக்கு !

வணக்கம்...மாநாடு பற்றிய செய்திகளை விரிவாக அறிந்தேன். என்னால் மாநாட்டுக்கு வர முடியாததற்கு மிகவும் வருந்துகிறேன். மாநாடு நடைபெறும் நாட்களில் என் மனம் அங்கேயே அந்தச் செய்திகளைச் சுற்றியே வட்டமிடும். உ.த.மு.க.இயக்கம் — தமிழிழகத்திற்கும் தமிழினத்திற்கும் ஓர் அருட்பேறு ! உ. த. மு. க. இயக்கம்

www.thamizham.net - Free E book No 7516

வளர —சிறப்பெய்த இந்த எளிய அன்பனின் உள்ளம் இலக்கக் கணக்கான முறை வாழ்த்துகிறது ! வாழ்க பாவலரேறு ஐயா ! வளர்க உ. த. மு. க. இயக்கம்! வெல்க தென்மொழியின் கொள்கைகள் !

— **ஒய். மணிகண்டன்**, பாண்டி (தஞ்சை மாவட்டம்)

நாடறிந்த இயக்கமாக இருக்க வேண்டும்.

அன்புள்ள பாவலரேறுக்கு ! வணக்கம் பல உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தொடங்கும் நாளை அறிந்து மகிழ்ந்தேன். எப்பொழுது தமிழர்க்கு விடிவு ஏற்படும் என்று ஏங்கிக் கொண்டு இருந்தேன். .. நம் இயக்கம் நாடறிந்த இயக்கமாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை.

முதுபெரும் எழுத்துலக வேந்தர்

புதினமணி. பேரா. நாரணதுரைக்கண்ணன்

அவர்களின் அன்பு வாழ்த்து

பேரன்பு கெழுமிய பெருந்தகையீர்,

வாழிய நலம். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டின் அழைப்பிதழ் கண்டு பெருமகிழ்ச்சியுற்றேன்.

பேரறிஞர்க் கெல்லாம் கூட வழிகாட்டும் மாமாந்தராக விளங்கி, நம் அனைவர் நினைவிலும் பசுமையாக நிலைத்து நிற்கும் தேவநேயப் பாவணரைப் பேராசானகக் கொண்டு, எல்லா வகையிலும் அவரைப் பின்பற்றித் தனித்தமிழ் நடையை வளப்படுத்தி, இனவுணர்வுடன் அரும்பெரும் பணியாற்றி வரும் நீங்கள், இன்று, உலகெங்கணுமுள்ள தமிழ் மக்களின் (மொழி, கலை பண்பாடு, அறிவியல், குமுகவியல், அரசியல், பொதுவுடைமை ஆகிய ஏழு துறைகளிலும்) முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதற்குத் திட்டம் வகுக்கும் பெருநோக்கோடு, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தித் தொடக்க மாநடு நடத்த முற்பட்டுள்ள உங்கள் நன்முயற்சியை முழு மனத்துடன் வரவேற்கிறேன்.

உயரிய குறிக்கோளுடன் உங்களால் நடத்தப்படும் இம் மாநாடு வெற்றிபெற வேண்டுமென்று என் நல்வாழ்த்தை உவப்போடு வழங்குகின்றேன்.

அன்புள்ள,

நாரண — துரைக்கண்ணன்.

குறிப்பு : சில நாட்களாக நான் உடல் நலமின்றி இருக்கின்றேன். ஆதலால் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டு, கேட்டு மகிழ இயலாத நிலை; பொறுத்தருளுக.

---

www.thamizham.net - Free E book No 7516

உலகத் தமிழினம் ஒன்று திரளட்டும்
உரிமைகள் யாவும் முழங்கட்டும்!
ஊமைக் கனவுகள் மழுங்கட்டும்!
உலகில் புதுமைகள் மலரட்டும்!

— க. ஆறுமுகம், (அறி. இ.) புத்தனும்பட்டி.

கட்டளையை எதிர் நோக்கியிருக்கிறோம்!

பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களுக்கு, தாங்கள் நடத்திய மாநாட்டில் கலந்து கொள்ளாததை எண்ணியெண்ணி மிக்க வருந்துகின்றேன். நம் இயக்கத்தினைச் சார்ந்து சேலத்தில் அல்லது தமிழ் நாட்டில் அல்லது இந்தப் பாரில் எங்கேயாயினும் எச்செயலைக் செய்ய வேண்டுமானாலும் நாங்கள் செய்ய அணியமாக உள்ளோம்! உங்கள் அறிக்கை, கட்டளை ஆகியவற்றினை எதிர்நோக்கியிருக்கிறோம்.

— மா. செவ்வேள், சேலம்-636014.

அன்பு ஆசிரியர் அவர்களுக்கு!... தென்மொழியில் மதம் என்பது இடம் பெறுமல் இருப்பது நல்லதுதான். அஃது ஏன் மதத்திற்கு

உ. த. மு. க. அமைப்புகள்.

உ. த. மு க. தொடக்க மாநாடு முடிந்து, மலர்ப் பணிகளிலும், கழக அலுவலக அமைப்பதிலும், பிற கழக மாநில, மாவட்ட, வட்ட அமைப்புகளிலும் முயற்சியும் ஆய்வுகளும், செய்யப் பெற்றுப் பதவி அமர்த்தங்களிலும், பிறவினைப்பாடுகளிலும் தீவிரக் கவனம் செலுத்தப் பெற்று வருகிறது. அவையின்றிக் கழகக் கொள்கைகள். நெறிமுறைக் குழுவைக் கூட்டித் தீவிர ஆய்வும் செய்து, கழகச் சட்ட நெறி நூலையம் உருவாக்குதல் தொடர்பான பணிகளும் நடந்து வருகின்றன. அதன் பின்னரே உறுப்பினர்கள் சேர்க்கப் பெறுவதும் கிளைகள் அமைக்கப் பெறுவதும் நடைபெறும். அதுவரை அன்பர்-கள் சிறிது அமைந்திருக்க வேண்டுகின்றேன். பொதுவாகவே தமிழர்களில் கருத்துகளை வெறும் வாயளவில் கூறுவதற்கு முன் வருபவர்களே மிகுதியும் உள்ளனர். வினைகள் செய்ய முன் வருபவர் மிக மிகக் குறைவானவர்களே! அத்தகையோர் ஆயிரத்திற்கும் ஒருவர் அகப்படுவாரா என்பது ஐயமே! எனவே வினைகள் சிறிது மெதுவாகவே நடைபெற்றாலும் ஆழமாகவும் கட்டுக் கோப்புடனும் நடந்து வருகின்றன என்பதையும், விரைவில் கழகம் முழுவடிவமும் வலுவும் பெறும் என்பதையும் அன்பர்கள் உணர்வார்களாக.

பெருஞ்சித்திரனார்.
கழக முதல்வர்.

---

www.thamizham.net - Free E book No 7516

ஓர் இடம் கொடுக்கவில்லை என்பதன் உள்ளடக்கம் நமக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் இக்கழகமோ அல்லது தென்மொழியோ பின்பற்றவில்லை என்றாலும் அல்லது நீங்கள் அதைப் பொறுப்பேற்று நடத்தவில்லை என்றாலும், மதம் அல்லது மதம் மாறுபவர்களிடம், 'தமிழர் மதம் ஒன்று உள்ளது; அதில் சேருபவர்கள் சேரட்டும். அல்லது சேருங்கள் அல்லது உங்களுக்கு எம்மதம் உகந்ததாகத் தோன்றுகிறதோ அதில் சேருங்கள் அல்லது சேராமல் இருங்கள்; அஃது உங்களைப் பொறுத்தது' இது போலும் சொற்றொடர்கள் தென்மொழி வழியாகவோ அல்லது மாநாட்டின் வழியாகவோ அமையுமாயின் மிக்கச் சிறப்புடையதாக இருக்கும்.

ஏனெனில் இங்கு நம்மூரிலும் அண்டை ஊர்களிலும் 'ஆர் எசு. எசு.' என்னும் இயக்கம், கோயில்களில் சமசுகிருதத்தில் வழிபாடும், போற்றிப் பாடல்களைப் பாடும் படியாகவும் கற்பிக்கிறது. மேலும் 'கராத்தேயை' இந்தியின் வழியாகவும், அதைக் கட்டளை மொழியாக வைத்தும் கற்பிக்கின்றனர். தமிழர் மதத்தைச் சிறிது சொல்லியிருப்பீர்களாயின், அங்கு நீங்கள் எண்ணுவதற்கு மேலாகத் தூய தமிழ் வளர்ச்சியும், தமிழகத் தேசிய உணர்வும், தமிழின உயர்வும் திண்ணமாகத் தோன்ற வாய்ப்புண்டு. அதே சமையம் தமிழினம் என்னும் ஓர் உணர்வு தோன்றி, அனைத்துச் சாதிகளும் இருந்த இடம் தெரியாமல் ஒழிய அதிக வாய்ப்புகள் உண்டு என்பது எனது நம்பிக்கை.

.... தென்மொழி எப்போதும் போல் வரட்டும் ... மாநாட்டிற்கு வரமுடியாதது குறித்து உள்ள முழுமையாக வருந்துகிறேன். காமராசர் பல்கலைக் கழகத் தேர்வு உள்ளது. தற்போது கையில் பணம் அறவே இல்லை ஆனால் தேர்வு நாட்கள் முந்தியோ பிந்தியோ இருக்குமாயின் எங்காவது கடன் வாங்கி மாநாட்டிற்கு வந்திருப்பேன் என்பது திண்ணம். மன்னிக்கவும். நம்மினத்தின் பன்னூற்றாண்டுத் தூக்கத்திலிருந்து விழித்தெழ நிலையான முதன் மருந்து உ. த. மு. க. உறுதி பெறட்டும். ஆளப்படுபவன் யார் என்பதை முதலில் சிங்களவனுக்கும் இரண்டாவது இந்திக்காரனுக்கும், பின்பு உலகத்திற்கும் இக்கழகம் மெய்ப்பிக்கட்டும்! இக்கழகம் தமிழகத்தை மட்டுமன்று. இந்திக்காரர்களை மட்டுமன்று. இவ்வுலகையே ஒரு முறை ஆளும் வலிமை பெறட்டும்! ஆனால் பையச் பையச் செயல் படட்டும். 'பையப் பையத் தின்றால் பனையையும் தின்னலாம்' என்பது நம் பழமொழி! கழகம் வெற்றி பெறவும், தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கவும், தமிழகம் பிறரிடமிருந்து உய்யவும் தூயதமிழ் உலகெங்கும் உலாவவும் என்னால் முடித்தவற்றைக் கண்டிப்பாகச் செய்வேன். உ. த. மு. க தொடக்க மாநாடு வெற்றி பெற்று வானளாவ உயர எனது உளமார்ந்த வாழ்த்துகள்!

— **செ. முருகன்**, வைராகுடி, கன்னியாகுமரி.

www.thamizham.net - Free E book No 7516

தமிழினக் காப்பு மாநாட்டில் தலைவர்கள்.
இடமிருந்து வலம் : உவமைப் பாவலர் சுரதா, பேரா. பாலசுப்பிர மணியம், பேரா. மெ. சுந்தரம், பாவலரேறு, அமிர்தலிங்கம், கி. வீரமணி, பாவலர் முகவை இராசமாணிக்கம், பேரா. ந. இராமநாதன், முதலியோர்.

உ. த. மு. க. தொடக்க மாநாட்டின் முடிவில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் சிறப்புரை !

பாவலரேறு அவர்களின் விறுரை !

www.thamizham.net - Free E book No 7516

தமிழினக் காப்பு மாநாட்டில் கொள்கையில் வேறுபட்டிருக்கும்
இருதுருவங்கள் - கருப்பும் காவியும் இணைந்துள்ள காட்சி.
(தமிழினத் தளபதி கி. வீரமணி, சுத்தானந்த பாரதியார்.)

தமிழினக் காப்பில் ஒன்றுபட்ட இரண்டு உணர்வுள்ளங்கள்!
தமிழினத் தளபதி கி. வீரமணியும், தமிழினக் காவலர் பாவலரேறும்
தமிழின மீட்சிக்குத் திட்டங்கள் வகுக்கும் அரிய காட்சி!

www.thamizham.net - Free E book No 7516

நலிந்துபோன தமிழ்க் குமுகாயத்திற்கு ஒரு வேலி!

இன்றைய தமிழ்க் குமுகாயத்தைத் தட்டி எழுப்பவும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாகவும் விளங்கக் கூடிய வகையில் இன்று தாங்கள் தொடங்கியுள்ள 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தினை' எங்கள் மன்றம் மகிழ்வுடன் வாழ்த்துகிறது. நலிந்து போன நம் தமிழ்க் குமுகாயத்திற்குத் தாங்கள் தொடங்கியுள்ள கழகம் ஒரு வேலியாக நின்று காப்பாற்றும் என நாங்கள் பெரிதும் நம்புகிறோம். தாங்கள் தொடங்கியுள்ள கழகம் சீரோடும் வனப்போடும் வளத்தோடும் திகழ எங்கள் மன்றம் வாழ்த்துகிறது. தங்களின் சீரிய முயற்சிக்கும் வெற்றிக்கும் வாழ்த்து வழங்குவதோடு உங்களின் தொண்டுக்கு எங்கள் மன்றம் எப்போதும் ஒத்துழைப்பு நல்கக் காத்துள்ளது என்றும் இவ் வெற்றித் திருநாளில் தங்களுக்குத் தெரிவிக்கின்றோம். — **இரே. நா. மணிவேந்தன்.**

செயலர், பாரதிதாசனார், தமிழ்ப்பணி மன்றம், புதுச்சேரி-1.

இன்றைய செய்தித்தாள் உலகம் பணம் படைத்தவர்களின் கையில்!

மதிப்புக்குரிய பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் கிடைக்கப் பெற்றேன். உங்களின் மற்றும் நண்பர்களின் இடைவிடாத முயற்சிக்கு எங்களின் பாராட்டுதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மாநாட்டு நிகழ்ச்சிகளையும், மாநாட்டில் கலந்து கொண்டு பேசியவர்களின் பேச்சுகளையும் '**விடுதலை**'யில் பார்த்துப் படித்தோம். அதில் மாநாட்டை நடத்துவதில் முகமைப் பங்காற்றிய பெருஞ்சித்திரனார் பேச்சுக்கு முதலிடம் அளிக்க வில்லை என்பதைக் கண்டு வியப்பு அடையவில்லை. அதன் காரணம் என்ன என்பது உங்கட்கும் தெரிந்தது — எங்கட்கும் தெரிந்ததாகும். இன்றைய செய்தித்தாள்

உ. த. மு. க. தொடக்க மாநாட்டு நன்கொடைப் பற்றுமுறிகள்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டிற்கென நன்கொடை திரட்டுவதற்காக விடுக்கப் பெற்ற பற்றுமுறிகளை அன்பர் சிலர் இன்னும் திருப்பியனுப்பாமலும், திரட்டிய பணத்தை விடுக்காமலும் வைத்திருக்கின்றனர். அத்தகையவர்கள், அவர்களிடம் உள்ள பற்றுமுறிச் சுவடிகளைத் தாங்கள் திரட்டிய தொகையுடன் உடனே காலந்தாழ்த்தாமல் அனுப்பிவைக்கக்கேட்டுக் கொள்கிறோம் மேலும் மேலும் இங்கிருந்து விடுக்கப்பெறும் நினைவூட்டறிக்கைகளுக்குத் தேவை யேற்படா வண்ணம் அவர்கள் நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.—**மாநாட்டுப் பொருளர்.**

www.thamizham.net - Free E book No 7516

உலகம் பணம் படைத்தவர்களின் கையில்தான் இருக்கின்றது. பொது மக்கள் பணத்தை ஒரு சிலர் விளம்பரத்திற்குப் பயன்படுத்துவதையும், இன்றைய தமிழகத்தில் இன்றைய இந்தியாவில் - காணலாம். நமது நாட்டில் நிலவும் குமுகாய அமைப்பில் இது தவிர்க்க முடியாத ஒன்றாகும் ... மாநாட்டு மலர் வெளிவந்தால் அனுப்பித்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். — **மு. கலிய பெருமாள்,**
இந்தியப் பொதுவுடைமைக் கட்சி. நடுவண்சிறை, சென்னை.

என் பணி துளியேனும் சேர விழைகிறேன் !

பாவலரேறு ஐயா, வணக்கம் நந்தமிழ் காக்க நம்மினம் மீட்க 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' தொடங்கியது அறிந்தேன். மனம் மகிழ்ந்தேன். வரலாறு படைக்கப் போகும் உ. த. மு. க.வின் பெரும பணியுடன் என் பணி ஒரு சிறு துளியேனும் சேர விழைகின்றேன். — **மா. இளங்கோ,** காணுடுகாத்தான்.

முடிக்கும் திறனோடு உழைப்போம் !
முடிவு வருகின்ற பொழுது வரட்டும்.

பேரன்புடையீர், வணக்கம். இயக்கம் தொடர்பான பணிகள் நடைபெறுவது கண்டு மகிழ்ச்சி. **இடையூறுகள் எத்துணை எதிர்**

சுமைசுமை யாய் வரும் தமிழர் கைம்மாறு !
தொடங்கப்பா போர் ! தமிழ் உய்யுமாறு !

— **பாவேந்தர் !**

உ. த. மு. க. வளர்ச்சிக்கு தென்மொழி நா. இளமாறனின் இனிய நன்கொடை !

எவ்விடத்துச் செல்லினும் எந்நிலையில் வாழினும் **தென்மொழி** இயக்கத் தொண்டே தம் வாணாள் தொண்டு என்று எண்ணி வாழும்,

இடையறாத் தமிழ் நெஞ்சின் ஏந்தல் **தென்மொழி நா. இளமாறன்** என்னும் இளந்தோன்றல், விடுதலை மறவர், அண்மையில் நடைபெற்ற உ. த. மு. க. மாநாட்டில் அக் கழக வளர்ச்சிக்கெனத் தம் ஒரு மாத ஊதியமாகிய **உருபா ஆயிரத்து ஐநூற்று ஒன்றை** (உருபா **1501/-)** நன்கொடையாகத் தந்து பெருமை பெற்றார். அவ்வினிய நன்னெஞ்சிற்கும், தென்மொழி புரக்கும் அவர் அன்புக் குடும்பத்திற்கும் உ. த. மு. க சார்பில் நம் நெஞ்சு நிறைந்த நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— **பெருஞ்சித்திரனார்.**

www.thamizham.net - Free E book No 7516

கொண்டாலும் இயக்கம் வலிவும் பொலிவும் பெற உழைப்பீர் என்பதில் எனக்கு ஐயம் இல்லை உழைப்பும் உப்பக்கம் காணும் உழைப்பு வேண்டும். தக்க துணைகள் உளவோ? பசுமை காடாயினு மேயும் விலங்குகள் **'துணை' கிடைத்தாலும் கிடைக்கலாம்.** விழிப்பாக இருந்து பணியாற்ற வேண்டும் குறியிலும் நெறியிலும் நேர்மை காட்டுவோரைக் கண்டு துணை கொள்வீர்! முடிக்கும் திறனோடு உழைப்போம். முடிவு வருகின்ற பொழுது வரட்டும்! ... உங்கள் தொண்டில் என்னையும் இணைத்துக் கொள்ளுங்கள். இப்பன்றதைச் செய்வேன். — புலவர். **சிவ. ஆதிநாதன்,** ஆசிரியர் 'முக்குடை' சென்னை-17.

தமிழ் கூறும் நல்லுலகம் பயன் பெறட்டும்!

அன்புடையீர், வணக்கம் ... மாநாட்டில் கலந்து கொண்டு பயனுற பெருவிருப்பம் கொண்டிருந்தும் வரவியலாச் சூழல் ஏற்பட்டு உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். 8-1-81 அன்று அகத்தியம் கோவையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டாமல் போனமைக்குப் பெரிதும் வருந்துகின்றேன். மாநாடு சிறப்புற நடந்தேறவும், தமிழ் கூறும நல்லுலகம் மாநாட்டு முடிவுகளால் பயன் பெறவும் எனது வாழ்த்துகள்.

— பேரா. சு. **சிவகாமசுந்தரி,** க. மு. கோவை-43.

அமைப்பிலும் செயற்பாட்டிலும் உழைத்திட விழைகிறேன்!

பெருந்தகையீர், வணக்கம். உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாட்டில் கலந்து கொள்ள விழைந்தேன். தங்கள்

தென்மொழி வளர்ச்சிக்கு ஓர் இனிய தமிழ் நெஞ்சின் நன்கொடை!

கோவை, இன்ப வாழ்வுப் பதிப்பக உரிமையாளரும், **'திருவள்ளுவன்', பிராமணியம்** முதலிய அரிய ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியரும், தீவிர மொழி, இன நாட்டுப் பற்றுடையவரும், தலைசிறந்த குமுகவியல், வரலாற்று ஆராய்ச்சி அறிஞரும், பொய்யறியாத் தமிழ் நெஞ்சின் புலம் நிறைந்த சான்றோரும், தென்மொழி அன்பரும் ஆகிய உயர்திரு. **தமிழ் மகன்** (சதாசிவம்) என்னும் தகைமையாளர், தம்மிடம் எஞ்சியிருந்த **395 பிராமணியம்** நூல்களையும் (மொத்தம் ஈராயிரத்து முந்நூற்று எழுபது உருபா மதிப்புள்ளது.) தென்மொழி வளர்ச்சிக்கென அனுப்பி வைத்துள்ளார். அவரின் தன்னலங் கருதாத் தாளாண்மைக்கும், மொழி, இன, நாட்டு நலம் பேணும் பீடுசான்ற பெருந்தகைமைக்கும் எங்கள் நெஞ்சு நிறைந்த நன்றியையும் வாழ்த்தையும் வணக்கத்தையும் உரித்தாக்குகின்றோம். — **பெருஞ்சித்திரனார்.**

---

www.thamizham.net - Free E book No 7516

அன்பார்ந்த அழைப்பும் வரப் பெற்றேன். நெஞ்சார்ந்த நன்றி. தவிர்க்க முடியாத சூழ் நிலையில் மாநாட்டுத் தொடக்க விழாவில் கலந்து கொள்ள இயலாதவன் ஆகின்றேன். எனினும் தொடர்ந்து உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் அமைப்பிலும் செயற் பாட்டிலும் உழைத்திட விழைகின்றேன். சீரியர்ந்த கழகத்தின் உறுப்பினராகித் தொண்டாற்றிட உறுதி கொள்கிறேன்.

— பேரா. பா. வளன் அரசு, க. மு. நெல்லை.

மிகுந்த வாட்டத்தோடு இந்தக் கடிதம்!

அன்பிற்குரியீர், மிகுந்த வாட்டத்தோடு இந்தக் கடிதம் ... இன்று மாலையில் உ. த. மு. க. தொடக்க மாநாட்டுக்குப் புறப்பட வேண்டியவர்கள் நாங்கள். எல்லா ஆயத்தங்களும் செய்து புறப் பட இருந்த நிலையில் செலவை (பயணத்தை) நிறுத்த வேண்டிய தாயிற்று. இங்கே வெப்பப் பருவம் மாறிக் குளிர்பருவம் தொடங்கும் போது, வழக்கமாகவே என் உடல் நலம் சற்றே குன்றுவது உண்டு. இப்போதும் திடீரென அப்படி ஏற்பட்டு விட்டது பெரிய நோய் எதுவுமில்லை. இரண்டு நாள் காய்ச்சல்தான் ஆயினும் ஏற்கனவே உடலில் பல நலிவுகள். தில்லிக்கும் சென்னைக்கும் இடைப்பட்ட நீண்ட வழியில் ஒரு பாதியைக் குளிரோடும் மறுபாதியை வெயி லோடும் கடக்க வேண்டும் நேற்று முதல் மழையும் தொடங்கி விட்டது. இந்தச் சூழலில் இச் செலவைத் தவிர்ப்பதே நல்லது என்று மருத்துவர் சொல்லி விட்டார். என்ன செய்வது? விழா எல்லா வகையிலும் சிறப்பாக நடக்கும் என்று நம்புகிறோம். நடக்க வேண்டும் என்று விரும்புகிறோம். நாங்கள் மிகுந்த ஏமாற்றத்தோடு இங்கே தடைப்பட்டு நிற்க நேர்ந்ததை நண்பர்களுக்குத் தெரிவி யுங்கள். — முனைவர். சாலை. இளந்திரையன், சாலினி இளந்திரையன்

புதுதில்லி-110 005.

எல்லாவற்றுக்கும் உ. த. மு. க. உதவும்!

எனது பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய உயர்திரு. பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, தமிழ் வணக்கம். நவம்பர் ஏழாம் நாளில் உங்கள் முயற்சியால் தொடங்கப்பட விருக்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், உலகெங்கும் வாழும் தமிழின மாந்தரை ஒன்று படுத்திப் பழந்தமிழ்ப் பெருமையையும் பண்பாட் டையும் நிலை நாட்டித் தமிழின உரிமைக்கொடியை உயர்த்துவதற்கு முதலாவது அடியாக அமையவும், தமிழீழ விடுதலைக்கு உலகப் பேராதரவையும் உதவியையும் திரட்டும் படைக்கலனாக விளங்கவும், தமிழ்க் குமுகாயத்தின் கைவாளாகவும் கேடயமாகவும் பயன்படவும் வேண்டும் என்கிற எனது மீளா வேட்கையைத் தெரிவித்துக் கொள் ளுகிறேன். சாதி மதங்களற்ற குமுகாயமாக இத்தமிழ்க் குமுகாயத்தை ஆக்கிட வேண்டும். தமிழ் மொழியின் ஒருமைப் பாட்டையும் தமிழினத்தின் ஒருமைப் பாட்டையும் மொழி, இன தனித்தன்மையை

www.thamizham.net - Free E book No 7516

யும் கட்டிக் காத்திட வேண்டும். இவை யெல்லாவற்றுக்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் உதவும் என்று எதிர் பார்க்கிறேன் .. கால ஓட்டத்தில் பாலத்தின விடுதலை இயக்கம் போன்று உலகத் தமிழின முன்னேற்றக் கழகமும் ஆகிட வேண்டும். அக்டோபருடன் கப்பல் செலவு நிறுத்தப் படுவதால், தங்கள் அழைப்பை யேற்றுத் தொடக்க விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அது மட்டுமன்றி இங்கே தமிழீழத்தில் நிற்க வேண்டிய சூழ்நிலை. இனந் தெரியாத இளைஞர்களால் யாழ்ப்பாணத்தில் இரண்டு சிங்களப் படைத்துறையினர் சுட்டுக் கொல்லப்பட்டதை யடுத்துத் தமிழ் மக்கள் தாக்குதலுக் குள்ளாகின்றனர் பெண்டிர், குழந்தைகள், முதியோர் உட்பட அனைவரும் விலங்குத்தனமாகத் தாக்கப் படுகின்றனர். பல இளம் தமிழச்சிகள் காணமற் போய் விடுகின்றனர். படைத்துறை வெறியர்களே இவர்களை இழுத்துச் சென்று கற்பழிப்பதாகக் கருதப்படுவதன் எதிர் விளைவாகவே, படைஞர் மீதான தாக்குதல் நிகழ்ந்திருக்கலாம். இதுவே என் கருத்து .. நெருக்கடி மிகுந்த ஓர் எதிர்காலத்தை நிமிர்ந்த நெஞ்சுடன் இங்கு எதிர் பார்க்கிறோம். அன்புடன்,

— **கோவை. மகேசன்,** ஆசிரியர் '**சுதந்திரன்**' யாழ்ப்பாணம்.

பூத்துக் குலுங்கட்டும்!

பேரன்புயர்ந்தீர்! வணக்கம் பல ... நமது கழகம் அங்கிங்கெனாதபடி உலகெங்கும் ஒளிச் சுடராய், விதைத்துச் செழித்து, வளர்ந்து பூத்துக் குலுங்க வேண்டும் என்பதே எமது வேட்கை.

— மருத்துவர். **க. வேலுச்சாமி,** மணியம், தேவபாண்டலம், கல்லக்குறிச்சி.

மிகவும் துணிந்து எடுத்த முடிவு!

பெருந்தகையீர், ஐயா வணக்கம். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழா வெகு சிறப்பாக நடந்தேறி இருக்குமென உறுதியாக நம்புகின்றேன். நாங்கள் அனுப்பியிருந்த (வாழ்த்துத்) தொலைவரிகள் கிடைத்திருக்கக் கூடும். மாநாடு நடந்தபின் வெளி வந்த தென்மொழி இன்னும் இங்கு யாருக்கும் கிடைக்கவில்லை. மாநாடு பற்றிய விரிவான செய்திகள் தென்மொழியில் இடம் பெற்றிருக்கும் என்பதால் அவாக் கொண்டு நண்பர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆரவாரத்திற்கும் நடிப்பிற்கும் மயங்குவார் நிறைந்திருக்கும் தமிழகத்தில் தங்களின் பணி எத்துணை கடுமையானது என்பதை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் என்றாலும், காலத்தின் தேவை திறந்த உள்ளத்தோடு வெளிப்பட்டிருப்பதை பயன் படுத்த வேண்டியது அறிவார்ந்த மக்களின் கடனாகும். தமிழகத்தைக் கடந்து உலகத் தமிழினம் கலை, மொழி, இலக்கியக் கொள்கைளுக்கு மட்டுமன்று, மனத்தின் கொள்கைக்கும் ஆளாகி வருவதை, நமது விளம்

www.thamizham.net - Free E book No 7516

பர அரசியலார் சிந்திக்கவும் நேரமற்றவர்கள் இந்த நிலையில் மிகவும் துணிந்து நீங்கள் எடுத்த முடிவு உலக மக்களால் வரவேற்கப் படும் என்பதில் துளியும ஐயமிருக்க முடியாது.

உங்கள் பணி சிறக்க அதன் மூலம் உலகத் தமிழினம் தனது அரசியல், பொருளியல், மொழியியல் உரிமைகளைக் கட்டிக் காத்துக் கொள்ளத் தீவுத் தமிழர்கள் சார்பான ஒத்துழைப்புகளையும் தர எப்போதும் அணியமாக இருப்போம் என உறுதியளிக்கிறேன்.

— **சுப. சுப்பிரமணியம்**, ஆசிரியர் 'அந்தமான் முரசு', அந்தமான்.

திருவாட்டி குமுதம் மகிழ்நன் மறைவு.

நெடுநாளைய உறைத்த தென்மொழி யன்பரும், தென்மொழியில் தொடக்கக் காலத்தே பணியாற்றியவரும், தென்மொழிப் பணிகளுக்கு ஒரு பெருந்தூணாக இன்றுவரை துவளாமல் நிலைத்துநின்று, என்பால் பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருப்பதுடன், பல்வேறு நிலைகளிலும் எனக்கு உற்ற துணையாகவும் உதவியாகவும் இயங்கி வருபவரும் ஆகிய திருச்சி, **நாரா. மகிழ்நன்** (நித்தியானந்தம்) அவர்களுக்கு அன்புத் துணைவியும், மூன்று குழந்தைகளுக்குத் தாயும் ஆகி, அவ்வப்பொழுது நான் திருச்சி செல்லுங்கால் என்னைத் தாய் போல் அன்புடன் புரந்து, விருந்து பேணி மகட்பாசத்தைக் கொட்டி என் பொதுப் பணிக்கும், தம் கணவரின் தென்மொழித் தொண்டுக்கும் இடையூறு நேரா வண்ணம் துணை நின்ற திருவாட்டி **குமுதம அம்மையார்** கடந்த உ.த.மு.க. மாநாட்டின் பொழுது எதிர்பாராமல் இயற்கை எய்தியது குறித்து யானும் என் குடும்பமும் பெரிதும் வருந்துகிறோம். இளம் அகவையில் தம் கணவரையும குழந்தைகளையும் பெருந்துன்பத்தில் ஆழ்த்திய இவ் விளந்தாயின் இப்பெரும் பிரிவு எளிதே மறக்க வியலாதது. அவரின் இனிய துணையைப் பிரிந்துவாடும் திரு. மகிழ்நனுக்கும் குழந்தைகளுக்கும மற்றும் குடும்பத்தார்க்கும் என் நெஞ்சத் துயரை எங்ஙன் விரித் துரைப்பேன்? இயற்கையின் நிலையாமை எண்ணி, அவர்கள் அமைந்திருக்குமாறும், அம்மையாரின் ஆதன் அமைதியுறுமாறும் நம் குடும்பத்தவர் தென்மொழியன்பர்கள் அனைவரின் சார்பாக என் ஆராத் துயரையும் அவலத்தையும் இரங்கலையும் இதன் வழி அவர்களுக்குப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

—**பெருஞ்சித்திரனார்.**

---

www.thamizham.net - Free E book No 7516

தமிழர் இனங்காக்கச் செயல்படுங்கள்! செயல்படுங்கள்! செயல்படுங்கள்!

— சிங்கை — இறைவாணன்

"குழந்தைக்குச் சோறு ஊட்டும் போதே பிராமண சங்கத்துக்கு ஒரு வாய்" — என்று ஊட்ட வேண்டுமாம்!
எந்த உணர்வில் அந்த அமைப்பு தன் வேண்டுகோளை விடுக்கிறது?
தமிழ் நெஞ்சங்களே, உங்களுக்குத் தமிழ் உணர்வுகள் இருக்கின்றனவா?
உங்களுக்கு இன உணர்வு மிக்க அரத்தம் ஓடுகின்றதுவா?
"குழந்தைகளுக்குப் பாலூட்டும் போதே இன உணர்வையும் ஊட்ட வேண்டுமாம்" — இவ்வாறு பார்ப்பனர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.
நம் தமிழ்த் தாய்கள் எப்படிப் பாலூட்டுகின்றனர், என்பதே இப்பொழுது ஐயமாய்ப் போய் விட்டதே. ஐயகோ, தமிழ் மகனே, உனக்கு இனப்பற்று இருக்கின்றதா, என்ற வினாவும் ஐயமும் தோன்றுகின்றன.
'நம் ஆற்றல்கள் நமது இன வளர்ச்சிக்காக — இன உணர்வுக்காகப் பயன்படுவதில்லையே — ஏன் இந்நிலை?' — பார்ப்பனர்கள் தம் இனத்தைப் பார்த்துக் கேட்கும் கேள்வி. இது!
மிகச் சிறுபான்மையானவர்களே, இது போன்ற வினாவும், அதற்கான விடையும் காண முயலும் போது. ஏ. தமிழினமே நீ இன வளர்ச்சியைப் பற்றி எண்ணிப் பார்த்ததாவது உண்டா?
தமிழ் மகனே, நீ உன் இன உயர்வுக்காக இதுநாள் வரை என்ன செய்து இருக்கின்றாய்?
என்ன தான் செய்யப் போகிறாய்?
எப்பொழுது செய்யப் போகிறாய்?
நீ இதுநாள் வரை இன வளர்ச்சி பற்றி எண்ணியதில்லை.
நீ இதுநாள் வரை இன உயர்வு பற்றி எண்ணியதில்லை.
'ஒரு வேளை பட்டினி கிடந்தாவது பிராமண சங்கத்தை வளர்த்தாக வேண்டு' - மாம்.
தமிழ் மகனே. நீ என்றாவது ஒரு நாள் உன் கழகத்தை, உன் இயக்கத்தை வளர்க்க இவ்வாறு எண்ணியது உண்டா?
தமிழ், தமிழன் என்று கூறும் தமிழ் இனமே, தண்டமிழில் பிறமொழியைக் கலந்து பேசும் தமிழ் இனமே!
உனக்கு மொழிப் பற்று உண்டா?
உனக்கு இனப் பற்று உண்டா?
இன வளர்ச்சி பற்றி எண்ணியதாவது உண்டா?
மானமிகு தமிழ் மகனே!
உன் மறத்துப் போன மண்டை சற்று உணர்வு பெறட்டும்.
உன் குருதி ஓட்டம் சற்றுச் சூடு பெறட்டும்.

www.thamizham.net - Free E book No 7516

நீ வாழ்ந்த காலங்கள் போகட்டும்; இனி வாழ வேண்டிய காலத்தை எண்ணிப் பார்!
தமிழே, தமிழினமே உன் நலங்காக்க ஒரு பேரணி தேவை, ஆம். உனக்கு ஒரு புதிய செய்தி
கடந்த துலைத் திங்கள் உஉ, உ௩. ஆம் நாள்களில் தமிழகத்தின் தலைநகரில்'**உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்**'தோன்றி விட்டது.
நீ தூங்கிய காலங்கள் போதும்!
நீ தூங்கியே வினை செய்த காலங்கள் போதும்!
மாற்றினத்தான் தமிழ் மறவனையே எதிர்க்கத் துணிந்து விட்டான்!
பறை ஒலி எழுப்புகிறான்!
உன் செவிப் பறைகளில் அஃது ஒலிக்க வில்லையா?
மறத்துப் போன, மானமிலாத் தமிழ் இனமே!
இனியாவது உன் இன உணர்வு, இன ஒருமைப்பாடு இன முன்னேற்றம் காணச் செயல்படு. உ. த மு. க. செயல்பட நாம் ஆயிரமாயிரம் இளைஞர்களைச் சேர்த்தாக வேண்டும். ஊர்கள் தோறும் தெருக்கள் தோறும் கழகங்கள் அமைத்தாக வேண்டும்.
பலநாள் பட்டினி இருந்தாவது நம் கழகத்தைக் கட்டிக்காக்க முனைய வேண்டும்.
நம் இன ஒருமைப் பாட்டுக்கு இனி வழி கண்டாக வேண்டும்
"உலகத் தமிழின முன்னேற்றக் கழக"த் - தலைமைச் செயலகத்திலிருந்து வரும் கட்டளைகளை ஆங்காங்கு உள்ள தமிழ் இளைஞர்கள் ஒறுமைப் பாட்டுடன், அப்போதைக்கப் போது நிறைவேற்ற வேண்டும்.
நம்மவர்களிடையே போட்டிகள் வேண்டாம்!
இருக்கும் பூசல்களை ஒதுக்கி வையுங்கள்!
ஒன்றுபடுங்கள்; ஒன்றுபடுங்கள்; ஒன்றுபடுங்கள்!
தெருக்கள் தோறும் நம் "**உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்**" அமையுங்கள்.
நம் உ. த. மு. கழகத்தில் ஆயிரமாயிரம் இளைஞர்களின், முதியோர்களின், மானமிகு தமிழ் மறவர்களின் பட்டியலை வளருங்கள்!
இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்ற வினா நமக்கு வேண்டாம்.
தமிழ் மானம் காக்க, தமிழர் இனங் காக்க,
செயல்படுங்கள்! செயல்படுங்கள்! செயல்படுங்கள்!

உ. த. மு. க. செய்தியிதழ்

உ. த. மு. க. சார்பாக ஒரு கிழமைச் செய்தி யிதழ்க்கான இசைவு வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப் பெற்றுள்ளது. இசைவு கிடைத்து இதழ்ப் பதிவு முடிந்ததும், விரைவில் இதழ் வெளிவரும். அதுவரை உ. த. மு. க. செய்திகள் தென்மொழி இதழிலேயே வெளி வரும் அன்பர்கள் அருள் கனிந்து கழகச் செய்திகளை இடைக் காலத்தில் தென்மொழி வழியாகவே தெரிந்து கொள்க.

www.thamizham.net - Free E book No 7516



மாணவர் அரங்கத்தில் பாவோகி. சுத்தானந்த பாரதியார் தமிழின நலங்கருதும் பாடல்களைப் பாடினார்.

முதல்நாள் மாணவர் அரங்க நிகழ்ச்சியின் இறுதியில் பாவலரேறு, மாநாட்டின் அடுத்த நிகழ்ச்சிகளைப் பற்றி அறிவிக்கிறார்.

www.thamizham.net - Free E book No 7516



தொடக்க மாநாடு கூட்டுவது பற்றி அமைப்பாளர் பாவலரேறு 3-11-81 அன்று மாலை செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

செய்தியாளர் கூட்டத்தில் பாவலரேறு பேசுகிறார். அவர்க்கு வலப்பக்கம் தென்மொழி துரையரசனாரும், இடப்பக்கம் தென்மொழி மறைநித்தலின்பனாரும் அமர்ந்திருக்கின்றனர்.

www.thamizham.net - Free E book No 7516

'கலைமாமணி' தஞ்சைவாணன் வாழ்க!

தமிழக அரசு, பாவலர் **தஞ்சைவாணன்** அவர்களுக்குக் **'கலைமாமணி'** விருது கொடுத்துள்ளது. நமக்குக் கிடைத்தது போல் நாம் மகிழ்கிறோம். இதனினும் மிகச் சிறந்த விருதுக்கும் பரிசுக்கும் தக்கவர் அவர். என்றோ கிடைத்திருக்க வேண்டிய பெயர்ப் பட்டியலில் அவர் முன்னவர். இவ்வகையில், அரசு இதற்கு முன் செய்த நூறுதவறுகளுக்குக் கழுவாயாக இவ்வொரு சரியான தெரிந்தெடுப்பைச் செய்திருக்கிறது.

தூய்மையான நீர்போலும் பளிங்கு உள்ளம்; காவற்ற இனத் தொண்டு; பனிமலையைப் புரட்டியடிக்கும் துணிவு; தம் கொள்கைக்குத் தடையாக எவர் வந்து இடை நிற்பினும் எதிர்த்துப்பாயும் புலிப் பாய்ச்சல்; அன்பொழுகும் பேச்சு; அருளொழுகும் கண்கள்; துன்புக்குத் துவளாத வைர நெஞ்சம்; துயர்சான்ற தமிழினத்தைக் கட்டியணைக்கும் நல்லுணர்வு; திரவிடத்திற்கு ஒளியேற்றும் திருவிளக்கு அவர்! நம்மின முன்னேற்றத்திற்கென்றே தம்மை ஒப்படைத்துக் கொண்ட குணக்குன்று! அனைத்திற்கும் மேலாக அவர் ஒரு சிறந்த **பெரியார் தொண்டர்!** சிறந்த பகுத்தறிவாளர்!

'கோவிந்த இராமாநுசம்' என்னும் இயற்பெயர் கொண்ட அவர் சோறுதரும் சோழநாட்டைச் சார்ந்தவர். தஞ்சை மாரியம்மன் கோவில் அவர் பிறந்த ஊர். ஆண்டாள்-கலியபெருமாள் என்னும் தாய் தந்தையர்க்கு 23-4-'37-இல் பிறந்தவர். 'கவிஞர்கோ' தேசிகன் இவர் தமையர். இளங்கலை (B. A.) கணக்கும். முதுகலை (M. A.) தமிழ் இலக்கியமும் தேறியவர். கணக்காகப் பேசுவார்; இலக்கியமாக எழுதுவார்! அழகப்பா, பச்சையப்பன், சென்னை சட்டக்கல்லூரி ஆகிய முக்கல்லூரிகளிலும் ஈட்டிய மூளைத்திரட்சி யுடையவர். தந்தை பெரியாரிடமும், தூய தலைவர் காமராசரிடமும் வாழ்வியலைத் திரட்டிச் சேர்த்துவைத்திருக்கும் அறிவுச் செல்வர், அவர்! அறிஞர்களைப் போற்றிப் புரப்பதில் தொண்டர்க்கும் தொண்டர் அவர்.

'களங்கண்ட கவிஞன்' (1965), 'கரிகாற்பெருவளத்தான்' (1981 உ. த. மாநாடு), 'சத்ரபதி சிவாசி' (1975), சாம்ராட் அசோகன். எனும் உணர்வும் தமிழிலக்கியத் திறவும் வாய்ந்த நாடகங்களுக்கு ஆசிரியர் அவர். முதல் நாடகத்தில் சிவாசிகணேசன நடித்துப் பெருமை பெற்றார். 'பணந்தரும் பரிசு,' பாலாடை,'

www.thamizham.net - Free E book No 7516

உ. த. மு. க. தொடக்க மாநாட்டைக் கண்டு களித்த நெஞ்சங்களின் கருத்துரைகள்!

0 பாவலரேறு ஐயா, வணக்கம்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாடு, பல்லாற்றானும் சிறப்புற நடைபெற்றது. அதனைக் கண்டு உள்ளமெலாம் பூரித்த பல்லாயிரவருள் யானும் ஒருவன். அம் மாநாட்டினைத் தாங்கள், இருபதாம் நூற்றாண்டின் இணையிலாத் தலைவன் — வெண்தாடி வேந்தன் - ஈரோட்டு அரிமா — மூரி முழங்கிப் புறப்பட்ட — பணி செய்த — இடத்தில் நடத்திய பாங்கு நுண்மாண் நுழை புலத்தது.

தமிழினத்தின் தாழ்வினை, மொழியால், குமுகாய அமைப்பால், மற்றும் அரசியல், பொருளியல்களால் சுட்டிக் காட்டித் தட்டியெழுப்பி இனவுணர்வு கொள்ளுமாறு தூண்டியவர் வேறு எவருளர்? இன்று, நமது நாட்டு, இன, மொழி உணர்வுகளை ஊட்ட வல்லவர் பாவாணருக்குப் பின்னர் தாங்கள் ஒருவரே. தங்களது எண்ணம் ஈடேறவும், தமிழினம் மீண்டும் புத்துணர்வும் புதுப்பொலிவும் பெறவும், உலகின் பல விடங்களிலும் வாழும் தமிழன் தலைநிமிர்ந்து நிற்கவும் இக் கழகம் துணை செய்யும் என்று நம்புகின்ற — அதன் வழி நடக்கின்ற — பல்லாயிரவருள் யானும் ஒருவன்! அன்புடன்,

— **இர. கலியாணசுந்தரம்**, சென்னை-28.

0 அன்பிற்குரிய ஐயா, அவர்களுக்கு, வணக்கங்கள். நலமாக வந்து சேர்ந்தோம் .... மாநாடு தந்துள்ள நல்ல எழுச்சிக்கு- பயனுடைய செயற்பாடுகளுக்கு -வடிவமைக்கும் பெரும் பொறுப்புகளில் முழுமையாக எண்ணி வருவீர்கள் என்று நம்புகிறோம். இவ்வரும் பெரும் — உடனடித் தேவையான — முயற்சிகளைச் செயலாக்குங்கால், சுற்றியுள்ள சிலரால் ஏதேனும் சுணக்கங்கள் ஏற்படாமல்

(முன் பக்கத் தொடர்ச்சி)

'சாதுமிரண்டால்,' 'பட்டத்து ராணி,' 'பொன்னான வாழ்வு,' கண் மலர்', 'புனித அந்தோணியார்', 'கீதா ஒரு செண்பகப் பூ' முதலிய பதினெட்டுத் திரைப் படங்களின் பாடலாசிரியர் அவர். அதற்கெனவே இக்கால் விருது பெற்றுள்ளார். மராட்டிய மாநிலத்தில் புனாவில் பெற்ற தொலைக்காட்சிச் சிறப்புக் கல்வியால், இக்கால் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் காட்சி உருவாக்குநர் (Producer) ஆகப் பணியாற்றுகின்றார். பாவலர் **தஞ்சைவாணன்** மேலும் பற்பல பரிசுகளும் சிறப்புகளும் பெற்று, எந்தமிழ்க்கும் இனத்திற்கும் இனிய தொண்டாற்ற வேண்டுமென்று நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம். — **பெருஞ்சித்திரனார்.**

www.thamizham.net - Free E book No 7516

பார்த்துக் கொள்வது மிக இன்றியமையாத ஒன்றாகத் தெரிகிறது. நல்லதொரு காலச் சூழலில் தொடங்கப்பட்டுள்ள இயக்கத்தின் செயற்பாட்டு முறைகள் குறித்து, விரைவாகவே அறிவிப்பீர்கள் எனப் பெரிதும் எதிர்நோக்கியுள்ளோம்.

தூய்மையான ஓர் இயக்கமாக மிளிர்வதுடன், இருக்கும் பிற கட்சியினரை முறைப் படுத்துவதாகவும், இயக்கம், கழகம், கட்சி என்பனவற்றிற்கே ஒரு பெரும் எடுத்துக்காட்டாகவும் அமையப் போகும் இவ்வரும் பணிக்குத் தாங்கள் இடும் பணிகளை இயன்றளவு ஏற்றுச் செயலாற்றுவோம் என்ற எங்களின் உறுதியை உளமாரத் தெரிவிக்கின்றோம். இடும் பணிகளை எதிர்பார்த்து இருக்கிறோம்.

— **மா. ஆறுமுகம்**, பல்லடம்.

0 மாண்புயர் ஐயா அவர்கட்குப் பணிவான வணக்கங்கள். மாநாடு வெற்றியுற அமைந்தது. மங்கையர்க்கரசி அம்மையார் அவர்களின் உரை நெஞ்சை உருக்கியது. கண்ணீர் பெருக்கியது. நாவலர் அவர்களின் உரை தமிழர் ஒவ்வொருவருக்கும் அமைந்துள்ள கடமையைச் சுட்டி நின்றது. எல்லாவற்றிலும் முகாமையாகத் தங்களின் அமைதியான நடுநிலை பிறழாப் பேருரை பொறுப்புணர்வுடன் ஆரவாரமற்றுக் கடமையாற்றுமாறு அனைத்துத் தமிழர்க்கும் உணர்வூட்டி நின்றது. தீர்மானங்களோ எதிர்காலப்பணி கழகத்திற்கு எவ்வாறு அமையும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவனவாக அமைந்திருந்தன. பன்மொழிப் புலவர் அவர்களின் வாழ்த்துரையில் குறித்த வண்ணம் தந்தை பெரியாருக்குப்பின், அவர்களைப்போலவே தமிழினத்தைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றும் மறவராம் தங்களை இத் தமிழகம் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய இன்றியமையாமையை இம் மாநாடு எடுத்து விளக்கியது. அன்பு.

— **மா. செ. தமிழ்மணி**, வேட்டாங்குளம்.

0 பண்புடை அன்புடைப் பாவல ரேறே!
கண்மிகு உமது கருத்துத் தொண்டு
பொன்னெழுத் தினிலே பொறிக்கும் தமிழின
முன்னேற்றத் தொடக்க மாநாடு அருமை!
மாவட்டந் தோறும் மேன்மேல் நடந்திட
நீர்வட்டம் வருதல் நன்னய மாகிடும்!
பேர்தமிழ் பரவிடப் பெரிதுமிது உதவும்!
ஆர்கலி உலகில் நாமொன்று சேருவோம்!

— **இரா. வெற்றியழகன்**, க. மு. கல்வியூர், (குடியேற்றம்).

0 விடுதலைப் பாவலரேறே! வணக்கம். நான் தமிழ் மணக்கும் தங்கள் பாடல்களைக் காதலித்தவன்; அப்பழுக்கற்ற தூய ஒழுக்கத்தை — அருந்தமிழ்த் தொண்டினைக் கண்ணுற்றுத் தங்கள்பால் அன்பு கொண்டவன்.

www.thamizham.net - Free E book No 7516

தாங்கள் தலைமை தாங்கி நடத்திய உ. த. மு. க. மாநாட்டிற்கு யானும் வந்திருந்தேன். ஓரினம் அழிக்கப் படாமல் இருக்க இன்றியமையாத நல்ல அமைப்பு உ. த. மு. க. அதனை நல்வழிப் படுத்தி ஈழம், தமிழ்நாடு விடுதலை பெறத் தங்கள் கழகம் பணியாற்றிட வேண்டும். என்னின் உள்ளுணர்வு எல்லாம், உயிர்த்துடிப்பெல்லாம், உலக அரங்கில் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்றல் வேண்டும்; தமிழ் மொழி உலக மொழிகளுள் உயர்ந்தோங்கி விளங்கிட வேண்டும்; அதற்குத் தங்களின் உ. த. மு. க. பாடுபடும். அதனால் விடுதலை நோக்கிப் படையமைப்பீர்களேயானால், அப்படையில் முன்னணியில் நிற்கும் மறவனாக, என்னைப் பதிவு செய்து கொள்ளுங்கள். அன்பு மறவன். — **மும்மன்**, பட்டணம், இராசிபுரம்.

0 அன்பு மிகு ஐயா அவர்களுக்கு, மாநாடு முடிந்து நலமுடன் ஊர் சேர்ந்தேன். தங்கள் நலனும், இயக்கத்தின் உயிர்த்துடிப்பான நண்பர்கள், இல்லத்தார் நலமும் அறிய நாட்டம். மாநாடு உலகம் வியக்கும் வண்ணம் சீருடனும் சிறப்புடனும் நிகழ்ந்தது. தமிழர்களுக்கு என்று வாழும் ஒரு விடிவெள்ளி தாங்கள்தான் என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் உணரத் தொடங்கி விட்டது.
—புலவர். **இரா. சிவசண்முகம்**, இல. இ. (க. மு.) இராமநாதபுரம்,

0 உலகத் தமிழினக் காவல! வணக்கம் வாழ்க! நலம் சூழ்க. கடந்த மூவாயிரம் ஆண்டுக் காலத் தமிழின வரலாற்றில், தமிழின வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உலகளாவிய பேரியக்கம் கண்ட பெருமை தங்களையே சாரும். 'தென்மொழி ஓர் இதழன்று; அஃது ஒரு பேரியக்கம்' என்ற தங்கள் கூற்றை மெய்ப்பித்து விட்டீர்கள். தமிழினப் பாவலராயிருந்த தாங்கள் தமிழினக் காவலராகவும் உயர்ந்து விட்டீர்கள். எந்த ஒரு பாவலராலும், எந்த ஓர் இதழாசிரியராலும் செய்யப் பெறாத—செய்ய முடியாத மாபெரும் பணியைச் செய்து, தமிழின வரலாற்றில் தனி முத்திரை பெற்று விட்டீர்கள். தமிழர்களின் எண்ணப் பாங்கறிந்து மாணவர் அரங்கம், இயக்க இசையரங்கு, மகளிர் அரங்கு, தமிழினக் காப்பு, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்கம் என மாநாட்டு நிகழ்வைப் பல் வகைப் படுத்திப் பல்வேறு கோணங்களில் தமிழறிந்த சான்றோர் களையும், தலைவர்களையும் பேசச் செய்து, இறுதியில் அன்பும், அமைதியும் நிறைவும் கலந்த பொறுப்பான சிறப்புரை யாற்றி எல்லாரையும் கொள்ளை கொண்டு விட்டீர்கள். தமிழீழத் தலைவர் நாவலர் **அமிர்தலிங்கனாரை**யும் அவர் தம் **துணைவியாரை**யும், தமிழின வயிரமணியாம் **வீரமணி**யாரையும், பன்மொழிப் புலவர் **அப்பாத்துரை**யாரையும் ஏனைய பிறரையும் கலந்து கொண்டு, களிப்புரையும், விழிப்புரையும், பொறுப்புரையும், சிறப்புரையும் ஆற்றச் செய்தது பாராட்டுக்குரியதாகும்.

www.thamizham.net - Free E book No 7516

அடுத்து, இயக்கம் காண்பது எளியதுதான். ஆயினும் அதனை அரணிட்டுக் காக்கும் பணியே முகாமை உடைத்தது. இத்தகு பணிக்குத் துணை நிற்க, தமிழினத் தலைவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், பாவலர்கள், நெடுநாளைய தென்மொழி அன்பர்களையும் தவறாமல், தள்ளாமல் அன்புடன் ஏற்று, அனைவரையும் அரவணைத்துச் சென்று, இயக்கம் பீடு நடை போட ஏற்றது செய்யுங்கள். அப்போது எல்லாரின் வாழ்த்தையும் ஆதரவையும் பெறலாம். மாநாட்டு நிகழ்வில் எளியேனையும் பங்கு கொள்ளச் செய்தமைக்கு நன்றி.
அன்புடன் — புலவர். **நாவை. சிவம்,** இல. இ., மணப்பாறை.

0 பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு முடிவுற்றுப் பின் தங்களுடன் உரையாடும் வாய்ப்பில்லாது போயிற்று. மாநாட்டில் சட்டக் கல்லூரி மாணவர் சார்பில் எனக்கும் வாய்ப்பளித்தது குறித்து, மிக்க மகிழ்ச்சியும் தங்கட்கு நன்றியும் கூறக் கடமைப் பட்டுள்ளேன். மாநாடு எதிர்பார்த்த அளவிற்கு அமையவில்லை எனினும் சிறப்பாகவே தொடக்க மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி அமைந்திருந்தது. முதல் நிகழ்ச்சியில் மகளிர் அரங்கு மிகச் சிறப்பாக, இருந்ததுடன் திருவாட்டி **மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்** அவர்களின் எழுச்சி மிக்க உணர்ச்சி உரை எம் போன்றோரின் நெஞ்சங்களில் குமுறலைத் தோற்றுவித்தது. — விடுதலைப் பாவலர் காசி ஆனந்தனின் பாடலை உயிரூட்டமுடன் பாடி, அவர் தம் உள்ள உணர்ச்சிகளைக் காட்டியபோது என் கண்கள் பனித்தன. நெஞ்சம் பதறியது. தங்களின் அரிய உரையினை நேரில் பல முறை கேட்டிருந்தாலும், கொள்கைச் சிறப்பும், கருத்துச் செறிவும் மிகத், தாங்கள் ஆற்றிய உரை, இத் தமிழினத்தின் இன்றைய நிலையினைத் தெள்ளிதின் உணர்த்தியதோடு, உ த மு. க. வின் தொடக்க இன்றியமையாமையினை இன்றைய அரசியல்தன்னை நோக்கினர் அறிந்து தெளியுமாறும் அமைந்திருந்தது. எண்ணிப் பார்ப்போர் நமது அணியில் வந்திணைவர் எனபது உறுதி. வாழ்க உ. த. மு. க.
அன்பன், — **செ. கண்ணன்,** க. இ. (ச. இ.), மதுரை.

0 பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கு முரிய ஐயா அவர்கட்கு, வணக்கம். உ. த. மு. க. மாநாடு மிகவும் சிறப்புறக் தொடங்கி முடிவுற்றது. இனி, அதன் செயற்பாடுகளைப் பொறுத்தே விளைவுகள் இருக்கும். எனவே, தாங்கள் எவ்வகையிலும் சோர்வுறாமல், திண்ணிய முறையில் எண்ணிய அளவில் எண்ணியவை ஈடேறும் என்பது திண்ணம். பட்டி, தொட்டிகள் எங்கும் உ. த மு க. வின் கொள்கைகளை விளக்கிச் சிறுவர்கட்குப் பாடம் நடத்துவது போல் தக்க அறிவியற் கருத்துகளுடனும், புள்ளி விளத்தங்கள், இயல், நாடகம் மற்றும் திரைக் காட்சிகள் வாயிலாய் ஒவ்வோர் ஊரிலும் தங்கலிட்டு, ஓர் ஐந்தாண்டுகள் முழுமையாய்ச் செயல்பட்டால், நாம் கருதும், மொழி,

www.thamizham.net - Free E book No 7516

இன, நாட்டு நோக்கம் நிறைவேறும். அதற்கிடையில் ஆங்காங்கே சிறு அளவில் நம் கொள்கைகளுக்குப் பாடுபட்டாலும் அதனாலும் பயன் விளையும்.

எப்படியும் தாங்கள் குறிப்பிட்டது போல் 1985 பொங்கல் முதற் கொண்டு, யான் எண்ணியவற்றை ஈடேற்றும் திறன் பெறுவேன். அதற்கான முயற்சியில் நான் இப்போது தன்னந் தனியனாய் ஈடு பட்டுள்ளேன். அம் முயற்சி ஒரு பக்கம் இருக்க, இயல்பாக ஒவ் வோர் ஆண்டும் என் வரவில் ஒரு பகுதியை இன மேன்மைக்காகச் செலவிட்டு வருவேன். முழுமையாக என்னை இவ்வினத்திற்கு மட்டும் ஒப்படைக்கும் நாள் ஒரு பொன்னாள். அந்நாள் விரைவில் வருவதாக அல்லது 1985 பொங்கலன்று வரும். இஃது உறுதி. அன்புடன்.

—**தென்மொழி நா. இளமாறன்**, பொறியாளர், கோனேரிப்பட்டி.

அன்புநிறை பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, வணக்கம். மாநாட்டில் கலந்து கொண்டு உ. த. மு. க. தொடக்க விழா நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி, கண்டும், கேட்டும் பயன டைந்த உண்மைத் தமிழர்களுள் யானும் ஒருவன். இடையிடையே தங்களின் இணைப்பு உரை சிந்தனைக்கு நல்ல விருந்து. தலைவர் **கீ. வீரமணி** அவர்களின் உரை மாபெரும் எழுச்சியூட்டுவதாக இருந்தது. தாங்களும் அவருந்தாம் இற்றைத் தமிழனின் இரு விழி களாக இருந்து வழி நடத்திச் செல்லத் தகுதி படைத்தவர்கள் என்பது உறுதியாகி விட்டது. தொடர்ந்து செயல்படுங்கள். தோள் கொடுக்க நாங்கள் உள்ளோம்.

— வேலூர். **ம. நாராயணன்**, க. மு. வேலூர். வ. ஆ.

0 அன்புள்ள ஐயா அவர்களுக்கு வல்லத்தரசு எழுதுகின்றேன். எதிர்க்காலத் தமிழகத்தின் விடியலுக் கொரு கட்டியக் குரலாய் அமைந்த நமது மாநாட்டினை ஆர்வமும் ஏக்கமும் நம்பிக்கையும் கொண்ட ஒரு பார்வையாளனாய் அமைந்திருந்து பார்த்து மகிழ்ந் தேன். அந்தப் பெரும் பணிக்கு இன்று தங்களைத் தவிர வேறு எவரும் முன்வரவில்லை; தகுதியும் இல்லை என்பதை — — நாங்கள் கூறிக் கொண்டிருந்ததை — அப்படிக் கூறத் தயங்கியவர்கள், வேண்டியவர்கள் — எல்லாருக்கும் கேட்கும்படி அறிவித்தார்கள். தேவையற்ற கருத்து முரண்களை விலக்கி ஒன்று பட அடி எடுத்துள்ளோம் இதுவே இம் மாநாட்டின் விளைவு. ஆனால், அதன் தொடர்ந்த வெற்றியும் பயனும் இயக்கத்தின் செயற் பாட்டிலேயே உள்ளது. நமது நோக்கம் ஒன்றேதான். அது சம வுடைமைத் **தமிழ்க்குடியரசு** அமைப்பதுதான். அதற்கான செயல் திட்டங்களும், போர் முறைகளும், அமைப்பு முறைகளும், தெளிவாக வரையறுக்கப் பட்டுத் தக்கார் பொறுப்பில் அமர்த்தப் பெற்று இடை விடாத முயற்சியில் ஈடுபட்டால் மட்டுமே அந்தப் பயனை நோக்கி நாம் மெல்ல நகர முடியும். அரசியல் கட்சிகளில் இருப்பது போலவே

www.thamizham.net - Free E book No 7516

தாங்கள் அறிவித்த பொறுப்பு நிலைகளைப் பதவிகளாக எண்ணி அவற்றால் தங்களை இருத்தி அழகு பார்த்துக் கட்டளை பிறப்பிக்கக் காத்திருப்போரை நாம் முதலிலேயே கிள்ளி எட்ட எறிய வேண்டியிருக்கிறது.

அமைப்பில், குடியாட்சி (சனநாயகம்) என்ற பெயரில், எந்த மட்டத்திலும் அளவுக்கதிகமான உரிமைகள் எடுத்துக் கொள்ளப் பெறுவதும் முதலிலேயே தடுக்கப் பெற வேண்டும். ஆய்வு மட்டத்திற்கு அப்பால் எந்தத் தனிக் கருத்தும் வெளிப் படுத்தப் படக் கூடாது. மேலும் செயல் நிலையில் நாம் செய்யும் தவறுகள் பின்பு திருத்திக் கொள்ளப் படலாம். நான் முன்பே திருச்சியில் வலியுறுத்தியதையே உறுப்பினர் சேர்ப்பில் மீண்டும் வலியுறுத்துகிறேன். அஃதாவது, இரட்டை உறுப்பினர் முறை கூடவே கூடாது. **வரையறுக்கப் பட்ட நமது கொள்கைகளையும், அவற்றை முன்னெடுத்து எங்களை வழி நடத்தும் தங்கள் தலைமையையும் நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினராகலாம்.** மற்றவர்கள் வெளியே நின்று ஆதரவுதரட்டும். தங்களைக் குட்டி மார்க்சு, குட்டி இலெனின்களாகக் கருதிக் கொண்டு, ஏதோ போனால் போகிறது, இந்தப் பெருஞ்சித்திரன் கூட்டம் என்னதான் சொல்கிறது என்று கேட்போம் என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு, அவ்வப்பொழுது புன்னகைகளைச் சிதறிக் கொண்டிருந்த புரட்சிப் புயல்களை(!)யும் (மாநாட்டில்) பார்த்தேன். அவர்களையும் எதிர் கொள்ள வேண்டும்.

... இங்கே தூண்களாயிருக்க வேண்டியவர்கள், வேருக்கு வெந்நீர் ஊற்றுவோராயும், உடல், மன நோயினராயும், அறிவற்ற வெற்று உணர்வினராயும், செயலாண்மை அற்றவராயும், கொள்கைக் கடிவாளம் போட்டுக் கொண்டவராயும், பதவிப் பித்தர்களாகவும் இருப்பது நம் வலியின்மையை நமக்கு உணர்த்துகிறது .. இயக்கத் தொடர்பான பணிகளுக்கு எப்போதும் அணியமாயிருக்கிறேன்.

— **வல்லத்தரசு**, பு. புளியம்பட்டி.

0 திருமிகு புலவரேறு ஐயா, அவர்கட்கு வணக்கம் பல. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழாவில் கலந்து கொண்டு, ஈழத்துக் கயவர்கள், நந்தமிழர்களுக்கு எடுத்துரைக்க வியலாதவாறு இழைத்த கொடுமைகளைத் திருவாட்டி மங்கையர்க்கரசி எடுத்துரைத்த போழ்து உண்மைத் தமிழனின் குருதி கொதித்திருக்கும் என்பது உறுதி. அதுபோழ்து யான் என்னையும் மறந்திருந்த நிலையில் எண்ண அலைகள் உருண்டோடின....

தமிழின உணர்வு கொண்ட தக்கோரே! சான்றோரே! 'தாழான் தமிழன், தாழ்ந்தால் யாண்டும் வாழான்' என்று உலகு உணர, ஒன்று படுவீர்! ஓரணியில் (பாவலரேறணி) வென்றிடுவீர்! வெற்றிக் கொடி பறக்கட்டும்!

—புலவர். **பழ. தமிழாளன்**, க. இ, செவல்பட்டி.

www.thamizham.net - Free E book No 7516

0 செந்தமிழ்ப் பாவலரேறு ஐயா, வணக்கம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழா எடுப்பும் ஏற்றமும் கொண்டு, இலங்கியதைக் கண்டு களிப்புக் கொள்ளும் பேறு பெற்றோம். "பாவலனின் பணி—பாடல்கள் மட்டுமா? ஒரு போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தவும் வேண்டும்" என்ற ஓ.சி-யின் எனும் ஓர் அறிஞரின் வாமாக கருத்து வரலாறாக உருவெடுக்க, தங்களின் முயற்சி திருவினையாக்கும். வசை இல் வான்புகழ் கொள்ளத்தக்க புறநானூற்றுப் பொய்யாப் புலவரை ஒத்த செந்நாவல் செல்வராகிய தாங்கள்,

உலகில் தமிழின முன்னேற்றங் காணவே
உன்னிக் கழகத்தைக் கண்ட —புலவரீர்!
உள்ளத் தனைய துயர்வாம் உணர்தமிழர்
உள்ளிய தெய்தல் எளிது!

— எனவே, 'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்' எனும் வாய்மொழிக் கிணங்கத் தமிழகம், தமிழின ஏற்றங்காணும் தலைமையைத் தங்களிடம் விட்டுள்ளது. செந்தமிழ், இனம், நாடு சிறப்பது உறுதி! ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் என்பது பொய்யாமொழியன்றோ — **கோ. தேவராசன், சு. வேங்கடேசன்**, வழக்கறிஞர்கள், திருப்பத்தூர், வ. ஆ.

0 அன்புடையீர், வணக்கம். தொடங்கியிருக்கின்ற இபக்கம், தமிழ்க் குமுகாயத்துக்கு-வீரமும் விவேகமும் உள்ள குமுகமாக வளர -நல்வழி காட்டிடவும் தங்கள் முயற்சி வெல்லவும், வாழ்த்துகிறோம். — **இரு. இதய மணி** (தலைவர்) **சு. அறிவழகன்** க. மு. (பொதுச் செயலாளர்) தமிழ்நாடு இளைஞர் பாசறை. சென்னை 15.

0 ஐயா, பணிந்த வணக்கம். நடந்து முடிந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாடு எல்லா வகையிலும் சிறப்பாக நடந்து இருக்கின்றது என்றால் மிகையன்று. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் உண்மையில் போர் மறவர்தாம்! தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் நீங்காத தொண்டு செய்யும் மான மறவர்கள்! .. அடுத்து வரும் தென்மொழியைக் கண்டு இன்முறையாக இந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் இங்குச் செயல்படும்... இந்த அமைப்புத்தான் இனி தமிழர்களுக்கு அரண், அரவணைப்பு அனைத்தும்! மலர்க உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்!

— **க. க. ஆறுமுகம்**, அவநாசி.

0 பெருமதிப்புக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். உ. த. மு. க. மாநாட்டின் இரு நாள் நிகழ்ச்சிகளையும் முழுமையாக இருந்து செவி மடுத்தேன். என் நண்பர்கள் பலரும் அவண் வருகை தந்திருந்தனர். சிலருக்கு மாநாட்டுப் பொழிவுகள் வியப்பைத் தந்தன. இத்தகையதோர் இயக்கம் தேவையென்பதை அவர்கள் அனைவரும்

www.thamizham.net - Free E book No 7516

ஏற்றுக் கொண்டனர். அடுத்த செயற்பாட்டினை அறிய விழைகின்றேன் — ப. மணிமாறன், கிருட்டிணராயபுரம்.

() பேரறிவு சான்ற பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். கடந்த நவம்பர்த் திங்கள் 7, 8-ஆம் நாட்களில் நடைபெற்ற உலகத் தமிழின முன்னேற்றத்திற்கான அடிப்படை செவ்வனே நிலைநாட்டப் பெற்றமை கண்டு பேருவகை உற்றேன். பெரும் எழுச்சியுடன் தமிழறிஞர்கள் பேசிய பேச்சுகள் என்னுடலில் தமிழர் முன்னேற்றத்திற்கான செயல்திட்டம் காணத்தினவெடுத்து நிற்கின்றது. தமிழின முன்னேற்றத்திற்கு ஒரு பொற்காலம் கிடைத்து விட்டதென்றே பேருவகை எய்தினேன்.

அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காயென சிதறிக் கிடக்கும் தமிழர்கள் தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை ஒழித்து, ஒன்றுபடல் வேண்டும் தமிழர் பண்பாடு, கலை, நாகரிகம், தலை நிமிர்ந்து ஏறுநடை போட்டு மிளிர வேண்டும். கண் இமைக்கும் நேரமும் தனக்கென முயலாது, அன்னைத் தமிழுக்காகத் தமிழினத்திற்காக அரும் பாடுற்று உழைக்கும் தாங்களே தமிழினத்திற்கு நல்வழி காட்டிடல் வேண்டும்.

மாநாட்டின் வாயிலாகத் தமிழர்கள் எங்ஙனம் அயலாரின் கைப் பாவையாக ஆடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியென அறிஞர் பெருமக்கள் எடுத்துக் காட்டினர். தமிழரின் இழிநிலையைப் போக்கவும், தமிழர்கள் ஒன்றுபடவும் அடுத்து ஆற்ற வேண்டிய பணிகளை வகுத்து வினையாற்றிடப் பேரறிவு சான்ற தங்களால்தான் இயலும். அவ் வினையாற்றிடத் தூங்கிக் கிடந்த தமிழ் நெஞ்சங்கள் கிளர்ந்தெழுந்து மாநாட்டில் வந்து மிளிர்ந்தமை சான்றாகும். தூங்கிக் கிடக்கும் புலியினை இடறுகின்ற செயல் போலத் தமிழர்கட்கு இழிசெயல்கள் புரியும் தமிழ்ப் பகைவர்களை வேரழித்துத் தமிழினம் வாழ வழிகளை வகுத்திட வேண்டுகின்றேன். எத்துணை பெரிய தமிழகம்! எத்துணை பெரிய தமிழ்க் கூட்டம்! இங்கே உள்ள தமிழர்கள் ஏனிந்த வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர்? தமிழ் நெஞ்சங்களே, ஒன்றுபடுங்கள்! உயர்வு பெறுவோம்! ... நமக்குள் வேறுபாடுகள், அயலான் நம்மை அழிக்க அஃது அவனுக்கு ஒரு பெருங்கருவியாகப் போகும்!

அருமைத் தமிழ் நெஞ்சங்களே! உறங்கினது போதும்! விழித்தெழுங்கள்! ஒன்றுபடுவோம்; உயர்வு பெறுவோம் என ஒருமித்த குரலில் ஒவ்வொரு தமிழனும் சூளுரை கொள்வோம்! வாழ்க தமிழர்! வளர்க தமிழினம்! — ஆறுமுக பழனி, திருமழிசை, சென்னை-56.

0 பேரன்பு சான்ற பெருந்தகை ஐயா அவர்களுக்கு, வணக்கம் ... சென்னையில் உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாட்டில் தாங்கள் ஆற்றிய ஆர்வமிகு பணியை என்னால் மறக்க இயலவில்லை.

www.thamizham.net - Free E book No 7516

தங்களது உள்ளார்ந்த இயக்கத்திற்கு முழுமனத்துடன் என்னை ஈடு படுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

— திருக்குறள். **பெ. இராமையா**, பதின்கவனகர், கோவில்பட்டி.

0 உலகில் தமிழினம் ஓங்கிச் சிறக்க
இலங்குமுன்னேற் றக்கழகம் இன்று — நலமுடனே
தோற்றுவித்தீர் நன்றுமக்குத் தோள்கொடுப் போம்;
வென்று நாம்
வீற்றர சாள்வோம் விரைந்து!

முன்னைக் கழகங்கள் மொய்ம்பிழந்து துண்டாகிப்
பின்னர்த்தங் கொள்கைவிட்டுப் பீடிழந்து — இன்றிழிந்த
வாறில்லா தோங்கி வளர்ந்து கழகம்முன்
னேறிச் சிறக்க முகிழ்ந்து!

அண்ணாவைப் போல அணைத்து, நாம் தொண்டரினை
மண்ணிலே கட்சி வளர்த்துயர்வோம் — **எண்ணியுள**
செல்வர்கள் யாரும் செயல்பட மாட்டார்கள்
வல்லார்க்கு நாம்கொடுப்போம் வாய்ப்பு.

தமிழ்த்தாய் அளித்த தலைவன்நீ! அந்தோ
இமிழ்கடல் சூழுலகில் எங்கும் — தமிழர்
கொடுமைக்குள் ளாகிக் குருதிசிந்திக் கண்ணீர்
விடுகின்றார்! காக்க, உன் வீறு!

தன்னலம் விட்டுத் தமிழர் நலம்பேணி
வென்று நமதியக்கம் வேரூன்றி — நின்றிலங்க
வாழ்த்தி வரவேற்று வாயெடுத்துச் சூளுரைத்தோம்
தாழ்வைநீக் கத்தலைமை தாங்கு!

— ஈரோடு இரட்டைப் பாவலர்கள் **குமர நடவரச ஈவப்பனார், தமிழ்க்குமரனார்.**

0 அன்பீர், வணக்கம். யான், தாங்கள் கூட்டியிருந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாட்டின்கண் இரு நாட்களும் (7,8-11-81) இறுதி வரை கலந்து கொண்டேன். மாநாடு நன்கு சிறப்புற நடைபெற்றது. அனைவரும் உணர்ச்சி வயப்பட்டு உரை யாற்றினர். இவ்வுணர்ச்சி நம்மினம் விழித்தெழும் வரை ஒவ்வொருவர் உளத்திலும் இருந்து நேரிய வழியில் செயல் புரிந்தால் விரைவில் நம்மினம் உயர்வது திண்ணம்... உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் அமைத்து அதன்கண் பங்கேற்றுச் செயல்பட யான் விருப்ப முடையவனாக உள்ளேன். என்றும் நம்மினம் உலகின்கண் தலைதூக்கி நிற்க உங்களுடன் துணை நின்று ஆவன செய்ய விழை வுடையவனாக உள்ளேன் என்பதை இதன் வழித் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

—**ச. ந. ச. மார்த்தாண்டன்** அறி. இ.
தோட்டப்பாளையம் வேலூர்-4.

www.thamizham.net - Free E book No 7516

கொடி ஏற்றுவோம்!
நிலை மாற்றுவோம்!

உலகத் தமிழின முன்னேற்றம் — என
உரைக்கும் கொடி, இது! — ஏற்றுவோம்! — நம்
ஒருமை உணர்வினைப் போற்றுவோம்!
வினை ஆற்றுவோம்! நிலை மாற்றுவோம்!

விலகியே இருந்தோம், வேறுபட்டுத் தயங்கி!
வீழ்ச்சிகள் அடைந்தோம கூறுபட்டுத் தியங்கி!
மலைவுகள் கொண்டோம் மாறுபட்டு மயங்கி!
மற்றுய்வோம் இனிமேல் ஒன்றுபட்டே இயங்கி! (உலகத்)

ஆளுக்கோர் கொள்கை! ஆயிரம் போக்குகள்!
அடடா, ஓ! நமக்குள் எத்தனைத் தாக்குகள்!
வாளுக்குக் கூர்மையாய் வாய்த்த, நம் நாக்குகள்!
வாருங்கள், இனியில்லை வழிமாறும் போக்குகள்! (உலகத்)

முயற்சிக்கும் புரட்சிக்கும் முழுநிறச் சிவப்பு!
முடிவினில் சமமெனும் உள்வட்டம் வெளுப்பு!
அயர்ச்சிக்கும் மயற்சிக்கும் இனியில்லை, வேலை!
அனைத்துலகத் தமிழினமும் ஒன்றும், இந் நாளை! (உலகத்)

அரசியல் மலர்ச்சிதான் அனைவரின் நோக்கம்!
ஆனாலும் தமிழர்க்குள் ஏனிந்தத் தாக்கம்?
உரசிடும் காவுகள் களவுகள் ஒக்கம்!
உருப்பட வேண்டாமா? ஓரின ஆக்கம்? (உலகத்)

கருத்துகள் விளரலாம், கிளைகளைப் போல!
காணுவோம் ஒற்றுமை அடிமரம் போல!
பெருத்தவோர் வீழ்ச்சி, பிளவுக ளாலே!
பிறப்பிலே ஓரினம் தமிழர், இந் நாளே! (உலகத்)

சாதிப் பிளவுகள் இனத்தையே சாய்த்தன!
சாய்க்கடை மதங்களும் போட்டியிட் டேய்த்தன!
மோதிப் பார்ப்பனப் பூசல்கள் மாய்த்தன!
முழுமையாய் இழக்குமுன் மாற்றங்கள் வாய்த்தன! (உலகத்)

வாருங்கள், தமிழரே! ஒன்றென ஆர்ப்போம்!
வழிவழி யாய்நமை அழித்தவை தூர்ப்போம்!
சேருங்கள் ஓரணி! எண்ணங்கள் வார்ப்போம்!
சிற்சிறி தேனுமிங் குள்ளொளி சேர்ப்போம்! (உலகத்)

www.thamizham.net - Free E book No 7516

உ. த. மு. க. கொடி ஏறியது!

உலகத் தமிழின விடுதலைக் கழக முன்னோடியும், தமிழீழ
விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் ஆகிய
நாவலர் **அ. அமிர்தலிங்கனர்**, உலகத் தமிழினம் ஒன்றுபட்டு
முன்னேறத் தொடங்கி விட்டதற்கு அடையாளமாக உ. த. மு. க.
கொடியை, இரண்டாம் நாள் மாநாட்டின் இறுதியில், ஏற்றி
வைக்கும் காட்சி! பாவலரேறு, ஏற்றப்பட்ட கொடி இனி
உலகமெலாம் பறந்து கொள்கை பரப்புமா என்று
கொடித்திறம கணித்து நிற்கிறார்!

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

www.thamizham.net - Free E book No 7516